உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 10 வெள்ளிக்கிழமை (26.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 365

# அமைச்சர்கள் எண்ணிக்கையை குறைக்க மகாநாயக்கர்கள் பிரதமரிடம் கோரிக்கை

## மக்களுக்கு நன்மை இல்லை எனச் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவம்பர் 26

அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீட மகாநாயக்கர்கள் பிரதமர் டி.எம்.ஜயரட்னவிடம் கூட்டாக வலியுறுத்தினர். நேற்று தங்களைச் சந்தித்த பிரதமரிடம் மகா நாயக்கர்கள் தமது கோரிக்கையை நேரில் தெரிவித்தனர். விகாரைகள் அமைப்பதை விட்டுவிட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் அவர்கள் கோரினர்.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது பிரதமராக டி.எம்.ஜயரட்ன மீண்டும் நியமிக்கப்பட்டார். இதை அடுத்து, நேற்றுமுன்தினம் மாலை கண்டி - ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார் பிரதமர். இதனைத் தொடர்ந்து அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீட மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசிபெற்றார்.

தம்மிடம் ஆசி பெற்ற பிரதமரிடம் மகாநாயக்கர்கள் நாட்டின் அரசியல் விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.

''மற்றவர்களுடன் போட்டியிட்டு நாடு (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் எண்ணிக்கை நேற்று 95 ஆக உயர்ந்தது

### நால்வர் புதிதாகப் பதவியேற்பு

கொழும்பு, நவ.26

அமைச்சர்களின் எண்ணிக்கை நேற்று மாலை வரை 95ஆக அதிகரித்துள்ளது. முன்னதாக இந்த எண்ணிக்கை 91 ஆக இருந்தது. ஒரு சிரேஷ்ட அமைச்சரும் மூன்று பிரதி அமைச்சர்களும் நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர். இதனை அடுத்தே அமைச்சரவையின் எண்ணிக்கை அதிகரித்தது.

மீள்குடியேற்ற அமைச்சராகவிருந்த மில்ரோய் பெர்னாண்டோ சமூக நலன்புரிக்கான சிரேஷ்ட அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். வெளிவிவகார பிரதி அமைச்சராக நியோமல் பெரேராவும் அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை (24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைச்சர் கிருஷ்ணா கொழும்பு வந்து சேர்ந்தார்

கொழும்பு, நவ.26

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, நான்குநாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று இலங்கை வந்தடைந்தார்.

மாலை 4.40 மணியளவில் கட்டுநாயக்கவை வந்தடைந்த அமைச்சர் கிருஷ்ணா தலைமையிலான குழுவில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் உட்பட 20 இற்கும் மேற்பட்டவர்கள் அடங்கி இருந்தனர்.

வெளிவிவகார அமைச்சில் இன்று முற்பகல் 11.15 மணிக்கு நடைபெறும் இந்திய - இலங்கை கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்துக்கு அவர் தலைமை தாங்க உள்ளார். இந்தக் கூட்டத்தை அடுத்து அமைச்சில் நடைபெறவுள்ள ஊடகவியலாளர் சந்திப்பிலும் கலந்துகொள்வார். வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸையும் அவர் இன்று சந்தித்துப் பேசுவார்.

வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடம்பெயர்ந்து நிரந்தர வீடுகள் இல்லாத மக்களுக்கு இந்திய நிதி உதவியின் (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய இந்தப் பட்ஜெட்டில் எதுவுமே இல்லை

### சபையில் விளக்கினார் சரவணபவன் எம்.பி.

கொழும்பு, நவ. 26

அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எமது மக்களின் அபிலாசைகளையோ அடிப்படைத் தேவைகளையோ ஒரு பகுதியேனும் நிறைவு செய்யும் வகையில் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுத் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பான மூன்றாவது நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கு நான் எமது மக்களின் சார்பில் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பாதுகாப்புக்கு அதிக நிதி**

இந்த வரவு செலவுத்திட்டத்தில் தேசியப் பாதுகாப்புக்கான நிதி வழமைபோல அதிகமாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. யுத்தகாலத்தில் ஏற்படும் அதிகரித்த செலவினங்களுக்கான அதிக நிதி ஒதுக்கப்படுவது ஏற்புடையது. யுத்தம் முடிவடைந்த பின்னர் மீண்டும் தேசிய பாதுகாப்புக்காக எதற்காக இந்தப் பெருந் தொகை என யாரும் கேள்விகளை எழுப்பலாம்.

யுத்தம் முடிந்துள்ள சூழலில் மீண்டும் பாதுகாப்புக்கு அதிக நிதி (02ஆம் பக்கம் பார்க்க)

## 20 வருடங்களின் பின் நாளை வலி வடக்கில் மீள் குடியமர்வு

### அமைச்சர் பஸில் ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம், நவ.26

20 வருடங்களின் பின்னர் வலி. வடக்கில் இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் நாளை சனிக்கிழமை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர உள்ளனர். இதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

இந்த வலி.வடக்கு மீள்குடியமர்வை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாளை காலை ஆரம்பித்து வைக்கின்றார். இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொள்கின்றார். (24ஆம் பக்கம் பார்க்க)

## உதயனின் வெள்ளி விழா உலா

27.11.2010 இல் மலரும்

உதயன் நாளிதழின் வெள்ளி விழாவை முன்னிட்டு உள்ளே...!

**வாசகர் நெஞ்சங்கள் பேசுகின்றன**

## நாளை புலிகளின் மாவீரர் நாள் அதற்காகச் செய்தி போடாதீர்கள்

### குடாநாட்டுப் பத்திரிகைகளுக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், நவ. 26

நாளை 27ஆம் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள். அதனையொட்டிச் செய்திகளை வெளியிட்டு யாழ்ப்பாண மக்களைக் குழப்ப வேண்டாம் என்று நேற்றிரவு யாழ்ப்பாணப் பத்திரிகைகள் மூன்றுக்கு அனாமதேய மிரட்டல் விடுக்கப்பட்டது.

நேற்றிரவு உதயன் அலுவலகத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பாதுகாப்பு ஊழியரிடம் இது தொடர்பான அநாமதேய மிரட்டல் கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்றனர்.

அதில், ''தமிழ் மக்கள் சந்தோசமாக வாழ்கின்றனர். இந்த நிலையைக் குழப்ப நீங்கள் முயற்சி எடுக்க வேண்டாம். சுயாதீனமாக மக்களுக்குச் செய்தி கொடுக்கும் நீங்கள், (24ஆம் பக்கம் பார்க்க)

## நீர் நிலைகளில் விழுந்து இருவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், நவ. 26

நீர் நிலைகளில் விழுந்து பாடசாலைச் சிறுமி உட்பட இருவர் நேற்று மரணமாகியுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் ஊர்காவற்றுறை, நாயன்மார்கட்டு ஆகிய பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

பாடசாலை முடிந்து வீடு திரும்பிய சிறுமி குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இத்தச் சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் ஊர்காவற்றுறையில் இடம்பெற்றுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த அரசு கடும் முயற்சி

### கரு ஜயசூரிய குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.26

''அனைத்து மாவட்டங்களிலும் இராணுவ முகாம்களை அமைப்பது, பொலிஸாருக்குப் பதிலாக விசேட அதிரடிப் படையினரை நியமிப்பது என்று அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அரசு இந்த நாட்டை இராணுவ ஆட்சிக்குள் கொண்டு செல்வதற்கு முயற்சி எடுப்பதாகத் தோன்றுகிறது'' - இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

யுத்தம் இல்லாத ஒரு சூழலிலும் கூட வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கொள்வனவு தொடர்பான கடனை அடைப்பதற்காக இவ்வாறு அதிக நிதி ஒதுக்கப்பட்டது என்றால் ஆயுதக் கொள்வனவு தொடர்பான விவரங்கள் (4 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கே.கே.எஸ் வீதியில் 'எல்வ்' மோதி பெண் ஒருவர் தலை நசுங்கிப் பலி



யாழ்ப்பாணம், நவ.26

யாழ்.நகரில் காங்கேசன் துறை வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் 'எல்வ்' வாகனத்தின் சில்லில் சிக்கி தலை நசுங்கிப் பலியானார்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த விபத்தில் வண்ணார் பண்ணை, முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த பத்திநாதன் யோகா (வயது-34) என்ற பெண்ணே பலியானவராவார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

வீட்டு வருமானத்துக்காக சுயதொழிலில் ஈடுபட்டுவந்த பிரஸ்தாபப் பெண், தொழில் நிமித்தம் காங்கேசந்துறை வீதி வழியாக சைக்கிளில் யாழ். நகர் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தார்.

அப்போது அந்த வீதியால் யாழ். நகரை நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கை மின் சார சபையின் 'எல்வ்' வாகனம் கே.கே.எஸ் வீதியில் பன்றிக் கோட்டுப்பிள்ளையார் கோவிலில் பிரஸ்தாபப் பெண்ணை முந்திச் செல்ல முற்பட்ட வேளை இந்த விபத்து இடம் பெற்றதாகக் கூறப்பட்டது.

வீதி விபத்து நடந்த இடத்துக்குச் சற்று நேரத்தில் வந்த யாழ். பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் விபத்துத்தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதுடன் அந்த வீதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலையும் சீர்செய்தனர். உயிரிழந்த பெண்ணின் சடலம் விசாரணைகளின் பின்னர் யாழ். போதனாவைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வாகனச் சாரதியைப் பொலிஸார் கைது செய்ததுடன் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர். (த-14)

# மாணவன் 'படோல்' உட்கொண்டமை பல்கலையில் மூவருக்கு கற்றல் தடை

யாழ்ப்பாணம், நவ.26

யாழ். பல்கலைக்கழகத்தில் சில தினங்களுக்கு முன்னர் பகிடிவதைச் சம்பவத்துடன் தொடர்புடைய சிரேஷ்ட மாணவர்கள் மூவருக்குப் பல்கலைக்கழகச் செயற்பாடுகளைத் தொடர இடைக்காலத் தடை விதிக்கபட்டுள்ளது.

சிரேஷ்ட மாணவர்களால் பகிடி வதைக்கு உட்படுத்தப்பட்ட கலைப் பீட முதலாம் வருட மாணவனான எஸ். ராஜேஸ் கண்ணா என்பவர் அளவுக்கு அதிகமான 'பனடோல்' வில்லைகளை உட்கொண்ட நிலையில் சில தின்ங்களுக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்க எனப் பல்கலைக்கழக நிர்வாகத்தால் இனங்காணப்பட்ட சிரேஷ்ட மாணவர்கள் மூவரே பல்கலைக்கழக கல்விச்செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது. (த-14)

# நல்லிணக்க ஆணைக்குழுமுன் மட்டு. அரச அதிபர் சாட்சியம்

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அமர்வில்

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தவை வருமாறு:

நான் 2007ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக் கடமையைப் பொறுப்பேற்றபோது பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

கிழக்கில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது திருகோணமலை மாவட்ட மக்கள் இடம் பெயர்ந்து வாகரையை நோக்கி வந்தார்கள்.

அதனையடுத்து வாகரை பிரதேசமக்களும்இடம்பெயர்ந்தனர்.

இந்த மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசாங்கத்தின் உதவியுடன் பூர்த்தி செய்தோம்.

கிழக்கில் யுத்தம் நிறைவடைந்ததனையடுத்து மூன்று மாதத்திற்குள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்ணி வெடிகளை அகற்றி அவர்களின் பழைய இடத்தில் துரிதமாக குடியேற்றினோம். யுத்தத்தினால்இடம்பெயர்ந்த மக்களில் 100 சதவீதமானோர் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டார்கள். எனினும் சிலர் நகரப் புறங்களில் காணிகளை கொள்வனவு செய்து அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

63,000 ஹெக்டேயரில் விவசாயம் மேற்கொள்ளப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் காரணமாக 25,000 ஹெக்டேயரிலேயே விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இன்று 58,000 ஹெக்டேயர் வரை விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயத்தின் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு 2 வீதத்திலிருந்து 5 வீதமாக உயர்வடைந்துள்ளது.

# சொற்பொழி

யாழ்ப்பாணம்,நவ 26

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில்,இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சின்மிய மிஷன் சுவாமி இராம கிருஸ்ணானந்தாவின் வெற்றிக்கு வழி என்ற தலைப்பலான சொற்பொழிவு நாளைமறுதினம் ஞாயிறு கிழமை மாலை 2.30 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள் ளது. ஆர்வலர்கள் அனைவரையும் இந்தச் சொற்பொழிவு நிகழ்வில் பங்கு பற்றுமாறு யாழ். நகர் மைய றோட்ட றக்ட் கழகத்தின் கேட்டுள்ளனர். (எ)

# அரச ஊழியர் சம்பள அதிகரிப் பின்மைக்கு நாணய நிதியத்தின் அறிவுரையே காரணம்

## ரணில் தெரிவிப்பு

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கக் கூடாதென்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையை ஏற்றே வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப் படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

யுத்தத்தில் பங்காற்றிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை வெலிக் கடைச் சிறையில் வைத்துள்ள அரசு, இராணுவத்தினரை வறுமைச் சிறையில் தள்ளியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிப்பிரமாண வைபத்துக்கு அதிக அளவில் நிதியைச் செலவிட்டனர். 11 லட்சம் மரங்களை நடுவதற்கும் ஏனைய செலவினங்களுக்கும் அதிக பணத்தை வீண்விரயமாக்கினார்கள். ஜனாதிபதி நியூ யோர்க் சென்றபோது அவருடன் 100 முதல் 200 வரையானோர் சென்று வந்தனர். இவ் வாறு பில்லியன் கணக்கான நிதி வீண் விரயமானது. அதற் கெல்லாம் இந்த அரசிடம் நிதி உள்ளது. ஆனால் அரச ஊழியர் களுக்குச் சம்பள உயர்வு வழங் குவதற்கு மட்டுமே அரசிடம் நிதி இல்லை. பணத்தைத் தேடிக் கொள்ள அரசால் முடியாவிட் டால் எவ்வாறு பெரிய நிறுவ னங்களுக்கு வரிச் சலுகை வழங்கப் போகின்றது?

ஜனவரி முதல் பாதுகாப்புப் படையினருக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக 600 ரூபா வழங்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது. விடு தலைப் புலிகளுக்கு எதிராக வன்னியில், கிழக்கில் இடம் பெற்ற போரில் பெரும் பங் காற்றி அவர்களைத் தோற்கடித் தவர்கள் பாதுகாப்புப் படையி னரே. அவர்களுக்கு 600 ரூபாவை வழங்கிவிட்டு விடுத லைப் புலிகள் அமைப்பிலிருந்த கருணாவுக்கு மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபாவை வாழ்வாதாரமாக வழங்குகின்றது அரசு.

இராணுவத்தில் இருந்ததைப் பார்க்கிலும் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்திருந்தால் நல்லது போல் தெரிகின்றது. கே.பியைப் பாருங்கள் அவருக்காக எவ்வளவு செலவிடுகின்றனர். கஷ்டத்தின் மத்தியில் போராடிய இராணு வத்தினருக்கு சம்பள உயர்வு இல்லை. அப்படியானால் கருணாவுக்கு, ஏனைய அமைச்சர்களுக்கு அதிக நிதியை ஒதுக்கு வது சரியா என்று கேட்கின்றேன்.

யுத்தம் நடைபெறுகின்றபோது அமைதியாக இருங்கள் - அமைதியாக இருங்கள் என அரச ஊழியர்களுக்குக் கூறிய அரசு தற்போது அவர்களின் வயிற்றில் அடித்துவிட்டது. சம்பள உயர்வு வழங்கப் படாமைக்கு என்ன காரணம்?

சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளப்போவதில்லை என சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துக்கு அடிபணிந்து அவர்களின் நிபந்தனைகளுக்கு அமையவே மஹிந்த ராஜபக்ஷவின் அரசு நடக்கின்றது - என்றார்.

(உ-சி)

# தமிழர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கப்படுவது யுத்தத்தைத் தடுப்பதற்காகவே என்பதை இலங்கைச் சூழலை மிகச் சரியாக புரிந்துகொண்டவர்களால் உணர்ந்துகொள்ளமுடியும்.

அது உண்மையில் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காகவே என்றே அர்த்தப்படும்.

எதிர்காலத்தைப் பாதுகாக்க என்று கூறுவது வடக்கு, கிழக்கில் நிரந்தரமாக இராணுவத்தை நிலைநிறுத்துவதற்கு நீங்கள் அடியெடுத்துக் கொடுக்கிறீர்கள். நிரந்தரமாக அவர்கள் நின்றால் எம்மால் சுதந்திரமாக செயற்படமுடியுமா? சற்றேனும் இதைப்பற்றி சிந்தித்தீர்களா? தமிழரிடம் வாக்குப்பெற்று தமிழனுக்குச் செய்யும் அநீதியல்லவா தமிழ் பேசும் மக்களுக்கே இது அநீதி!

இலங்கைத் தீவை முற்றுமுழுதாக இராணுவ மயமாக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக 2011ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் படையினரின் மூன்றாவது பிள்ளைக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது போர்மீது விருப்புக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு அதுசார்ந்த தொடர் பெருக்கத்தையும் நிகழ்த்தவல்லது. இதனால் எதிர்வரும் காலங்களில் படையினரின் குடும்ப உறுப்பினரின் எண்ணிக்கை மாத்திரமல்லாது படையில் இணைவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடும். இதுவே அரசின் கணிப்பு. தமது குடும்பத்தில் பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு அரசு வழங்கும் ஊக்குவிப்புத் தொகையைப் பெறுவதற்காகவே பல ஏழைச் சிங்கள தந்தையர்கள் இராணுவத்தில் இணையக்கூடும். தனது கட்டமைப்பைக் குலைய விடாது பேணுவதோடு முற்றுமுழுதான இராணுவ மயமாதலுக்குள் கொண்டுவருவதற்கும் அரசு இதன்மூலம் திட்டமிடுவதாகவே கருதமுடிகிறது - என்றார். (த)

(இந்த உரையின் முழு விவரம் நாளைய உதயனில்)

# நீர் நிலைகளில் விழுந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் பாடசாலையில் தரம் 3 இல் கல்விகற்று வந்த நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அருள்நேசன் அனோஜினி (வயது - 8) என்ற சிறுமியே குளத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

சிறுமி, பாடசாலை முடிந்து வீடு வந்து சேராமையால் பெற்றோர் பிள்ளையைத் தேடிச் சென்ற போது அருகில் உள்ள குளத்தில் பாதணிகள் புத்தகப்பை என்பன மிதக்கக் காணப்பட்டன இதனையடுத்து குளத்தில் தேடியபோது சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப் பட்டதையடுத்து அவர்கள் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். குளத்தின் அணைக் கட்டால் வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுமி தவறிகுளத்தில் விழுந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நாயன்மார் கட்டில் கிணற்றில் தண்ணீர் அள்ளியபோது வலிப்பு ஏற்பட்டதால் கிணற்றில் வீழுந்து பெண்ணொருவர் மரணமாகியுள்ளார் - சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் செம்மணி வீதி, நாயன்மார்கட்டைச் சேர்ந்த மாணிக்கவாசகர் ராதிகா (வயது - 36) என்ற பெண்ணே மரணமாகியுள்ளார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(த-10-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத முனையில் பெண்களிடம் 40 பவுண் தங்க நகை கொள்ளை

## சங்குவேலி, மானிப்பாய் பகுதிகளில் புதனிரவு சம்பவம்

சண்டிலிப்பாய், நவ.26

மழையைப் பயன்படுத்தி இரவு நேரம் மூன்று வீடுகளுக்கு கத்தி, வாள், கைத்துப்பாக்கி சகிதம் முகம்மூடி அணிந்து சென்ற கொள்ளையர்கள் ஆயுதங்களைக் காட்டி பெண்களைப் பயமுறுத்தி அவர்கள் அணிந்திருந்த சுமார் 40 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கணவர்மார் முன்னிலையில் இந்தத் துணிகரக் கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன.

இத் திகிலூட்டும் சம்பவம் புதன் இரவு மானிப்பாய், சுன்னாகம் ஆகிய பொலிஸ் பிரிவுகளிலுள்ள சங்குவேலி, மானிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களில் இடம்பெற்றுள்ளது. இடம்பெற்றது இரு மணி நேரத்துக்குள் ஆயுத முனையில் திட்டம்போட்டு நடைபெற்ற இத் துணிகர கொள்ளைகள் பற்றித் தெரியவருவது மானிப்பாய் ஆனந்தன் வீதியில் தோட்ட வெளியில் உள்ள சுகந்திரகுமார் என்பவரின் வீட்டிற்குள் இரவு 8 மணி போல் சமயலறைக் கதவைத்திறந்து கொண்டு கத்தி, வாள், கைத்துப்பாக்கியுடன் சென்ற நால்வர் கணவன் முன்னிலையில் மனைவியை ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி, அவர் அணிந்திருந்த 6பவுண் எடையுள்ள சங்கிலி, காப்பு, தோடு ஆகிய வற்றைப் பலாத்காரமாக அபகரித்துச் சென்றுள்ளார்கள்.

இதன் பின்னர் சங்கு வேலியிலுள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டிற்கு இரவு 8.30 போல் ஆயுதங்களுடன் சென்ற கொள்ளையர் கேற் பூட்டச் சென்ற கணவரைப் பயமுறுத்தி வீட்டின் உள்ளே அழைத்துச் சென்று மனைவியை மிரட்டி அவரும் தாயாரும் அணிந்திருந்த 10 பவுண் எடையுள்ள தங்கநகைகளை உருவிச் சென்றுள்ளார்கள்.

இதே வேளை உடுவில் தெற்கில் வசிக்கும் மணியம் என்பவர் வீட்டிறகு இரவு 10.30 மணியளவில் கேற்றுக்கு மேலால் ஏறி உள்ளே சென்ற இரு கொள்ளையர், கணினியில் வேலைசெய்து கொண்டிருந்த இரு பெண்களையும் பயமுறுத்தி அவர்கள் அணிந்திருந்த அட்டியல், காப்பு, சங்கிலி, தாயார் அணிந்திருந்த தாலிக்கொடி உட்பட சுமார் 25 பவுண் எடையுள்ள தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள். அட்டியல் அணிந்திருந்த ஒரு பெண்ணுக்கும் வெளிநாட்டில் இருந்து வந்த இளைஞர் ஒருவருக்கும் அன்று பகல் பதிவுத் திருமணம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இத் துணிகரக் கொள்ளைகள் பற்றி சுன்னாகம் பொலிஸிலும், மானிப்பாய் பொலிஸிலும் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (த-115)

# குடா நாட்டில் அடை மழை தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ.25

விடாது தொடர்ந்து பெய்த அடைமழை காரணமாக யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் நேற்று வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தொடக்கம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வரை கடும் மழை பெய்தது. பின்னர் நேற்றுப் பகலும், இரவும் மழை விட்டுவிட்டுப் பெய்தது. இதன் காரணமாக மக்களின் வாழ்விடங்கள், வீதிகள், விவசாய நிலங்கள் என் எங்கும் மழை வெள்ளம் தேங்கி நின்றது.

மாவட்டத்தின் தாழ்நிலப் பகுதிகள் மற்றும் கரையோரப் பகுதிகளில் வரும் மக்கள் வெள்ளத்தினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

புற நகர்ப் பகுதிகளான பொம்மைவெளி, காக்கைதீவு, வசந்தபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் மழைவெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பிரதான வீதிகளில் வெள்ளம் தேங்கிநின்றதன் காரணமாக பயணிகளும் வாகனச் சாரதிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது.

சில இடங்களில் வீதிகள் முற்றாக வெள்ளத்தில் மூள்கியமையால் போக்குவரத்துகளும் தடைப்பட்டன. (த-14)

## தண்ணீரால் வந்த கண்ணீர்...



பாதிப்பு: நேற்றுப் பெய்த மழையினால் பொம்மை வெளிப் பகுதியில் உள்ள வீடொன்று வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. (த-14)

# யுத்தக்குற்றவாளிக்கு ஐ.நாவில் பதவி டைம்ஸின் செய்திக்கு அரசு கண்டனம்

''யுத்தக் குற்றவாளிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பதவி'' என நியூயோர்க் 'டைம்ஸ்' செய்தி நிறுவனம் வெளியிட்டிருந்த கட்டுரைக்கு, இலங்கை அரசு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதியாக, சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தொடர்பில், நியூயோர்க் 'டைம்ஸ்' அண்மையில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இதுகுறித்து, நியூயோர்க் டைம்ஸ் ஆசிரியருக்கு, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதியான டாக்டர் பாலித கொஹணே கண்டன அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

'நியூயோர்க் டைம்ஸ்' வெளியிட்டுள்ள கட்டுரை உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கொண்டுள்ளதுடன், திரிபுபடுத்தப்பட்டுள்ளது. இது ஒரு பக்கச் சார்பாகவும் உள்ளது. பிழையான தகவல்களை வெளியிட வேண்டாம். திரிபுபடுத்தி வெளியிடப்பட்ட அறிக்கையை திருத்தி வெளியிடவும்.

உலகின் மிகக் கொடிய பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் முக்கிய பங்காற்றிய உயர் இராணுவ அதிகாரிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள இக்குற்றச்சாட்டு, பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

யுத்த காலத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என விடுதலைப் புலி ஆதரவாளர்கள் போலியான வகையில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். - என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (12-11)

# யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரியில் 12 புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.26

யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரியில் 12 புதிய பயிற்சிக் கற்கை நெறிகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வர்த்தமானியில் குறிப்பிட்ட பயிற்சி நெறிகளுக்கு மேலதிகமாக இக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டவுள்ளன என்று கல்லூரியின் மேலதிகப் பணிப்பாளர் வெ.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

புதிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் கல்லூரி அலுவலக நேரத்தில் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலதிக பணிப்பாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2011 ஆம் கல்வி ஆண்டுக்காக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை கடந்த 19ஆம் திகதி இலங்கை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் வெளியிட்டது.

அதில் நாட்டிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பவியல் கல்லூரிகளில் இடம்பெறவுள்ள பயிற்சி நெறிகள் தொடர்பான விடயங்கள் அடங்கியுள்ளன.

யாழ் தொழில் நுட்பவியல் கல்லூரியில் இடம் பெறவுள்ள பயிற்சி நெறிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக 12 புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மிக முக்கியமான பயிற்சி நெறிகளான அவற்றுக்கு மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் பயிற்சி நெறிகள் தொடர்பான விடயங்களை கல்லூரியுடன் நேரில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

அந்தப் புதிய பயிற்சி நெறிகளின் விபரம் வருமாறு:

எந்திரவியல் சார் படம் வரைதலுக்கான தேசிய சான்றிதழ் (முழுநேரம்), தொழில் நுட்பவியல் தேசிய சான்றிதழ் பயிற்சி நெறிகளுக்கான (பகுதி நேரம்) - குடிசார் எந்திரவியல், மின்னியல், பொறியியல், கணியவியல் ஆகிய பயிற்சி நெறிகளும், எந்திரவியல் சார் கைப்பணியாளர் பயிற்சிக்கான தேசிய சான்றிதழுக்கான முழுநேரப் பயிற்சி நெறிகளான மின்னியல், இலத்திரனியல், நீர் குழாய் பொருத்துதல், ஆகியனவும், முழுநேரம் மற்றும் பகுதி நேரத்துக்கான கணக்கீட்டு தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பயிற்சி நெறி, முழு நேர மற்றும் பகுதி நேரங்களுக்கான சுருக்கெழுத்து தட்டெழுத்து மற்றும் கணினி மூலமான தேசிய சான்றிதழ் பயிற்சி நெறி, தேசிய தராதரப் பத்திர ஆங்கில பாடம் முழுநேரம், பகுதிநேரம் என்பனவாகும். (1111)

# புதிய வாக்காளர் இடாப்பு டிசெம்பரில் மக்கள் பார்வைக்கு

கொழும்பு,நவ.26

2010 ஆம் ஆண்டில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள வாக்காளர் இடாப்புக்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவிக்கிறது.

மேலும் தபாலகங்கள்,கிராம சேவையாளர் அலுவலங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இப்பெயர்ப்பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்பட வுள்ளதாகவும் அவை சம்பந்தமான ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அவற்றைத் தெரிவிப்பதற்கு டிசம்பர் முதலாம் திகதி முதல் ஒரு மாதகால அவகாசம் வழங்கப்படு மெனவும் தேர்தல் செயலக அதிகாரியொருவர் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் விளக்கமளிக்கையில் வாக்களிக்க தகுதி பெற் றுள்ள வாக்காளர்களின் பெயர்களில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாக அப்பட்டியல்களில் தமது பெயர்கள் இடம்பெறா திருப்பது சம்பந்தமாக எதிர்ப் புக்களை முன் வைக்க இயலாது. மேற் குறிப்பிட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்படும் படிவ மொன்றைப் பூரணப்படுத்தி அனுப்பி வைப்பதன் மூலம் அந்தத் தவறுகளைச் சரிப்படுத்திக் கொள்ள இயலும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அடுத்த ஆண்டு முதல் இடம் பெறும் தேர்தல்கள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல்கள் பயன் படுத்தப்படவுள்ளதாக அவர் கூறினார். (ஜ-22)

## தொழிலாளர் சங்கத்தின் மாநாடு நாளை

யாழ்ப்பாணம், நவ.26

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிப் பிரமாணத்தை ஒட்டி வடக்கு - தெற்கு தொழில் புரியும் மக்களின் ஒன்றிணைந்த மாநாடு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கை சுதந்திரத் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த மாநாட்டில் சங்கத்தின் பொதுச் செயலாளர் லெஸ்லி தேவேந்திர கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

தொழில் புரியும் மக்களின் சகோதரத்துவத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டதாகவும், இதில் சகலரையும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (த-26)

# ஜீ.சி.ஈ (சாதாரண) பரீட்சைக்கு வடக்கில் 295 நிலையங்கள் அமையும்

யாழ்ப்பாணம், நவ.26

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு வடமாகாணத்தில் 295 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2010 ற்கான ஜீ.சி.ஈ சதாரண தரப்பரீட்சைகள் அடுத்த மாதம் 13ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் இலங்கை முழுவதும் 5 லட்சத்து 8ஆயிரத்து 416 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதில் 3 லட்சத்து 94 ஆயிரத்து 603 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 813 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

வடமாகாணத்தில் 295 பிரதான பரீட்சை நிலையங்களும், 79 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. இலங்கை முழுவதும் 3ஆயிரத்து [illegible] பரீட்சை நிலையங்களும் [illegible] அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## கணபதிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா
(B.A. Dip. in Edu. S.L.T.S - I)

**சேவைக் காலம்**
கிளி/ கிளிநொச்சி ம.வி.
16.10.78 - 31.12.83
கோப்பாய் அரசினர் பயிற்சிக் கல்லூரி
01.01.84 - 31.12.85
கிளி/ கிளிநொச்சி ம.வி.
01.01.86 - 14.05.87
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
15.05.87 - 02.03.2009
யா/இடைக்காடு ம.வி. 03.03.2009 - 26.11.2010

எமது பாடசாலையில் கடந்த காலத்தில் பிரதி அதிபராக இருந்து இன்று ஓய்வுபெறும் க.ஸ்ரீஸ்கந்தராசா அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் கழகம்,
யா/அச்சுவேலி
மத்திய கல்லூரி.

(106533)


# SPECIAL AIR FARES

| | |
|---|---|
| COLOMBO/ LONDON / COLOMBO | 79000.00 |
| COLOMBO/ DOHA | 24500.00 |
| COLOMBO/TORONTO | 76000.00 |
| COLOMBO/SINGAPORE/COLOMBO | 27500.00 |
| COLOMBO/TIRUCHIRAPALLY/COLOMBO | 13300.00 |
| COLOMBO/ CHENNAI/COLOMBO | 13500.00 |
| COLOMBO/ KULALUMPUR/COLOMBO | 26900.00 |
| COLOMBO/ ROME/COLOMBO | 80000.00 |

*ALL TAXES INCLUDES*
*CREDIT CARDS ACCEPTED*
*ABOVE FARES ARE SUBJECT TO SEAT AVAILABILITY*

**FUTHER DETAILS PLEASE CONTACT**
METRO TRAVELS & TOURS (PVT) LTD
No- 62/33, Stanley Link Road, Jaffna.
TEL:0215673555, 5673666 FAX 021 2220404


## நாட்டில் இராணுவ ஆட்சியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

எல்லா மாவட்டங்களிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு அவை தடுப்பு முகாம்களாகப் பாவிக்கப்படுகின்றன. பொலிஸாருக்குப் பதிலாக விசேட அதிரடிப் படையினர் நியமிக்கப்படுகின்றனர். இவை அனைத்தையும் பார்க்கும்போது இந்த அரசு இராணுவமயமாக்கலை நோக்கிச் செல்கிறது என்று தோன்றுகிறது.

அரசுக்கு எதிராகக் கருத்துக் கூறினால், சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாகச் சுவரொட்டிகள் ஒட்டினால் இராஜ துரோகம் என அரசு கூறுகிறது. அரசுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் ஊடகங்கள் மிரட்டப்படுகின்றன.

வாழ்க்கைச் செலவினம் இன்னும் குறைக்கப்படவில்லை. அதிகமான மக்கள் மூன்று வேளைக்குப் பதிலாக ஒரு வேளை அல்லது இரண்டு வேளைகள் தான் சாப்பிடுகின்றனர்.

அதிகமான தங்க நகைகள் அடகுவைக்கப்பட்ட ஆண்டாக 2010 ஆம் ஆண்டு உள்ளது என்று வங்கிகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் அரசின் வீண் விரயத்தைப் பார்க்கும்போது எமக்குக் கவலையாக உள்ளது.

தேர்தல் மேடைகளில் அரசால் இந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அவ்வாறே உள்ளன. சம்பள அதிகரிப்பு வழங்கப்படாததால் அரச ஊழியர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். - என்றார்.

(உ-சி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தியாகராஜக்குருக்கள் ருக்குமணி அம்மா

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ருக்குமணி அம்மா நேற்று (25.11.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.11.2010) வெள்ளிக்கிழமை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
கற்பகப்பிள்ளையார்கோயில் வீதி,
தொ.பே.: 0212225440

தகவல்:
தி.கிருஸ்ணமூர்த்திக்குருக்கள்
(மகன்).

## சிறிதரன் தணீஸ்வரன்



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிறிதரன் தணீஸ்வரன் நேற்று (25.11.2010) வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் சிறிதரன் - தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மகனும், நவரத்தினம் - இரத்தினம், சின்னத்தம்பி - புதினாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் பேரனும், தாரணி, ராகுலன், திருமகள், நவகீர்த்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நவமணி - கந்தசாமி, நகுலேஸ்வரி - முரளி, சுப்பிரமணியம், சிறிபாஸ்கரன் ஆகியோரின் அன்பு பெறாமகனும், ஐங்கரன் - ரஞ்சினி, மனோரஞ்சிதமலர் - கிருபாகரன் ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறவுள்ளன.

புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
தொலைபேசி - இல: 0776648235 (106516)

தகவல்:
குடும்பத்தினர்.





தனது இரண்டாவது கிளையை இலக்கம் 770, 772 தட்டா தெரு சந்தி, கே.கே.எஸ் வீதி எனும் முகவரியில் ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சிறுவர் சிறுமிகள், ஆண்கள், பெண்கள் என அனைவரது தெரிவுகளும் இங்கு உள்ளன. எமது நிறுவனத்தில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்



ரகங்கள் பலவிதம் தரத்தில் முதலிடம்

| | |
|---|---|
| ★ 1m ப்பபிளின் | 85/= |
| ★ 1m கொட்டன்பிறின் சைனா துணி 44" | 150/= |
| ★ 1m ரெரீன் துணி | 250/= |
| ★ 1m பட்டு குயின் துணி | 185/= |
| ★ ரெடிமேற் சாறி பிளவுஸ் | 150/= |
| ★ பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபி துணி | 650/= |

மற்றும் இந்தியன் திருமண பட்டு சாறிகள், இந்தியன் பன்சி சாறிகள், ரெடிமேற் பஞ்சாபிகள், பஞ்சாபி துணிகள், பாங்கொங் ஸ் கேட் பிளவுஸ் இன்னும், இன்னும் ஏராளமான தெரிவுகள் புத்தம் புதிய தெரிவில் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

- எங்களிடம் பாடசாலைகளுக்கு தேவையான ஒரேமாதிரியான எத்தனை சாறிகளும் குறித்த நேரத்தில் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளலாம்.
- எங்களிடம் பஞ்சாபிகள், சாறி பிளவுஸ்கள், உங்களின் விருப்பத்திற்கு ஏற்றவகையில் குறித்தநேரத்தில் தைத்துத் தரப்படும்.
- வாடிக்கையாளர் நலன் கருதி அதிகபட்ச நேரம்
- இந்தியாவிலிருந்து நேரடியான இறக்குமதியும் நியாயமான விலையும்.

வாடிக்கையாளர்,
சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின்வீதி),
சிவன் கோயில் அருகாமை,
யாழ்ப்பாணம். தொ.பே.: 0212221723

தொடர்புகளுக்கு எமது முகவரி
கிளை நிறுவனம்
நல்லூர் சரவணா ரெக்ஸ்
770, 772, தட்டாதெரு சந்தி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212220421


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் சிவகுரு பொன்னம்பலம்
(ஓய்வூதியர் S.L.T.S - I)



மலர்வு 22 - 06 - 1943
உதிர்வு: 28 - 10 - 2010

அப்பா என்ற சொல்லுக்கு இலக்கணமாய்
அன்புடன் அரவணைத்து எம் வாழ்வில்
வசந்தத்தைக் காட்டி மகிழ்வுடன்
சென்றனையோ?
உங்கள் நினைவில் எந்நாளும் நாங்கள்

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (27.11.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரபிள்ளைகள்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லையா கனகலிங்கம்
[உரிமையாளர், சிங்கப்பூர் போசனசாலை யாழ்ப்பாணம்]

**தோற்றம்** 10.06.1945 **மறைவு** 17.11.2008

திதி: அபரபட்ஷ பஞ்சமி

ஆதரவாய் எமக்கிருந்தீர்
அன்போடு எமைக்காத்து நின்றீர்
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
ஆறாதே எங்கள் துயர்
ஆண்டவனின் பாதமதில்
என்றும்அமைதி பெற்றிடுவீர்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்..
குடும்பத்தினர்.

அரசடி அம்மன் கோயில் ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.
(ஜி/572568)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தீர்வுத் திட்டத்தை மனதில் வைத்திருப்பதால் என்ன பயன் வரப்போகிறது?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது இரண்டாவது பதவிக் காலத்தைக் கடந்த 19 ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக சத்தியப் பிரமாணம் செய்து ஆரம்பித்துவிட்ட அதேவேளை, அண்மையில் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்துக்கும் வருகை தந்து அந்த வாக்குறுதியையும் நிறைவேற்றியுள்ளார்.

ஜனாதிபதி நிதியமைச்சராகவும் இருப்பதனால் வரவு - செலவுத் திட்டத்தையும் சபையில் முறையாகச் சமர்ப்பித்து நிறைவேற்றினார்.

இந்த வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் தற்பொழுது நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. பல்வேறு விதமான நிறை, குறைகள் சபையில் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டு அலசப்படுகின்றன.

வரவு - செலவுத் திட்ட உரையின்போதும் சரி, வேறு அரசியல் கூட்டங்களிலும் சரி ஜனாதிபதி ஒரு விடயத்தை உறுதிபட வெளியிடுவதில் அக்கறைகாட்டி வருகின்றார்.

நாட்டில் அமைதியை நிலைநாட்டி விட்டோம். இனி அபிவிருத்தியே எமது நோக்கம். அதனையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பது அவரது வாய்ப்பாடாக இருந்து வருகின்றது.

போர் ஓய்ந்துவிட்டது என்னவோ உண்மைதான். அபிவிருத்திக்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த நாட்டை ஏறத்தாழ 60 வருட காலமாக ஆட்டிப் படைத்து வரும் தேசியப் பிரச்சினைக்கு - இனப்பிரச்சினை - தீர்வுக்கான எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாடும் முன்வைக்கப்பட்டதாக - முன்னெடுக்கப்பட்டதாகக் கூறுவததற்கில்லை.

நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து படிப் படியாக இப்பிரச்சினை விசாலித்து வந்துள்ளதேயன்றித் தீர்ந்தபாடில்லை.

நடந்து முடிந்த கொடிய யுத்தத்திற்கான அடிப்படைக் காரணியே இந்த தேசிய பிரச்சினைதான் என்பதை எவரும் மறந்துவிடலாகாது. போர் இடையில் முளைத்த ஒன்றே அன்றி அதுவே ஆரம்பமன்று. எனவே போரை முடித்துவிட்டதால் தேசியப் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது என்று கொள்வது பொருந்தாது. ஆக, தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கண்டால் மாத்திரமே அபிவிருத்தியை நோக்கி இலகுவாக நடைபோட முடியும். அபிவிருத்தி என்பது ஒரு பிரிவு மக்களை மட்டும் மையப்படுத்தியதாக இருக்க முடியாது. இதனை ஜனாதிபதியும் வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் அபிவிருத்தியும், அமைதியும் இன்றி ஜனநாயகம் தழைக்க முடியாது என்பது அவரது சித்தாந்தம்.

இந்து பத்திரிகையின் ஆசிரியர் என்.ராமுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் இந்த விடயத்தை ஜனாதிபதி விரிவாக விளக்கியிருக்கிறார்.

உண்மையில் அவரிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று இருக்கின்றது. இதை அந்தப் பேட்டியில் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, தமது மனதில் உள்ள தீர்வை வெளியிடவில்லை. அந்தத் தீர்வு சம்பந்தப்பட்ட மக்களுக்கு ஏற்புடையதாக இல்லாமல் போகலாம் என்பது அவரது தயக்கம். என்றாலும் தீர்வு ஒன்று தனது மனதில் இருக்கிறது என்று வெளிப்படையாக அவர் கூறியிருப்பதை வரவேற்க வேண்டும். ஏனென்றால் இனிமேல்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்போடும், ஏனைய தமிழர் அமைப்புகளோடும் ஜனாதிபதி தேசியப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முதல் தடவையாக ஒன்றுபட்ட இலங்கை நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கான தீர்வுப் பொதியொன்றை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள் என்பதை ஆசிரியர் ராம் சுட்டிக் காட்டியபோது, ஜனாதிபதி அந்தப் பேட்டியில் அதனைத் தாம் உற்சாகமாக வரவேற்றிருப்பதாகத் தெரிகின்றது.

இது ஒரு நல்ல முன்னேற்றம், முன்னர் அவர்கள் தனிநாடு ஒன்றைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இனிமேல் நாம் அவர்களிடம் பேச்சுகளை ஆரம்பிக்கலாம் என்றவாறு ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் மட்டுமன்றி, இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவுடனும் இந்த விடயத்தை ஆராய்வார் என்று எதிர்பார்க்கலாம்.

இவ்வாறு பல தரப்புகளோடும் ஆலோசனைகளை நடத்தும்போது ஜனாதிபதி தமது மனதில் உள்ள தீர்வுத் திட்டத்தை அவர்களிடம் வெளியிட்டு அவர்களின் கருத்தை அறிய முற்படலாம். அதில் மேம்பாடான மாற்றங்களைச் செய்து கொள்ளலாம்.

எதுவானாலும் போரின் முடிவையடுத்து இந்த நாட்டில் தேசிய நல்லிணக்கம் ஒன்று உருவாவதற்கான சாத்தியக் கூறுகள் தொலை தூரத்திலேயே தெரிவதுபோல் தோன்றுகின்றது. எல்லாம் ஜனாதிபதியின் கையிலேயே தங்கியுள்ளது. நாட்டுக்கு நல்லதொரு விடிவினை எதிர்வரும் காலம் ஏற்படுத்துமானால், ஜனாதிபதி நினைப்பது போல் ஆசியாவின் "ஆச்சரிய தேசமாக" இலங்கை பரிணமிக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

ஆனால் வெறும் வேதாந்தம் எந்த நல்ல முடிவையும் கொண்டுவராது. அவருக்குக் கிடைத்துள்ள அதீத அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்கள், தாமும் இந்த நாட்டின் பிரஜைகள் என்று மனதார உணரத்தக்க அரசியல் மாற்றங்களைக் கொண்டுவர இயலும். அவற்றை ஜனாதிபதி ஏன் நாடக்கூடாது? மனம் இருந்தால் இடம் உண்டு. மஹிந்த ராஜபக்ஷவின் மனதில் உள்ள தீர்வுத் திட்டம் அதனை நாடியதாக இருக்குமா, என்ன? பொறுத்திருந்து பார்ப்போமே!

# சூழல் பாதுகாப்பைக் கவனிக்கப் பொலிஸ் நியமனம்; யாழ்.மாநகர சபைக்கு ஐவர் அடங்கிய குழு

யாழ்ப்பாணம், நவ.26

சூழல் பாதுகாப்பு பொலிஸ் நியமனத்தின் கீழ் யாழ்.மாநகர சபைக்கு உதவிப் பொலிஸ் அதிகாரி உட்பட ஐந்துபேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதில் பாதுகாப்பு அமைச்சின் கவனம் என்ற ஜனாதிபதியின் பணிப்பின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நடவடிக்கையின் கீழ் சூழல் பாதுகாப்புக்கான இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளுராட்சி சபைகள் அனைத்துக்கும் இந்தக் கட்டமைப்பு பொருந்தும்.

ஒவ்வொரு உள்ளுராட்சிச் சபைகளினதும் சூழல் பாதுகாப்புக்கென பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

அவர்கள் உள்ளுராட்சி சபை உறுப்பினர்கள், அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சூழல் சுத்திகரிப்பு பணிகளைப் பூரணமாக நிறைவேற்ற உதவியும் ஒத்துழைப்பும் வழங்குவார்கள்.

இதற்கிணங்க யாழ்.மாநகர சபை சூழல் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 12ஆம் திகதி யாழ்.மாநகர சபையில் நடைபெற்றது. இதில் யாழ். மாநகர சபை முதல்வர், ஆணையாளர், சுகாதாரக் குழுத் தலைவர் உட்பட மாநகர சபை உறுப்பினர்கள், சுகாதாரப் பிரிவு பணிப்பாளர், அலுவலகப் பிரதிநிதிகள், சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் சுத்தம் பேணல் செயற்பாடுகளை உள்ளடக்கிய மாநகர சபையின் பொது வேலைத்திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி நல்லூர் உப பணிமனை, அரியாலை உப பணிமனை, கொழும்புத்துறை - பாஷையூர் உப பணிமனை, குருநகர் உப பணிமனை, பசார் உப பணிமனை,நாவாந்துறை உப பணிமனை, வண்ணார் பண்ணை உப பணிமனைகளுக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பைக் கண்காணிக்கும் பொறுப்பதிகாரிகளாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் உள்ளார்.

நல்லூர், அரியாலைப் பகுதிகளுக்கான சூழல் பாதுகாப்புப் பொலிஸ் அதிகாரியாக டபிள்யூ.ஏ.ஆர். வீரசிங்கவும், கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் 4, 13ஆம் வட்டார உப பணிமனைகளுக்கு சூரியகுமாரும், குருநகர் 2,3,5 ஆம் வட்டாரம், பசார் 1, 18ஆம் வட்டாரப் பணிமனைகளுக்கு திசநாயக்கவும், பசார் வலயம் 2 இற்கும், நாவாந்துறை உப பணிமனைக்கும் காமினியும், வண்ணார்பண்ணை உப பணிமனைக்கு நவரட்ணவும் சூழல் பாதுகாப்புப் பொலிஸ் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-17)

## சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர் மதுவரி உத்தியோகத்தரிடம் சிக்கினார்

யாழ்ப்பாணம், நவ.26

சங்கானைப் பிரதேசத்தில் சட்டவிராத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் பிடிபட்டுள்ளார்.

நீண்ட நாள்களாகச் சட்டவிரோதமாக மது தயாரித்து விற்பனை செய்து வந்த நபர் சட்ட விரோத மதுபான உற்பத்திக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களை அதிகமாக வைத்திருந்தார்.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த தகவலை அடுத்து அவர்கள் நேரடியாக அவரைக் கையும் களவுமாகப் பிடித்துள்ளார்கள்.

இவரை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது நீதிமன்றம் இவருக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்டது. செலுத்தத் தவறின் மூன்றரை வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டது. (ம-313-311)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.26

நல்லூர் ஞானோதய வித்தியாலயப் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் தர்மஜீவன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் மற்றும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா ஆகியோரும் கலந்து கொள்வர். (201-319)

# நல்லிணக்க ஆணைக்குழு அமர்வு டிசெம்பர் மாதம் திருகோணமலையில்

கொழும்பு, நவ.26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு டிசம்பர் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

திருகோணமலை செல்லவுள்ள ஆணைக்குழு உறுப்பினர்கள் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் சாட்சியங்களை பதிவு செய்யவுள்ளனர். 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை மூதூர் பிரதேச செயலகத்தில் சாட்சியங்களை பதிவு செய்யவுள்ளது. அன்று மாலை சம்பூர் பிரதேசத்திற்கான விஜயத்தினை ஆணைக்குழு உறுப்பினர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை குச்சவெளி பிரதேச செயலகத்திலும் சாட்சிகளை பதிவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழரசுக் கட்சியின் செயற்குழுத் தெரிவுக் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளைக்கான செயற்குழுத் தெரிவுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு சுழிபுரம், பறாளாய் வீதியிலுள்ள நாவலர் சன சமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தின் போது செயற் குழுத் தெரிவு, புதிய அங்கத்தவர்களை இணைத்தல், இன்றைய அரசியல் நிலையில் கட்சியின் செயற்பாடுகள், உள்ளுராட்சித் தேர்தல் பற்றி ஆராய்தல் உள்ளிட்ட விடயங்கள் இடம் பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 11 | | 27.11.2010 சனிக்கிழமை |
| திதி: | : | சஷ்டி பி.ப.05.06 வரை |
| நட்சத்திரம் | : | அவிட்டம் பி.இ. 5.14 வரை |
| சுபநேரம் | : | 03.12 -04.42 வரை |
| ராகுகாலம் | : | 09.12 -10.42 வரை |

## பெறுதற்கரிய மானிடப் பிறவிக்கு ஆலயம் மிகவும் அவசியம்

இறைவன் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிரினங்களைப் படைத்து, இவ்வினைகள் முடியும் வரை காத்து, திரும்பவும் தனது திருவடியில் அழித்து அருளுகின்றான். இந்த உயிரினங்களில் ஆறறிவுள்ள மனிதப் பிறவி அரிதென்றும், கூன், குருடு, பேடு, செவிடு நீக்கிப் பிறந்த மனிதன் அதிலும் அரிதென்றும், ஞானமும் கல்வியும் பெற்ற மனிதன் அரிதிலும் அரிதென்றும் ஔவைப் பிராட்டியரர் கூறியதை நாம் அறிவோம். இந்த வகையில ஒருமையுடன் திருமலரடி நினைக்கின்ற மனிதனுக்கு ஆலயமும் அமுதமாகத் தித்திக்கின்றது.

ஆன்மீகக்கதிர்

எங்கும் வியாபித்திருக்கும் இறைவன், கருங்கல்லினாலோ ஐம்பொன்னினாலோ உருவமைக்கப்பட்டு, பிரதிட்டை செய்யப்பட்டு வேத முறைப்படி ஒழுங்காக பூசை நடைபெறுகின்ற ஆலயங்களில் எழுந்தருளி அருள்புரிவதை அறிகின்றோம். பசுவின் உடம் பெங்கும் பால் இருந்தாலும் அதன் முலையில் இருந்து பால் சுரக்கின்றது. அதுபோல இறைவன் எங்கும் வியாபித்திருந்தாலும் கோவில் என்னும் முலையில் இருந்து அருள் பொழிகின்றான்.

பிரார்த்த வினைகள் அனுபவிக்க மண்ணில் பிறந்த மனிதன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் வலையில் சிக்குண்டு ஓடி அலைகின்றான். பகுத்தறிவை விட்டு ஐம்புலன் வழி சென்று அல்லல்படும் மனிதனுக்கு ஆலயம் நல்வழி காட்டும்.

ஆகையால் மனிதன் தான் எடுத்த பிறவியின் பயனை அடைவதற்கும் நெறிப்பட்ட வாழ்வை அமைப்பதற்கும் உதவுவது ஆலயம் என்பது வெள்ளிடை மலை. எனவே மானுடப் பிறவியெடுத்த ஒவ்வொரு மனிதனும், தூய மனதுடன் ஆலயம் சென்று, இறைவனை மனதில் இருத்தி பூசித்தால் இறையருள் கிட்டும் என்பது திண்ணம். *நன்றி: ஞானச்சுடர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதோ!..... உங்களோடு நாம்...

சகல விதமான கட்டட நிர்மாண மற்றும் நிர்மாணத்துடன் தொடர்புபட்ட அனைத்து வேலைகளையும் அதற்கான சிறந்த தொழில்நுட்பவியலாளர்களினால் மிகவும் நேர்த்தியாகவும் திருப்தியாகவும் உரிய காலத்திலும் செய்து கொள்ள

**Graphic Design and Builder**

1. Building Construction
2. Building Planning
3. Council Drawings
4. BOQ
5. Estimates
6. Structural Designs


அனைத்திற்கும் உங்கள் நம்பிக்கைத் தெரிவு

**No. 26 B, Brown Road, Jaffna.**

(In front of Jaffna Technical College)

T.P. No. 0718474664


## காணவில்லை



இப்படத்தில் காணப்படும்

**விஜயகுமார் அன்ரன் ராஜ்குமார்**

(வயது - 26) என்பவர் 24.11.2010 அன்று சாரதி பயிற்சிப் பரீட்சையின் பெறுபேறு பார்க்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு:**

முருகையா ஜெலிசன் (அத்தான்-0779228756)

## 5ஆம் ஆண்டு நினைவுதினம்



மலர்வு 12.04.1953 உதிர்வு 21.11.2005

அமரர்

**இரத்தினசாமி செல்வநாதன்**

(செல்வம்)

திதி: 26.11.2010

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
ரூபகுமாரி செல்வநாதன் (மனைவி).
தொ.பே: 0033614144337
பிரான்ஸ்.

வி.எம்.றோட்,
பருத்தித்துறை.


## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான புறொயிலர் No - 1 கோழிக்குஞ்சுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க இருக்கின்றன. (Nelna Farm) மிகக் குறைந்த விலையில் நம்பிக்கையாகப் பெற்றிட நாட வேண்டிய இடம் இலங்கையின் தலைசிறந்த விநியோகஸ்தர்கள்

**(Mafa Farm House)**

தொடர்புகளுக்கு

0773657008, 0773760445.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
ஆகக் கூடிய சில்லறை விலை - 110/-
உடன் தொடர்புகொள்ளவும்.


## வேலைக்கு ஆள் தேவை

சேவாச்சிரமத்துக்கு பாதுகாப்புக்கும், வெளி வேலைக்கும் ஆள் ஒருவர் தேவை.
வேலை நேரம் மு.ப. 8 மணி - பி.ப. 2 மணி.
ஆன்மிக நாட்டமுள்ளவர் விரும்பத்தக்கது.
வயது - 40 வயது ஆண்.
முன்பு இங்கு பணிபுரிந்தவர்களின் விண்ணப்பம் ஏற்கப்பட மாட்டாது.
நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் வரை காத்திருக்கவும்.

**செயலாளர்,**
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி Town இற்கு அருகாமையில் தபாற்கந்தோர் வீதியில் [Post Office Rd] முகப்பாகக்கொண்ட 14 3/4 பரப்புக் காணி [14.75] விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: தொ.பே. 0112591720 (கொழும்பு) 021 222 7661 (யாழ்ப்பாணம்). தரகர் தேவையில்லை.


## பரிசளிப்பு விழா

வடமராட்சி, நவ. 26

பருத்தித்துறை தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பும் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அதிபர் கா. இராமஜெயம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.அ. நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-236)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 29.07.1967 தலைவன் தாளில் 06.12.2009

அமரர் **பத்மநாதன் வசந்தகுமார்** (கண்ணன்)

[கிளை முகாமையாளர், வேலணை ப.நோ.கூ. சங்கம்]

இன்ப வாழ்வில் இதயம் மகிழ
துன்ப சுவடே தெரியாமல்
தூய உள்ளத்துடன் வாழ்ந்தாயே
உமது உடல் தான் மறைந்தது
உருவம்மறையவில்லையே கண்ணா!
நெஞ்சைவிட்டு நீங்காமல் என்றும்
உள்ளத்தில் நிறைந்திருக்கின்றாய்- கண்ணா
இந்த நாளில் நினைவுகூர்ந்து உங்களது
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தாய், மனைவி, மக்கள், சகோதரர்கள்.

மண்கும்பான் மேற்கு.

## திருமதி சிவகெங்கை ஆனந்தகிருஷ்ணனின் முதலாவது மோட்ஷ பிரார்த்தனை



**திருமதி சிவகெங்கை ஆனந்தகிருஷ்ணன்**

- [இளைப்பாறிய உத்தியோகத்தர், அஞ்சல் தொலைத்தொடர்பு]

எனது மனைவி சிவகெங்கையின் முதலாவது மோட்ஷ பிரார்த்தனை நாளை (27.11.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இத்தருணம் இடம்பெறும் கூட்டுப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் அன்பாக கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்..

ஆனந்தகிருஷ்ணனும், பிள்ளைகளும்.

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், நவ. 26

உயரழுத்த மின் மார்க்கங்களில் திருத்த வேலைகள் இடம்பெற இருப்பதால் குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

இந்த இடங்களில் திருத்த வேலைகள் குறிப்பிட்ட நேரத்துக்கு முன் முடிவடைந்தால் மின் விநியோகம் விரைவாக வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-10)

## மரண அறிவித்தல்

**வல்லிபுரம் கதிரவேலு சுப்ரமணியம்** (காரைநகர்)

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும் கோவளத்தை வதிவிடமாகவும் தற்போது 29, 'வவசெற் பிளேஸ்', வெள்ளவத்தையில் வசித்தவருமான முன்னாள் பதுளை வர்த்தகர் வல்லிபுரம் கதிரவேலு சுப்ரமணியம் நேற்று (25.11.2010) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, வவசெற் பிளேஸ்,
வெள்ளவத்தை. 0112503299

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட நெற்களஞ்சிய விவரங்கள் கோரல்

வலி.வடக்கு, நவ.26

யுத்த காலங்களின் போது பாதிக்கப்பட்ட நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான களஞ்சியங்களின் விவரங்களை கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சுக் கோரியுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து யாழ். மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் காணப்பட்ட நெற் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான களஞ்சியங்களின் தற்போதைய நிலை தொடர்பான விவரங்கள் இவ்வாறு கோரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கோண்டாவிலில் 1045 மெற்றிக்தொன் நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியமும், சுன்னாகத்தில் தலா 1045 மெற்றிக்தொன் சந்தைப்படுத்தும் இரண்டு களஞ்சியங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனில் 1680 மெற்றிக்தொன் மற்றும் தலா 315 மெற்றிக்தொன் களஞ்சியப்படுத்தும் மூன்று களஞ்சியங்களுடன் நான்கு களஞ்சியங்களும், கிளிநொச்சியில் தலா 1045 மெற்றிக்தொன் களஞ்சியப்படுத்தும் மூன்று களஞ்சியங்களும், கண்டாவளைப் பகுதியில் தலா 1045 மெற்றிக்தொன் களஞ்சியப்படுத்தும் இரண்டு களஞ்சியங்களும் காணப்பட்டன.

பூநகரிப் பகுதியில் தலா 945 மெற்றிக்தொன் களஞ்சியப்படுத்தும் மூன்று களஞ்சியங்களும், 1045 மெற்றிக்தொன் களஞ்சியப்படுத்தும் ஒரு களஞ்சியமுகமாக நான்கு களஞ்சியங்களும் காணப்பட்டன.

தற்போது இவை யாவும் அழிந்து காணப்படுவதுடன் சில இடங்களில் உள்ள களஞ்சியங்களின் நிலங்கள் வேறு பயன்பாடுகளுக்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)

# வலிகாமம் வலய மாணவருக்கு இருநாள் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், நவ.26

இளைஞர்களுக்கான நாளை அமைப்பால் கல்வியில் சமவாய்ப்பு வழங்குதல் செயற்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்கிழமையும் இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

திங்களன்று ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும், செவ்வாயன்று கணிதம், தமிழ் மொழியும் இலக்கியமும் பாடங்களுக்கும் இப்பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளது.

இப் பட்டறையில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 11 மாணவர்களை ஆசிரியர்களின் பொறுப்புடன் பங்குபற்றுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-38-55)

# சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை வகுப்புகளை தரம் 9 வரை உயர்த்தக் கோரிக்கை

கோப்பாய், நவ.26

சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலையில் தரம் 9வரை மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பிரதேச பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பாடசாலையில் தரம் 8 வரையான வகுப்புகளில் சுமார் 210 வரையான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

8ஆம் வகுப்பிற்குப் பின்னர் பல மாணவர்கள் கல்வியை தொடராமல் இடை விலகி வருகின்றனர்.

இப்பாடசாலை அதிகஷ்டப் பிரதேச பாடசாலையாக யாழ்.வலயத்தில் காணப்படுகிறது. இப்பாடசாலைச் சூழலில் வசிக்கும் மக்களின் ஜீவனோபாயத் தொழிலாக கூலித் தொழில் காணப்படுகின்றது.

இப்பாடசாலைச் சூழலில் இருந்து ஏனைய பாடசாலைகள் 3 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலே உள்ளன.

இந்நிலையில் இப்பாட சாலையில் 8 வரையே உள்ளமையால் அடுத்த தரத்துக்கு கற்பதற்கு வேறுபாடசாலைகளுக்குச் செல்வதில் நெருக்கடி காணப்படுவதால் சில மணவர்கள் தரம் 8 உடனேயே தமது கற்றல் செயற்பாட்டை நிறுத்தி விடுகின்றனர்.

இதனால் இப்பாடசாலையில் தரம் 9 வரையான மாணவர்கள் கற்பதற்கு வழியேற்படுத்தித்தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வியாபாரத்துறையில் முன்னணியில் அச்சுவேலி ப.நோ.கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், நவ.26

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இதுவரை எட்டு கோப் சிற்றிகளை திறந்து யாழ். குடாநாட்டிலேயே முன்னணியில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சங்கத்தின் எட்டாவது கோப் சிற்றி விற்பனை நிலையம் கடந்த 22 ஆம் திகதி சிறுப்பிட்டி நவக்கிரி வீதி, சூரியோதயத்தில் மக்களின் வசதிகளுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

குடாநாட்டிலேயே வியாபார நடவடிக்கையிலும் சிறந்தோர் நிர்வாகக் கட்டமைப்பிலும் மேற்படி சங்கம் முன்னணியில் இருப்பதாகக் கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரைக்கும் இந்தச் சங்கம் எட்டு கோப் சிற்றிகளை அமைத்து வியாபார நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இதேவேளை, குடாநாட்டில் உள்ள அநேகமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வியாபார நடவடிக்கைகள் இன்றி இருக்கும் கோப் சிற்றி விற்பனை நிலையங்களை மூடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-26)

# பழைய பூங்கா வீதியும் 'காப்பெற்' வீதியாகுமா ?

யாழ்ப்பாணம் ,நவ.25

யாழ். பழைய பூங்கா வீதியையும் காபற் வீதியாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பழைய பூங்கா வீதியில் ஜெயப்பூர் நிறுவனம் அமைந்துள்ள சந்தியில் இருந்து கடற்கரை வரை செல்லும் வீதி வரைக்கும் இந்த காபெற் வீதி அமைக்கப்படவுள்ளது.

நகரில் தற்போது ஸ்ரான்லி வீதி காபெற் வீதியாக மாற்றப்பட்டு வருகின்ற அதேவேளை அடுத்து பழைய பூங்கா வீதியும் காபெற் வீதியாக அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (201-26)

## திறப்பு விழா.....



நன்மை: இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிதி உதவியுடன் காரைநகர் இலகடியில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுக்கிணற்றை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

காரைநகர் வடகிழக்கு கிராம சேவையாளர் இ.திருப்புகழூர்சிங்கம் கிணற்றை மக்கள் பாவனைக்கு கையளிக்கிறார். (ம-250)

# இளைஞர் குழுவின் அட்டகாசத்தால் நாராந்தனை மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், நவ.26

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கில் இளைஞர் குழு ஒன்று பொதுமக்கள் மீது அடிக்கடி தாக்குதல்களை நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்து அதிகாரிகள் அக்கறை செலுத்துவதில்லை என நாரந்தனைப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

12 இளைஞர்கள் கொண்ட குழு ஒன்றே இவ்வாறு அட்டகாசம் செய்வதாக மக்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள திருஇருதயமாதா கோயிலடியில் உள்ள கடையென்றின் முன்றலில் நிற்கும் இந்த இளைஞர் குழு மதுபோதையில் அந்தப் பகுதியில் செல்லும் மக்களை அடிப்பதுடன் மோட்டார் சைக்கிளில் மற்றும் சைக்கிள்களில் வந்து தட்டிவிட்டு குதூகலமாகச் சிரித்து மகிழ்கின்றனர்.

தினமும் இடம்பெறும் இதுபோன்ற செயல்களால் இந்தப் பகுதியில் உள்ள மக்கள் வீதியில் நடமாட அஞ்சுவதாகவும் உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து நிம்மதியாக தமது அலுவல்களைக் கவனிக்க உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர். (204-7)

# ஜும்மா பள்ளிவாசல் வீதி சேதம் பயணிப்போர் அசௌகரியம்



யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் பயணிப்போரும் பயணம் செய்யும் வாகனச் சாரதிகளும் பெரும் சிரமங்களுக் குள்ளாகி வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக ஊடக வள நிலைய மாணவர்கள் உட்பட பலபேர் இந்த வீதியை நாளாந்தம் பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்படி வீதி சேதம் அடைந்து காணப்படுவதுடன் இருபது வருடங்களுக்கும் மேலாக இந்த வீதி புனரமைப்புச் செய்வதற்கு எந்த வகையான நடவடிக்கையும் யாழ்ப்பாணம் மாநகர சபை மேற்கொள்ளாது அசமந்தப் போக்காக இருக்கிறது.

சேதமடைந்துள்ள இந்த வீதியில் தற்போது பெய்து வரும் மழையால் பல இடங்களிலும் வெள்ளமும் தேங்கிக் காணப்படுகின்றது.

அத்துடன் வீதியில் பல்வேறு வணிக நிறுவனங்களும் இயங்குகின்றன. கனரக வாகனங்களும் மேற்படி வீதியில் தரித்து நிற்பதினால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் போக்குவரத்துச் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (201-86)

# யாழ். மாவட்டத்தில் உள நலப் பிரச்சினையால் பத்து வீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்

## டாக்டர் சிவயோகன் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ். மாவட்டத்தில் இரண்டு வீதமானோர் உள நோயினாலும்,பத்து வீதமானோர் உள நலப்பிரச்சனைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என உள நல சிகிச்சை நிபுணர் டாக்டர் சிவயோகன் தெரிவித்துள்ளார்.

ஊடக வள நிலையத்தில் ஊடகப் பயிற்சியாளர்களுடன் ''மனநலமும் ஊடகமும்'' தொடர்பாக கடந்த திங்கட்கிழமை கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

உள நலப் பிரச்சினைகள் யாவும் உள நோய்கள் அல்ல. எமது தொழில் செயற்பாடுகளைப் பாதிக்கும் நடவடிக்கைகளுக்கு ஒருவர் உள்ளாகி இருந்தால் அதுவே அவர் உள நோய்க்கு உள்ளக்கப்பட்டமைக்கான அறிகுறிகளாகும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு ஆய்வினை மேற்கொண்ட போது வடக்கு,கிழக்கைத் தவிர்த்து இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் கடுமையான உள நோயால் தாக்கப்பட்டவர்கள் .இரண்டு வீதமானோர் மட்டுமே இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

மாறாக தமக்கு உள நோய் இருக்குமோ அதனை எவ்வாறு சென்று காட்டுவது என்று வெட்கம் அல்லது தமக்கு ஏற்படும் அவமானங்களைத் தவிர்ப்பதற்காக சிலர் சிகிச்சைகள் பெறாமல் மறைமுகமாக இருக்கின்றார்கள். இத்தகைய செயற்பாடுகள் மன வருத்தத்திற்கு உரியது.

ஆனால் தற்போது உள நோயைக் குணப்படுத்தக் கூடிய பல வகையான மருந்து வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு மருத்துவமனைகளை நாடி சிகிச்சை பெற்றால் முற்றாக உள நோயில் இருந்து எம்மை விடுவித்துக் கொள்ளலாம் - என்றார்.

இப்பயிற்சி நிகழ்வில் 50 இற்கும் மேற்பட்ட ஊடக மாணவர்கள், வளவாளர்கள் மற்றும் பயிற்சியை நடத்தும் லண்டன் பியோனா பார்ட்டன், ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர் தேவானந்த் ஆகியோர் கலந்துகொண்டனர் (ம-313-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டவர் நாவலர்பெருமான்

தமிழ் மக்கள் செய்த தவத்தின் பேறாக உதித்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான். 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஐந்தாம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தார். இவர் தமிழ் மக்களுக்குக் காலத்தினால் கிடைத்த கற்பகதரு மொழியும் மதமும் ஒரு பிறவிச் சொத்துக்கள். இவற்றுக்கு விலை பேசுவதற்கு நமக்கு எந்த உரித்தும் கிடைக்க மாட்டாது.

நாவலர் பெருமான் தோற்றம் பெற்ற காலத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் அந்நியர் ஆதிக்கத்திலே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். எப்படியாவது உண்டு உடுத்து வசதியாக வாழ்ந்தால் போதுமென்ற நினைவு ஒரு சிலருக்கு இருந்தது. அந்த காரிருள் சூழ்ந்த வேளையில் திரு அவதாரம் செய்தவரே நமது ஞானபானு நாவலர் பெருமான்.

நாவலர் பெருமான் தமது தமிழ்க் கல்வியைப் பன்னிரண்டாம் வயதுடன் முடித்துக்கொண்டு பீற்றார் பார் சிவல் துரை நடத்திய பாடசாலையில் ஆங்கிலம் கற்கச் சென்றார். (அப்பாடசாலையே இன்றைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி). ஆங்கிலம் கற்றுக் கொண்டிருக்கும் பொழுதே சிறிய வகுப்புப் பிள்ளைகளுக்கு ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார். பின் சிலகாலம்பார்சிவல் துரைக்குப் பண்டிதராக இருந்தார்.

நாவலர் பெருமான் உதித்த குடும்பம் பொருளாதார வளம் உடையதாக இருந்தமையால் பொருள்தேட வேண்டிய கல்வியையோ தொழிலையோ அவர் நாட வேண்டிய அவசியமிருக்கவில்லை. அவருடைய தேடல் யாவும் ஆன்மா ஈடேற்றம் குறித்ததாகவே இருந்தது. நாவலருடைய மதிநுட்பத்தையும் நேர்மைத் திறத்தினையும் கண்டறிந்த பார்சிவல் பாதிரியார் தங்கள் வேதநூலாகிய பைபிளை மொழிபெயர்ப்புச் செய்தார். இவரது மொழிபெயர்ப்பே சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவரது திறமையினாலே கவரப்பட்ட பாதிரியார் ஒரு சந்தர்ப்பத்தில் இவரை ''மமகுரு'' என அழைத்தாக வரலாறும் உண்டு.

பாதிரியாருடன் பதினான்கு வருடங்



கள் தொடர்பிருந்தும் நாவலர் பெருமானுக்குச் சைவசமயத்திலும் அதற்குக் கருவியாகிய தமிழ்மொழியிலே பற்று இருந்தது. சைவசமயப் பிள்ளைகள் கிறிஸ்தவ மதத்துக்கு மாறும் நிலையை எண்ணிக் கண்ணீர் வடித்தார்.

பண்டிதர் உத்தியோகத்தைப் பரித்தியாகம் செய்துவிட்டு இராப்பாடசாலை வைத்து நடத்தினார். சைவசமய மக்களின் விழிப்புக்காக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலில் அவரது பிரசங்கம் ஆரம்பமானது. வெள்ளிக்கிழமைகள் தோறும் பிரசங்கம் நடந்தது. அப்பொழுது நாவலர் பெருமானுக்கும் வயது இருபத்தைந்து முடிந்து இருபத்தாறு ஆரம்பமானது. சமயத்தை வளர்க்க வேண்டுமாயின் தமிழ் கல்வியையும் வளர்க்க வேண்டுமென எண்ணி 1848 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயருடன் ஒரு வித்தியாசாலை ஆரம்பமாகியது. தொடர்ந்து கோப்பாய், கொழும்புத்துறை, கந்தர் மடம், பருத்தித்துறை, மாதகல், இணுவில் போன்ற இடங்களில் சைவப்பாடசாலைகள் உருவாகின. பாடசாலைகளை உருவாக்கியதுடன் பல நூல்களையும் அச்சிட எண்ணி இந்தியா சென்று 1849 ஆம் ஆண்டு ஒரு அச்சுக்கூடம் ஒன்றை வாங்கிவந்தார். அந்தப் பிரயாணத்தின் பொழுது திருவாடுதுறை ஆதீனத்தில் செய்த பிரசங்கத்தை நோக்கிய ஆதீனமுதல்வர் இவருக்கு 'நாவலர்' பட்டத்தை வழங்கினார். அச்சுக்கூடம் வாங்கச் சென்றவர் ஆறுமுக நாவலராகத் திரும்பினார். இந்தியப் பிரயாணங்களின் பொழுது சிதம்பரத்தில் ஒரு சைவப் பிரகாச வித்தியாசாலையையும், அச்சு இயந்திரத்தையும் நிறுவினார்.

நாவலர் பெருமான் தமது முயற்சியினால் கற்றோரும் மற்றோரும் படித்து இன்புறும் பொருட்டுப் பெரிய புராணம் போன்ற செய்யுள் வடிவிலே இருந்த நூல்களை வசனவடிவிலே ஆக்கினார். சைவசமய நூல்களை அயராது பாடுபட்டு அச்சிட்டார். 1850 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம்

**பண்டிதை பொன்.பாக்கியம்**
**சுழிபுரம்**

திரும்பிய நாவலர் பெருமானுக்கு யாழ்ப்பாண மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர். நாவலர் பெருமானை ஐந்தாம் குரவர் எனக் கூறிப் பாராட்டினர். இதனை ஏற்றுக் கொள்ள இயலாத நாவலர் பெருமான் அன்பர்களுடன் கோபித்த வரலாறும் உண்டு.

சைவ சமயத்தை வளர்க்க வேண்டும் என்னும் நோக்கினால் அவரால் பால பாடங்கள், சைவ வினா விடைகள் இன்னும் பல நூல்கள் அச்சிடப்பட்டு வெளி

**ஆறுமுக நாவலரின் குருபூசை தினம் எதிர்வரும் 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை ஆகும். இதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

யிடப்பட்டன. மொழியையும், சமயத்தையும் அழிந்து போகாமல் பாதுகாக்க வேண்டும் என்னும் நோக்கினால் பன்முகப்படுத்தப்பட்ட ஆக்கபூர்வமான வேலைகளையும் ஓடியாடிச் செய்தார். வண்ணார் பண்ணைச் சிவன்கோவிலில் ஆரம்பிக்கப்பட்ட அவரது பிரசங்கம் வண்ணார் பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் முடிவுற்றது. 05.11.1879 வெள்ளிக்கிழமை நாவலர் பெருமான் தனது 56ஆவது வயதில் நடராஜப் பெருமானின் குஞ்சிதபாத நிழலை அடைந்தார்.

தமிழ்மொழியின் மீது சைவசமயத்தின் மீதும் கொண்ட பற்றின் காரணமாகத் தமது இம்மைப் பயன்களை எல்லாம் துறந்த நாவலர் பெருமானுக்கு நாம் ஒரு சிலை அல்ல ஓராயிரம் சிலை அமைக்க வேண்டும்.

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்று நாவலர் காவியப் பாடசாலையில் கற்றுத் தேறிய பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை தமது பேச்சிலும் எழுத்திலும் கூறினார். அது நாவலர் பெருமானின் கலாசாரம் எனக் கூறினாலும் மிகையன்று. இன்று தோற்றம் பெற்றுள்ள சைவப் பாடசாலைகளும், சைவ ஆசிரியர்களும், சைவ ஆசார சீலர்களும், பௌராணிகர்களும் நாவலர் பெருமானின் வாரிசுகளேயாவர். நாவலர் பெருமானை மீண்டும் வாரீர் என அழைப்பதற்கு ஒரு நா அல்ல. ஓராயிரம் நா வேண்டும் என்பதை நாம் உணர்ந்து, என்றும் அவருக்கு நன்றியுடைவர்களாக விளங்கி, எங்கள் சைவசமயத்தைப் போற்றி வழிபட்டுப் பேணிக் கொள்ள வேண்டும்.

*இந்தச் சரிரீரம் எமக்குக் கிடைத்தது நாம்கடவுளைவணங்கிமுத்திபின்டம்பெறும் பெருட்டேயாம் - நாவலர் பெருமான்.*

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை




*வாசகர்களே !*
*நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப்பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலா பலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலாபலன்களை வழங்கவுள்ளார்*

தகுதியை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமுள்ள மிதுனராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு பத்தாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். ''பத்தில் குரு பதவிக்கு இடர் என்று ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இருப்பினும் உங்கள் ராசியான மிதுன சந்திரனுக்குப் பக்கத்தில் குரு அமர்ந்தது, குருசந்திர யோக பலனைத் தருகிறது. ஒருவரின் ஜாதக, கிரக கோட்சார ரீதியாக சிரமபலன் நடந்தாலும், குருசந்திர யோகம் அதை மாற்றி நற்பலனை வழங்கும். குருபகவானின் அமர்வு அனுகூலக் குறைவாக இருந்தாலும், அவர் தனது 5, 7, 9 ஆகிய பார்வையால் முறையே ராசிக்கு இரண்டாம் இடமான தனம், குடும்பம், நான்காம் இடமான வீடு, வாகனம், ஆறாம் இடமான பணி, துன்பம் ஆகிய இடங்களைப் பார்க்கிறார். உங்கள் பணி மற்றும் செயல்பாடுகளில் மிகுந்த கவனமாக இருந்தால் மட்டுமே கடந்த கால நிலையைத் தக்க வைக்க முடியும். பணவரவுக்குரிய வாய்ப்புகள் பல வந்தாலும், தடங்கல் காரணமாக தட்டுப்பாடு இருக்கத்தான் செய்யும். உங்கள் சொல்லுக்கும் செயலுக்கும் சமூகத்தில் மரியாதை கிடைக்கும். அர்த்தாஷ்டம சனியின் கடுமையான சோதனையை அனுபவித்து வரும் உங்களுக்கு, குருவின் ஏழாம் பார்வை வாகன பயணத்தில் நல்ல பாதுகாப்பைத் தரும். தாய்வழி உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு சரியாகும். வீட்டில் சில அத்தியாவசிய மாற்றங்களை செய்ய கடன் வாங்க வேண்டியிருக்கும். புத்திரர்கள் உங்களுடன் ஒத்துழைக்க மறுப்பார்கள்.

பொறுமையுடன் அவர்களை வழி நடத்துவதால் நற்பலன் பெறலாம். பூர்வீக சொத்தில் கூடுதல் பராமரிப்பு, சொத்து ஆவணங்களைப் பாதுகாப்புடன் வைத்தல் ஆகியவை இந்த காலகட்டத்திற்கு அவசியமானவை. இஷ்ட, குல தெய்வ வழிபாடு செய்ய தடங்கல் வந்தாலும், அவற்றைக் கடந்தாவது நிறைவேற்றுவது நல்லது. உடல்நலம் பலம் பெறும். கடன், வழக்கு விவகாரத்தில் சாதக தீர்வு கிடைக்கும். தம்பதியர் இடையே கருத்து வேறுபாடு ஏற்படும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்படுவது நல்லது. நண்பர்களிடம் கருத்து பேதம் வரும். தந்தைவழி சொத்தை விற்கும் நிலை வரலாம். கடன் மிகுதிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**தொழிலதிபர்கள்:** தொழில் சார்ந்த வகையில் குறுக்கீடுகள் உருவாகும். கல்வி, நிதி நிறுவனம், உல்லாச விடுதி, அச்சகம், அழகுக்கலை நடத்துவோர், கண்ணாடி, கட்டுமான பொருள்கள், பிளாஸ்டிக், தண்ணீர் சார்ந்த தொழில் செய்பவர்களுக்கு தொழிலில் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மிகுந்த அக்கறையுடன் செயல்படுவதால்

மட்டுமே உற்பத்தியும் தரமும் சிறப்பாக வரும். போட்டி ஓரளவுக்கு குறையும்.

**தருபவர் வித்யா**

புதிய ஒப்பந்த வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்த வேண்டும். தொழிலுக்காக கடன்பெற்று வாகனம் வாங்க யோகம் உண்டு. கடன்மிகுதிகளை ஓரளவு அடைப்பீர்கள்.

**வியாபாரிகள்:** நகை, புடைவை, புத்தகம், பாத்திரங்கள், ஆட்டோமொபைல் உதிரிப்பாகங்கள், கட்டுமாணப் பொருள்கள், தேன், காகிதம், பூ விற்பனை செய்பவர்கள் வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாக செயல்படுவதால் மட்டுமே வளர்ச்சி ஏற்படும். கடனுக்கு பொருள் கிடைக்கிறது என்பதற்காக அதிக கொள்முதல் செய்யக் கூடாது. சரக்கு வாகன வகையில் கூடுதல் வருமானம் கிடைக்கும். கடன்கள் நிர்ப்பந்தம் தரும். அதை சரிசெய்வதில் கூடுதல் முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். சரக்கு இருப்பு மையங்களில் கூடுதல் பாதுகாப்பு வசதி செய்வது அவசியம்.

**பணியாளர்கள்:** அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் கவனக்குறைவின் காரணமாக நிர்வாகத்தின் கண்காணிப்பில் வருவர். அக்கறையுடனும் கூடுதல் பயிற்சியுடனும் செயல்படுவதால் பணி இலக்கை படிப்படியாக நிறைவேற்றலாம். நிர்வாகத்திடம் பெற்ற கடனை பெருமளவு சரிசெய்வீர்கள். குடும்பத் தேவைகள் நிறைவேறும் அளவிற்கு வருமானம் இருக்கும். நிதி மற்றும் கல்விப்பணியில் உள்ளவர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெறலாம்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் பணியிடத்தில் தேவையில்லாத சிக்கல்களைச் சந்திக்கலாம்.

குடும்பப் பெண்களுக்கு அதிகச் செலவாகும். கணவரின் வருமானம் உணர்ந்து செயல்படுவதால் மட்டுமே சச்சரவு இல்லாத நிலை அமையும். தாய்வழி உறவினர்கள் தாராள மனதுடன் உதவி செய்வர். சுய தொழில் புரியும் பெண்களுக்கு சுமாரான வியாபாரமும், அதற்கேற்ற லாபமும் உண்டு. மிகுதிப் பணம் சுயமுயற்சியால் பெருமளவு வந்துசேரும். நகையணிந்து வெளியே செல்லும்போதும், வீட்டில் வைக்கும்போதும் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். திருட்டுப் போகலாம். கவனம்.

**மாணவர்கள்:** பொறியியல், வங்கியியல், வணிகவியல், இதழியல்துறை, கணனி, நிர்வாக மேலாண்மை, கண் மருத்துவம், ஆசிரியர், சட்டம், ஓவியம் போன்ற துறைகளில் பயிற்சி பெறும் மாணவர்கள் படிப்பில் உயர்ந்த நிலை அடைவர். படிப்புக்கான பணவசதி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். சக மாணவர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு சரியாகி நட்பு வளரும். படித்து முடித்தவர்களுக்கு சுமாரான வருமானம் வருகிற பணியே கிடைக்க வாய்ப்புள்ளது.

**விவசாயிகள்:** விவசாயப்பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்ற கடன் வாங்க வேண்டியிருக்கும். கால்நடை வளர்ப்பல் தாரரள பணவரவு கிடைக்கும். நிலம் தொடர்பான பிரச்சினை இருந்தால் அனுகூல தீர்வு உண்டாகும்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சிப் பிரதேச செயலரின் இடமாற்றத்தை நிறுத்துமாறு பொது அமைப்புக்கள் கடிதம்

## கிளி.அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

கிளிநொச்சி,நவ.26

கரைச்சிப் பிரதேச செயலரின் இடமாற்றத்தை மீள்பரிசீலனை செய்து மீண்டும் கரைச்சிப் பிரதேச செயலாளராக நியமிக்குமாறு கரைச்சிப் பொது அமைப்புக்கள் கிளிநொச்சி அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக அறிவித்துள்ளன.

அதில்,

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அனைத்துப் பொது அமைப்புக்கள் சார்பாக மேற்படி வேண்டுதலை தங்களின் மேலான கவனத்துக்குப் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

எங்கள் கரைச்சிப் பிரதேச செயலாளர் அவர்கள் எமது பிரதேசத்துக்கு கடமையாற்றி வந்த காலம் தொட்டு இன்றுவரை சாதாரண மக்களின் தேவையை இனங்கண்டு உடன் நிறைவு செய்யும் ஒரு செம்மைமிக்க செயல்வீரராகவே இருந்துள்ளார். கரைச்சிப் பிரதேசம் இதுவரை வரலாறு காணாத சேவைகளை இவரது சேவையால் பெற்றுள்ளமை எவராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாததொன்றாகும். போர் அனர்த்தம், சுனாமி, இடப்பெயர்வு, மீள் குடியேற்றம் என்ற சொல்லொணாத் துன்பங்களை மக்கள் சந்தித்தபோது தனது உயிரைத் துச்சமென மதித்து மக்களின் இடர் களைந்த ஒரு தலைசிறந்த அரச அதிகாரி என்பதை மக்கள் தம் உள்ளங்களில் நிறையப் பதிவு செய்துள்ளமையை நாம் அறிவோம். மேலும் மீள்குடியேற்றம் முடிவுற்ற பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகள் அவரின் பகீரதப் பிரயத்தனத்தால் முழுமூச்சுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் திடீரென இடமாற்றம் நடைபெற்றுள்ளதாக நாம் அறிகின்றோம். நேர்மை, விடா முயற்சி, மனிதநேயம் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணும் பண்பு சிறந்த நிர்வாகத் தலைமைத்துவம் கொண்ட சிறந்த பிரதேச செயலரின் இடமாற்றத்தைத் தயவு செய்து மீள்பரிசீலனை செய்து மீண்டும் கரைச்சிப் பிரதேச செயலாளராகப் பணியமர்த்துமாறு மிக்க பணிவன்புடன் கரைச்சிப் பிரதேச பொது அமைப்புக்கள் சார்பில் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

(க)

# முல்லைத்தீவில் கசிப்பு அருந்துவோர் கொலையும் செய்வதால் மக்கள் அச்சத்தில்

முல்லைத்தீவு,நவ.26


முல்லைத்தீவில் கசிப்பு உற்பத்தி பெருகியிருப்பதால் கொலை நிகழும் அளவுக்கு நிலைமை மோசமாகி வருவதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்தில் சிறு கிராமங்களில் ஆரம்பித்த கசிப்பு உற்பத்தி தற்போது மாவட்டம் முழுவதும் வேகமாகப் பரவி வருகின்றது. கசிப்பினை அருந்துவோர் சண்டை, சச்சரவு, அடிதடியென ஆரம்பித்துக் கொலை செய்யுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் வாசியொருவர் கசிப்பு அருந்திய நபரொருவரால் கோடரியால் கொத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது. இதனால் மக்கள் அச்சத்துடனேயே காணப்படுகின்றனர்.

முல்லைத்தீவுப் பொலிஸார் கசிப்பு உற்பத்தி செய்பவர்களைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். அண்மையில் பேராறு கிராமசேவை அலுவலர் பிரிவில் பொலிஸார் கசிப்பு வேட்டையில் ஈடுபட்டுச் சிலரைக் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்,

(க-500)

## மீட்சி கிடைக்குமா?....



வெட்டப்படும் நாடா- கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிமனையை நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றார்.

# மானிய விலை உரத்தைப் பெறுவதற்கு சிறுதொகைப் பணம் செலுத்தும் விவசாயிகள்

முல்லைத்தீவு,நவ.26

மானிய விலையில் வழங்கப்படும் உரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகளிடமிருந்து சிறுதொகைப் பணம் அறவிடப்படுவதால் தாம் சிரமப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது இந்த மாவட்டத்திலே மீளக் குடியேறியுள்ள விவசாயிகளுக்கு மானியவிலை அடிப்படையில் உரம் வழங்கப்படுகின்றது. ஆனால் இதனை ஒரு விவசாயி பெறவேண்டுமாயின் படிவக் கட்டணமாக 30 ரூபாவாவும்,அங்கத்தவர் கட்டணமாக 130 ரூபாவும் செலுத்த வேண்டும். இது ஒரு சிறுதொகையாக உள்ள போதிலும் பல ஏழை விவசாயிகள் இதனைக் கூடச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

உரியவர்கள் ஏதாவது விதிவிலக்கு வழங்க வேண்டு மென்பதே இவர்களின் தயவான வேண்டுகோளாகும். (க-500)

# பிற்போடப்பட்டுள்ளது

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சிக் கல்வி வலய ஆசிரியர்களுக்கு நாளைய தினம் சனிக்கிழமை நடத்தப்படவிருந்த 2010-2011 ஆம் கல்வியாண்டுக்கான மேலதிக மொழிப்பாட (சிங்களம்) அபிவிருத்திக் கற்கை நெறிக்கான திகதி பிற்போடப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறியானது அடுத்த மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் ஆரம்பமாகும் என்றுகற்கை நெறிக்கான இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-10-310)

# மேலதிக அரச அதிபரின் உறுதிமொழியால் வர்த்தகர்கள் புறக்கணிப்பைக் கைவிட்டனர்

கிளிநொச்சி,நவ.26

கிளிநொச்சி மேலதிக அரச அதிபரின் உறுதிமொழி காரணமாக கிளிநொச்சிப் பொதுச் சந்தை வியாபாரிகளும் கடை வர்த்தகர்களும் ஏற்பாடு செய்த வியாபாரப் புறக்கணிப்பு கைவிடப்பட்டது.

புதிய சந்தைப் பகுதியில் வியாபாரம் செய்வதில் உள்ள இடர்பாடுகள் காரணமாக இவர்கள் கடந்த 23 ஆம் திகதி இந்த வியாபாரப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவிருந்தனர். நடைபாதைக் கடைகளை அகற்ற வேண்டும், கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இயங்கிவரும் பேருந்து நிலையத்தை மத்திய பொதுச்சந்தைக்கு அருகிலுள்ள மத்திய பேருந்து நிலையத்துக்கு மாற்ற வேண்டும் என்பன இவர்களது முக்கிய கோரிக்கைகளாக இருந்தன.

இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் விசேட கூட்டம் கூட்டப்பட்டது. இதில் வர்த்தக சங்கத் தலைவர் இரத்தினமணி தலைமையிலான குழுவினருக்கும், அரச அதிகாரிகளுக்குமிடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் வர்த்தகரின் கோரிக்கை தொடர்பில் சாதகமான முடிவைத் தருவதாக மேலதிக அரச அதிபரும், உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் உறுதி வழங்கியதன் பிரகாரம் வியாபாரப் புறக்கணிப்பைக் கைவிடுவதென வர்த்தகர்கள் முடிவெடுத்தனர். தற்போது பொதுச்சந்தை வழமைபோல இயங்கிவருகின்றன. (க-301)

# பூநகரி விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம்

பூநகரி,நவ.26

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பூநகரி கமநல சேவை நிலையத்தின் எல்லைக்குட்பட்ட கமக்காரர் அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கே மானிய விலையில் உரம் வழங்கப்பட்டு வருகின்றது. முக்கியமாக யூரியா உரம் 350 ரூபாவுக்கு வழங்கப்படுகின்றது.

போர் ஒன்றுக்கு முகம் கொடுத்து சகலதையும் இழந்த இந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அவர்களின் முயற்சிக்கு இந்த மானிய விலையிலான உர விநியோகம் உந்து சக்தியாக அமைந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

(க-406)


# கூட்டமைப்பின் கிளிநொச்சிக் கிளைக்கு நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு

கிளிநொச்சி,நவ.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சிக் கிளைக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பொதுக்கூட்டம் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து நூற்றுக் கணக்கான பேராளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் செயலாளரான பொன்.காந்தன் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணித் தலைவரான அ.சத்தியானந்தன் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கலந்துரையாடல்களை அடுத்துப் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. சி.சிறிதரன் எம்.பி. தலைவராகவும், நா.சோதிநாதன், சி.தவபாலன் ஆகியோர் உப தலைவர்களாகவும் சு.சிவதாசன் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். உப செயலாளராக இரா.செல்வராசாவும், பொருளாளராகத் திருமதி ரேணுகாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் 23 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.




கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி உள்ளிட்ட பிரதேசசெயலர் பிரிவுகள்தோறும் தலா மூன்றுபேர் நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டதுடன் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கூட்டமைப்பின் நிர்வாகத்தைப் பரவலாக்கம் செய்வதென்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(க-301)

# இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் வாகன உரிமையாளர்களிடம் கையளிப்பு

## கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு

கிளிநொச்சி,நவ.26

கடந்த 22,23,24 ஆம் திகதிகளில் மோட்டார் திணைக்களப் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட வாகனங்களில் 324 மோட்டார் சைக்கிள்களுக்கான உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துஇவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி மூன்று தினங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் மூலம் 2,000 மோட்டார் சைக்கிள்களும், 300 ஏனைய வாகனங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் 324 மோட்டார்சைக்கிள்களுக்கான உரிமையாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். எனவே இவர்கள் 10.12.2010 திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களை (வாகனப் பதிவுப் புத்தகம், பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி கிராம அலுவலரால் உறுதிப்படுத்திய இரு அடையாள அட்டைப் பிரதி, வரி அற வீட்டுப் படிவப் பிரதி) ஒப்படைத்து மேற்படி வாகனங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

வாகனங்களின் விவரம்:-

1.JK-5459
2.149-8592
3.NPMI-6717
4.89-6387
5.GN-1143
6.132-2127
7.GF-9507
8.136-2145
9.148-9763
10.NPJA-5777
11.HT-5198
12.NPGO-8895
13.JD-1834
14.NPHY-1963
15.HK-4140
16.NPJU-9727
17.NPHT-4946
18.MB-9358
19.HJ-4220
20.MG-4768
21.GS-4469
22.NPHO-4116
23.81-1423
24.NPHG-0590
25.NPHE-7346
26.MV-8194
27.NPHE-2108
28.139-5699
29.158-4369
30.157-5037
31.502-0612
32.157-7619
33.HK-4163
34.JN-3726
35.502-0504
36.500-9236
37.NPGS-6478
38.500-7825
39.JG-4103
40.144-5525
41.NPMJ-1553
42.NPUB-0173
43.GN-1161
44.NPMQ-6652
45.NPMH-8511
46.NPMX-3486
47.GU-9174
48.NPGJ-4666
49.500-1775
50.GM-0597
51.NPHY-7414
52.NPMM-9127
53. NPMB-0438
54. NPMH-5845
55. NPJT-6809
56. NPJX-4868
57.NPJJ-6745
58.NPHZ-4963
59.JD-1845
60.MC-8188
61.NPHP-0808
62.502-0598
63. NPGN-6631
64. NPJS-3200
65.NPGM-0601
66.152-9509
67-151-5760
68.147-5831
69.140-5769
70.140-7336

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை

மதப் பிரச்சாரங்களும் தேவாலயங்கள் அமைக்கும் பணிகள் மும்முரமாக இடம்பெற்ற காலத்தில் தேவாலயத்திற்கு அருகே சைவ வித்தியாலயத்தை அமைத்து சைவ நெறி பிசகாமல் செயற்பட்ட சைவ சமயிகளால் உருவாக்கப்பட்டதே நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையாகும்.

1928ஆம் ஆண்டு நுணாவில் மேற்கில் உள்ள மாணவர்கள் சுமார் ஒரு மைலுக்கு அப்பால் உள்ள மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயதிற்கும் சாவகச்சேரி சைவ வித்தியாலயத்திற்கும் செல்ல வேண்டியிருந்தது. ஏழைச் சிறார்கள் இவ்வளவு தூரம் நடந்து சென்று கல்வி கற்கத் தயங்கினர்.

இதனால் பல சிறார்கள் ஆரம்பக் கல்வியைப் பெறமுடியாத நிலை காணப்பட்டது. அவ்வேளையில் நுணாவில் மேற்கில் கடை வைத்திருந்த வல்லிபுரம் மயில்வாகனம் என்பவர் தனது கடையில் பின்பகுதியை கல்விக் கூடமாக மாற்றி மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியைப் புகட்டினார்.

அக்காலப்பகுதியில் வாழ்ந்த ச.காசிப்பிள்ளை பிரக்கிராசியார் போன்ற சமயப் பெரியோர்களின் முயற்சியாலும் இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் அனுசரணையுடனும் கடையின் பின் பகுதியில் இருந்த காணியில் கொட்டில்கள் அமைத்துப் பாடசாலை ஆரம்பமானது.

ஆரம்பத்தில் முதலாம் வகுப்பு தொடக்கம் 5ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்பட்டன. பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்த சைவப்பெரியார் சின்னத்தம்பி கந்தையா அவர்களின் செயற்பாடுகளால் ஆர்வத்துடன் மாணவர்கள் கல்வி கற்றனர்.

பாடசாலைக்கு வரும் மாணவர்கள் விபூதி அணிந்தே உள்ளே வரவேண்டும் என்பதற்காகவே வாசலிலில் விபூதித் தட்டினை வைத்து சைவ முறைப்படி திருநீறில்லா நெற்றி பாழ் என்பதற்கிணங்க விபூதி அணிந்து வருமாறு உத்தரவிட்டிருந்தார். இந்த முறையினை தடுக்க அருகில் இருந்த தேவாலயத்தினர் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் தலைமை ஆசிரியரின் கண்டிப்பான உத்தரவை மீற மாணவர்கள் எவரும் முன்வரவில்லை.

இப் பாடசாலை 1929ஆம் ஆண்டு அரச பாடசாலையாக பதிவு செய்யப்பட்ட பின்னர் அதன் வளர்ச்சி பெரிதும் அதிகரித்தது. பாடசாலையில் இணையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வகுப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

பாடசாலையில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்ததால் ஏற்பட்ட இடநெருக்கடியைத் தவிர்க்க பாடசாலைக்குக் கிழக்கே உள்ள காணியில் வகுப்பறைகள் அமைக்கப்பட்டு இடைநிலைப் பிரிவு இயங்கத் தொடங்கியது. இதனால் தலைமை ஆசிரியராக இருந்த சின்னத்தம்பி கந்தையா அவர்கள் இப்பாடசாலையின் ஆரம்பகர்த்தாவாக மதிக்கப்பட்டு வருகின்றார்.

இவரின் பின்னர் காசிப்பிள்ளை கந்தையா, பொன்னுத்துரை, இ.மெய்யழகன், திருமதி த.குலசேகரம் ஆகியோர் இப்பாடசாலையின் அதிபர்களாக இருந்து தமது பணிகளைத் திறம்பட செயற்படுத்தினர்.

தொகுப்பு: ஐயந்தன்

திருமதி த.குலேசேகரம் அதிபராக இருந்த காலத்தில் எட்டாம் வகுப்பு வரை இருந்த பாடசாலையில் படிப்படியாக ஒவ்வொரு வகுப்புகள் அதிகரிக்கப்பட்டு கா.பொ.த.சாதரணதர வகுப்பு வரை வளர்ச்சியடைந்தது. 2000ஆம் ஆண்டு வரை கல்விச் செயற்பாடுகள் பெரு வளர்ச்சி கண்டது.


2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாக மக்கள் வெளியேறி வலிகாமம், வடமராட்சி பகுதிகளில் தஞ்சமடைந்திருந்தனர். இவ்வேளையில் அதிபராக இருந்த திருமதி த.குலசேகரம் இளைப்பாறியதை அடுத்து உப அதிபராக இருந்த திருமதி சாந்தநாயகி நகுலேஸ்வரன் பதில் அதிபராகப் பெறுப்பேற்று யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் பாடசாலையினை நடத்தி வந்தார்.

யுத்த அனர்த்தங்களின் போது பாடசாலையின் இரு பிரிவுகளும் (ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு) முற்றாகச் சேதமடைந்திருந்தன.

இந்நிலையில் இடைநிலைப் பிரிவு இயங்கிய வளாகத்தில் தற்காலிக வகுப்பறைகள் அமைத்து வகுப்புகள் நடத்தப்பட்டன. மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால் தரம் 8 வரை குறைக்கப்பட்டது.

சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினர் பாடசாலை வளாகத்தில் இருந்த வகுப்பறைகளைப் புனரமைத்ததுடன் இரு மாடிக் கட்டடத்தினை 2005ஆம் ஆண்டு திறந்து வைத்தனர். அத்துடன் பாடசாலைக்குத் தேவையான தளபாடங்களையும் வழங்கியிருந்தனர்.

(வளரும்..)



# சாவகச்சேரி கோயில் குடியிருப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

பாலர் பள்ளிகள் உருவாக்கப்பட்ட காலத்தில் அப் பிரதேசததின் சிறார்களின் நலன் கருதி நிலையக் கட்டடத்தில் முன்பள்ளியினை இயங்கச் செய்தனர். பாலர் கல்விப் பயிற்சி பெற்ற திருமதி கனகசிங்கம் கொங்காதேவி முன்பள்ளி ஆசிரியை பின்னர் உள்ளுராட்சி திணைக்களத்தினால் முன்பள்ளி ஆசிரியையாக நியமிக்கப்பட்டு 2000ஆம் ஆண்டு ஓய்வு பெறும் வரை முன்பள்ளியினை இந் நிலையத்தில் நடாத்தப்பட்டது.

2000ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் 2002ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்த வேளையில் கூரை அற்ற நிலையில் காணப்பட்ட நிலையக் கட்டடத்தினை நிலைய உறுப்பினர்களும் விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து ஊர் மக்களின் பங்களிப்புடன் நிலையக் கட்டடத்தினைப் புனரமைத்தனர்.

நிலையம் செயற்படத் தொடங்கிய காலத்தில் விளையாட்டுக் கழகத்தினையும் புனரமைக்க நிலையத்தலைவர் க.தர்சன் விரும்பி அப்பகுதி இளைஞர்களை ஒன்றிணைத்து 2006 ஆம் ஆண்டு புனரமைப்பு செய்தார்.

கிரிக்கெட் விளையாட்டு இளைஞர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வந்ததால் ஆலய மேற்கு வீதியை மைதானமாக்கி மாலை வேளைகளில் கிரிக்கெட் பயிற்சி வழங்கப்பட்டது பயிற்சி பெற்ற வீரர்கள் முதன் முதலாக பிரதேச செயலக கிரிக்கெட் பங்கு பற்றிய சுற்றுப் போட்டியிலேயே வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.அணி வீரர்களுக்கு பலமாக அமைந்தது. அதன்பிறகு விளையாட்டுக் கழகங்கள், பிரதேச செயலகம்,படையினர் ஆகியோரால் நடாத்தப்பட்டு வரும் கிரிக்கெட் போட்டிகளில் இறுதிப் போட்டிக்கு வரக் கூடிய அணி என்றும் பெருமையுடன் பிரதேசத்தின் கிரிக்கெட் ஜாம்பவானாக திகழ்ந்து வருகிறது.

2009,2010 ஆகிய ஆண்டுகளில் கழகம் பிரதேச மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளை நடாத்திய போது சாவகச்சேரி நகர் பகுதியில் உள்ள நிறுவனங்கள் பல பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கி உதவினர். சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கு ரேசிங் சைக்கிளினை பரிசாக வழங்கினர்.

சனசமூக நிலையத்தில் இயங்கிய முன்பள்ளியின் ஆசிரியை இளைப்பாறியதையடுத்து முன்பள்ளி நடாத்துவது நிறுத்தப்பட்டு சனசமூக நிலையம் முழுநேர வாசிகசாலையாக இயங்கி வருகிறது.

கிரிக்கெட் அணி பெற்ற வெற்றிக் கேடயங்கள் சனசமூக நிலையக் கட்டடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

முற்றும்.




தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசோடு சேர்ந்திருப்பது தீது என்றால் யோசிக்கின்றோம்

## இளங்கோவனுக்கு கருணாநிதி மறைமுகச் சூடு

சென்னை, நவ. 26

மத்திய அரசோடு மாநில அரசு சேர்ந்திருப்பது தீது என்றால் சொல்லுங்கள் யோசிக்கிறோம். அவ்வளவுதான் சொல்ல முடியும் - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தி.மு.கவுடனான கூட்டணியைப் பற்றி விமர்சித்துவரும் காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் இளங்கோவனின் பேச்சுக்கு மறைமுகமாகப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே முதல்வர் கருணாநிதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமிழக வேளாண்துறை சார்பில் வேளாண் கருத்தரங்கம் மற்றும் அலுவலர்கள் மாநாடு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு முதல்வர் கருணாநிதி பேசியவை வருமாறு -

மக்களுக்காகச் சாதனை செய்கிறோம், முடிக்கிறோம் என்றால் அது மத்திய அரசை விட்டு விட்டுச் செய்வதில்லை. நீங்கள் 8 அடி பாய்ந்தால், நாங்கள் 16 அடி பாய்வோம். அந்த 8 ஐ கூட்டித்தான் சொன்னேன். நான் கணக்கில் ஒன்றும் முட்டாள் அல்லன். நாங்கள் தனியாக 16 அடி பாய வேண்டும் என்று அண்ணா காலத்தில் கேட்டோம்.

நாங்கள் போடுகின்ற திட்டம், உங்களுக்குப் பயன்படக் கூடியது அல்லவா என்று கூறிய பிறகு, அதுபற்றி நாங்களும் யோசித்து நம்பித்தான் சேர்ந்தோம். சேர்ந்தே இருப்பது தீது என்றால் சொல்லுங்கள், யோசிக்கிறோம். அவ்வளவுதான் சொல்ல முடியும்.

இந்தியனுக்காகப் போடுகின்ற திட்டம் எல்லோருக்குமான திட்டம். அதில் பாகுபாடு இருக்கக் கூடாது. சிலர் மத்திய அரசின் திட்டமா, மாநில அரசின் திட்டமா என்று மக்களைக் குழப்ப முன்வருவார்கள்.

மத்திய அரசு வேறு, மாநில அரசு வேறு என்று கருதவில்லை. மத்தியிலே ஒரு காரியம் நடந்தால், அது மாநிலத்தையும் பாதிக்கும் என்பதை யோசிப்பவன், சிந்திப்பவன் நான். இரண்டையும் ஒரே சமமாகவே நான் கருதுகிறேன். மாநிலம், மத்தி என்பது நிர்வாகத்துக்குத்தான். அது பேதங்களுக்காக, பிளவுகளுக்காக அல்ல. இதை அரசியல் சிந்தனையாளர்கள் நிச்சயமாக மறந்துவிடக் கூடாது.

நான்தான் பெற்றேன் என்று தாய் சொல்லலாம். ஆனால் அதில் தகப்பனுக்கும் பங்கு உண்டு. அரசன் சாலமன் தீர்ப்பில், ஒரு குழந்தைக்காக இரண்டு தாய் போராடியபோது, இந்தக் குழந்தை உன்னுடையது அல்ல என போலித்தாயிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஒரு கட்டத்தில் தனது வாளால் குழந்தையை இரண்டு துண்டாக வெட்டி, ஆளுக்கு ஒரு துண்டு தருகிறேன் என்றான்.

அப்போது போலித் தாய் சரி என்று சொன்னாள், ஏனெனில் குழந்தை அவளுடையது அல்ல. குழந்தையை வெட்டினால் அவளுக்கு என்ன கவலை என்ற ரீதியில் போலித் தாய் சொன்னாள்.

உடனே உண்மையான தாய், ஐயோ நான் பெற்ற குழந்தையை வெட்டிவிடாதீர்கள். குழந்தை உயிரோடு இருக்க வேண்டும். குழந்தையை அவளிடமே கொடுத்து விடுங்கள் என்றாள் அந்த உண்மைத்தாய். குழந்தை உயிரோடு இருக்க வேண்டும் என்ற சிந்தனை அவளுக்கு இருந்தது. அந்த நிலையில் இருந்து சொல்கிறேன். யார் திட்டத்தைப் போட்டால் என்ன? யார் வீடு கட்டினால் என்ன? யார் வீதி போட்டால் என்ன போடுகின்ற திட்டங்கள் மக்களுக்குப் பயன்பட்டால் போதும்.

நான்தான் செய்தேன் என்று கூறுவது, நான்தான் பெற்றேன் என்று போலித் தாய் பங்கு கேட்பதுபோல ஆகிவிடும். எனவே குழந்தை காப்பாற்றப்பட வேண்டும். இந்தியாவின் சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும். - இப்படி அவர் தெரிவித்தார்.

### ஆந்தையம்மா...



வழிபாடு - மேற்கு வங்கம், மால்டா மாவட்டத்தில் உள்ள ஷொகாபூர் கொலனியில் உள்ள ஒரு ஆந்தைக்கு பொட்டு வைத்து, பூ தூவி, லட்சுமி என்ற பெயரிட்டு 'ஆந்தையம்மா... நீதான் எங்கள் குறையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று வணங்கி வருகின்றனர்.

# வீட்டில் ஆபாசப் படம் பார்ப்பது குற்றமல்ல!

மும்பை, நவ.26

வீட்டில் ஆபாசப் படம் பார்ப்பது குற்றம் அல்ல - என்று மும்பை உயர்நீதி மன்றம் பரபரப்புத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

புனே அருகேயுள்ளது லோனாவானா மலை வாசஸ்தலம். இங்குள்ள ஒரு தனியார் பங்களாவில் கடந்த 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதியன்று மது விருந்தும், நடன விருந்தும் நடைபெற்றன. அப்போது அரை குறை உடைகளுடன் நடன அழகிகள் ஆடிக்கொண்டிருந்தனர். ஆபாசப் படமும் காட்டப்பட்டது. ஆபாசப் படத்தைப் பார்த்தவாறே, நடன அழகிகளை நோக்கிப் பார்வையாளர்கள் ரூபா நோட்டுகளை உற்சாக மிகுதியால் எறிந்தனர்.

பார்வையாளர்களில் 28 ஆண்களும், 11 பெண்களும் அடங்குவார்கள். இவர்களில் பலர் சுங்கத்துறை அதிகாரிகள். இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவம் தொடர்பாக இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 292 இன் படி (ஆபாசப்படம் காட்டுவது) வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கை இரத்து செய்யக்கோரி குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் உயர்நீதிமன்றில் முறையிடப்பட்டது. வழக்கை நீதிபதி வி.கே.தஹிலரமணி விசாரித்து நேற்றுமுன்தினம் வழங்கிய தீர்ப்பில் கூறியிருப்பவை வருமாறு -

இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறி இருப்பது போன்று ஆபாசப்படம் பொது இடத்தில் காட்டப்படவில்லை. ஒரு தனியார் இல்லத்தில்தான் அந்தப் படம் காட்டப்பட்டுள்ளது. அந்தத் தனியார் இல்லம் ஹோட்டலோ, விடுதியோ ஆகாது. எனவே அதைப் பொது இடம் என்று கருத முடியாது.

அந்த இடத்தினுள் பொதுமக்கள் யாரும் செல்ல முடியும் என்று அரசு தரப்பில் கூட வாதிடவில்லை. எனவே அந்த பங்களாவில் ஆபாசப்படம் காட்டியதை பொது இடத்தில் காட்டியதாகக் கூற முடியாது. தனியார் இல்லத்தில் ஆபாசப்படம் காட்டுவது குற்றம் ஆகாது. எனவே இது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கு இரத்துச் செய்யப்படுகிறது.

- இப்படி தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

# விஜயகுமார் வீட்டில் சட்டவிரோதச் செயல்கள் விரைவில் இரகசியங்களை வெளியிடுவேன்

## மகள் வனிதா ஆவேசப் பேட்டி

சென்னை, நவ. 26

நடிகர் விஜயகுமார் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து வந்தால், அவரை பற்றிய இரகசியங்களை வெளியிடுவேன் - என்று அவரது மகளும் நடிகையுமான வனிதா ஆவேசமாகக் கூறியுள்ளார்.

ரி.வி. நடிகர் ஆகாஷை விவாகரத்து செய்த பின்னர் ஆனந்தராஜன் என்பவரை வனிதா இரண்டாவது திருமணம் செய்தார். முதலாவது கணவருக்குப் பிறந்த மகன் ஸ்ரீஹரி (வயது - 9), தாத்தா விஜயகுமாரிடம் இருந்தான். மகனை மீட்டுத் தருமாறு கடந்த 8ஆம் திகதி மதுரவாயல் பொலிஸில் வனிதா முறைப்பாடு அளித்தார். இதையடுத்து ஸ்ரீஹரியை வனிதாவுடன் விஜயகுமார் அனுப்பி வைத்தார்.

இந்நிலையில் கடந்த 15 ஆம் திகதி விஜயகுமார் அளித்த முறைப்பாட்டில், வனிதாவும் அவரது கணவரும் தன்னை அடித்தனர் எனவும் கொலை மிரட்டல் விடுத்தனர் எனவும் தெரிவித்தார்.

இதையடுத்து நேற்றுமுன்தினம் காலை ஆனந்தராஜனை மதுரவாயல் பொலிஸார் கைதுசெய்தனர்.

இந்நிலையில் நேற்று டி.ஜி.பி. லத்திகா சரணிடம் வனிதா முறைப்பாடு கொடுக்க வந்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

எனது தந்தை, அதிகாரத்தைப் பயன்படுத்தி என் கணவர் மீது நடவடிக்கை எடுக்க வைத்துள்ளார். என் குழந்தை எனக்கு வேண்டும் என்று கேட்கத் தீபாவளியன்று சென்றேன். அப்போது, என் அண்ணன் அருண் விஜய் என்னை எட்டி உதைத்தார். என்ன காரணத்திற்காக அவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் எனப் புரியவில்லை. அருண் விஜய்யைக் காப்பாற்றுவதற்காக எனது கணவரை விஜயகுமார் சிறையில் தள்ளியுள்ளார்.

என் கணவருடன் சேர்ந்து நடத்தும் நிறுவனம் வெற்றிகரமாகச் சென்று கொண்டிருக்கிறது. இது பிடிக்காமல் எனது அண்ணன் அருண் விஜய் மற்றும் இயக்குநர் ஹரி இருவரும் பிரச்சினை செய்கிறார்கள்.

அவர்கள்தான் இதற்குக் காரணம். நேற்றுமுன்தினம் இரவு கூட அடியாட்கள் வீட்டுக்கு வந்து என்னைத் தாக்க முயன்றனர்.

எனது ஒன்றரை வயது குழந்தை ஜெய்நிதாவின் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவோம் என்றும், பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்கக் கூடாது என்றும் மிரட்டினர். எனக்கோ, எனது குழந்தைகளுக்கோ தொல்லைகள் தொடர்ந்து கொடுத்து வந்தால் விஜயகுமார் பற்றிய இரகசியங்களை வெளியிடுவேன்.

என் தந்தை விஜய்குமார் வீட்டில் எவ்வளவோ அசிங்கங்கள் நடக்கின்றன. சட்ட விரோதமான பல காரியங்கள் நடக்கின்றன. இவற்றை வெளியில் சொல்லத்தான் போகிறேன். அப்போது இவர்கள் கதை நாறப் போகிறது. - இப்படி வனிதா ஆவேசமாக கூறினார்.

# தமிழரை யாராவது பழித்துப் பேசினால் அவர்களது குரல்வளையைக் கடிப்பேன்

## 'பெப்சி' தலைவர் வி.சி.குகநாதன் ஆவேசம்

நான் எந்த ஒரு நடிகருக்கும் விரோதி அல்லன். ஆனால் யாராவது தமிழர்களைப் பழித்தால் அவர்களது குரல்வளையைக் கடிப்பேன் - என்று தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளன (பெப்சி) தலைவர் வி.சி.குகநாதன் ஆவேசமாகக் கூறியுள்ளார்.

தமிழ் நடிகர்களை மறைமுகமாகக் கேலி செய்வதுபோலப் பேசிய நடிகர் ஆர்யாவைக் கண்டித்து வி.சி.குகநாதன் பேசினார். அதற்கு தென்னிந்திய நடிகர் சங்கம் கண்டனம் தெரிவித்திருந்தது.

இதற்கு தற்போது குகநாதன் பதிலடி கொடுத்துள்ளார். இதுகுறித்து அவர் செய்தியாளர்களை அழைத்துப் பேசுகையில் கூறியவை வருமாறு -

'உங்கள் விருப்பம்' படவிழாவில் எந்த நடிகரின் பெயரையும் குறிப்பிட்டு நான் பேசவில்லை. மலையாள ஏசியா [illegible] நிகழ்ச்சியில் ஒரு நடிகர் கலந்துகொண்டு பேசும்போது, மலையாளப் படங்களில் நடிக்க வேண்டும் என்றால் நடிப்புத் தெரிந்திருக்க வேண்டும். எல்லோரும் பார்க்கின்ற மாதிரி மலையாளப் பட உலகில் இன்னும் தரமான படங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் மலையாளப் படங்களில் நடிக்க ஆசைப்படுகிறேன் என்று கூறியிருக்கிறார்.

அந்த நடிகரின் பேச்சு தமிழ் நடிகர்களை கேவலப்படுத்துவது மாதிரி இருக்கிறது. உலகப் புகழ்பெற்ற 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனில் இருந்து கமல்ஹாசன் வரை பல அபூர்வ நடிகர்களைக் கொண்டது தமிழ்ப் பட உலகம். அவர்களை எல்லாம் கேவலப்படுத்துகின்ற மாதிரி அந்த நடிகர் பேசியிருக்கிறார்.

நான், எந்த நடிகருக்கும் விரோதி அல்லன். ஆனால் தமிழர்களையும், தமிழ் கலைஞர்களையும் பழித்தால், அவர்களின் குரல்வளையைக் கடித்துத் துப்பவும் தயங்க மாட்டேன். - இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேஷம்:**
சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்கு பெறும் நாள். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு, பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். உதிரி வருமானங்களைப் பெறலாம். பிரியமான நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு நிகழும். நல்ல செய்தி கேட்கலாம்.



**இடபம்:**
ஓய்வாக இருக்க முடியாத அளவுக்கு ஏதாவது வேலைகளைச் செய்யலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். உறவினர்கள் அல்லது நண்பர்கள் சிலரிடம் கடனுதவி கேட்கலாம் அல்லது கடன் கொடுக்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகள் செய்யலாம்.



**மிதுனம்:**
புதியவர்களின் நட்பு கிடைக்கும். உழைப்புக்கு ஏற்ற பலன் பெறலாம். மாணவர்கள் போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பர். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பதவி உயர்வு வாய்ப்புகள் சாதகமாகும். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள். உங்களின் செயற்பாடுகளை பார்த்து மற்றவர்கள் வியப்படைவர்.



**கடகம்:**
சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைவீர்கள். உறவினர் அல்லது நண்பர் ஒருவர் கடனுதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். பணம் தொடர்பான விடயங்களில் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். பெரிய மனிதர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க பொறுமையாக செயற்படுவது நல்லது. சிலருடன் வாக்குவாதம் செய்யலாம்.



**சிங்கம்:**
எந்த காரியத்திலும் தங்கு, தடையற்ற வெற்றி பெறும் நாள். அரசியல்வாதிகள் குதர்க்கமான பேச்சுக்களை, விமர்சனங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். வழக்கத்திற்கு மாறாக குறைவான வேலைப் பளுவைச் சந்திக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சுகமான அனுபவம் உண்டு.



**கன்னி:**
தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். எந்த வேலையிலும் அக்கறையுடன் செயற்படுவீர்கள். நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நண்பர் ஒருவர் உங்களின் வீடு தேடி வரலாம். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும்.



**துலாம்:**
வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகளுக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பெண்கள் பறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். சிலரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். சக ஊழியர்கள் சிலரைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம்.



**விருச்சிகம்:**
எப்படியும் முடிந்து விடும் என நம்பிக்கையுடன் இருந்த காரியம் ஒன்று முடியாமல் போகலாம். உறவினர்கள் சிலரை விமர்சனம் செய்வீர்கள். அயலார் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எதிர்ப்பு உண்டாக்கலாம். கொடுக்கல் வாங்கல் தொடர்பாக சிலருடன் வாக்கு வாதங்களில் ஈடுபடலாம். தேக ஆரோக்கிய குறைவு உண்டாகலாம்.



**தனுசு:**
உற்சாகமான அனுபவங்களால் சங்கடங்களை மறக்கலாம். தம்பதியர் இடையே பிணக்குகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். நாளைய சில வேலைகளையும் இன்றே சேர்த்து செய்வீர்கள். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கலாம்.



**மகரம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளை கண்டு பெருமை அடைவீர்கள். சில பிரச்சினைகளில் முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாற்றத்தை சந்திக்கலாம். வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருடன் தொலைபேசியில் பேசலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்று சந்தோஷம் அடைவீர்கள்.



**கும்பம்:**
கடின முயற்சிக்குப் பின் காரியங்கள் நிறைவிற்கு வரும் நாள். வயிறு தொடர்பான உபாதைகளைச் சந்திக்கலாம். வியாபாரிகள் வேலையாள்களால் சிறு தொல்லைகளுக்கு ஆள்படலாம். இழப்புகளைத் தவிர்க்க பண விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம். வீண் பயம் உண்டாகும்.



**மீனம்:**
நடக்காது என நினைத்த காரியம் ஒன்று நல்ல படியாக நடந்து விடலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். உறவினர்களிடம் உல்லாசமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். தொழில் ரீதியாக அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

# மாகாண மட்டத்தில் மாணவரிடையே போட்டி; வெற்றி பெற்றோர் விவரங்கள் வெளியாகின

யாழ்ப்பாணம், நவ.26

பாடசாலை மாணவர்களிடையே மாகாண மட்டத்தில் கோலம், துரித கணிதம், வாய்ப்பாட்டு, திருக்குறள், சிறுவர் நாடகம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**கோலம்**

எம்.பபியன் - மன்னார் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), ஸ்ரீ.கஜோஜா - தென்மராட்சி (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), சி.நிதர்சிகா-கிளிநொச்சி(கனகபுரம் மகாவித்தியாலயம்), சு.வனஜா-வடமராட்சி (தும்பசிட்டி அ.த.க.பா),ம.டிஜந்தினி-மன்னார் (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), பி.லதுஷன்- யாழ்ப்பாணம் (இந்து ஆரம்பப் பாடசாலை), பி.பதீசன் - வலிகாமம் (அராலி சரஸ்வதி ம.வி), மு.இசைப்பிரியா - வலிகாமம்(மகாஜனக் கல்லூரி),ச.பானுசா - (யாழ்ப்பாணம்-கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி), எஸ்.கிஷாந்தனா (மன்னார் - புனித சவேரியர் பெண்கள் கல்லூரி),பா.சுவேதா (மன்னார்- தலைமன்னார் அ.மி.த.க.பா), யோ.சிந்துஜா (கிளிநொச்சி - தர்மபுரம் இல 1 அ.த.க.பா), ஜெ.கார்த்தி (வடமராட்சி - கற்கோவளம் அ.மி.த.க.பா), பி.மடுசனா (வலிகாமம்- இளவாலை கன்னியர்மடம் ம.வி),ம.சரண்ராஜ் (முல்லைத்தீவு- குமுழமுனை மகாவித்தியாலயம்), சிவப்பிரியன் (யாழ்ப்பாணம்-சிறுப்பிட்டி இ.த.க.பா), ஏஸ்.சௌமியா (தீவகம் - எழுவைதீவு முருக வேள் வித்தி)

**துரித கணிதச் செய்கை**

ஆ.வித்தியாசாகர் (யாழ்ப்பாணம் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), கி.ஜிதுர்சன் (வலிகாமம் - சுழிபுரம் ஐக்கிய சங்கம் வி.த), க.சாம்பவி (தென்மராட்சி - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), த.டிசானி (வலிகாமம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), யு.யுதர்சன் (மன்னார் - தோட்டவெளி அ.த.க.பா), ச.பிரின்சிகா (தென்மராட்சி - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை),க.கவினா (தென்மராட்சி - மீசாலை வீரசிங்கம் வித்தி), சு.விதுர்சன் (தீவகம் - காரை ஊரி அ.மி.த.க.பா), க.டிலக்சன் (வலிகாமம் - மாதகல் விக்னேஸ்வரா வித்தி), உபவனிதன் (யாழ்ப்பாணம் - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை),த.தனுசிகா (தென்மராட்சி - கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தி), ஜே.எஸ்.ஏ.பெவன் (மன்னார் - புனித சவேரியர் ஆண்கள் பாடசாலை)

**வாய்ப்பாடு மனனப் போட்டி**

த.சங்கவி (வவுனியா தெற்கு - இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), ப.சங்கவி (வலிகாமம் - மகாஜனக் கல்லூரி),பா.திலக்ஷனா (யாழ்ப்பாணம் - யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), சி.சாதுரியா (முல்லைத்தீவு - தண்ணீரூற்று இ.த.க.பா), இ.சுவேதா (மன்னார் - புனித சவேரியர் பெண்கள் கல்லூரி),க.கேனுகா (வலிகாமம் - அராலி சரஸ்வதி வித்தி),ம.கோபிகா (வடமராட்சி - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி),ச.கவினா (தென்மராட்சி- வீரசிங்கம் ம.வி), க.தாருகா (கிளிநொச்சி - வட்டக்கச்சி ம.வி),சு.யசோதரன் (யாழ்ப்பாணம் - மத்திய கல்லூரி),அ.சண்முகப்பிரியா (துணுக்காய் - அனிஞ்சியன்குளம் த.க.வி), எம்.ஜே.ஆர்.ஆழ்பர் (மன்னார் - சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), பா.சனுஷா (மடு-இலுப்பைக்கடவை அ.த.க.பா), ஜெ.எமெரென்சி (வலிகாமம் - இளவாலை கன்னியர்மடம் ம.வி), சி.ரேனுஜன் (கிளிநொச்சி - மத்திய கல்லூரி), பே.மயூரி (வ.தெற்கு - இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), ப.ரஜீஸ் (யாழ்ப்பாணம் - நீர்வேலி சி.சி.த.க.பா), ந.விதுஷன் (வடமராட்சி - கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி),ஏ.றீடஸ் (மடு-வட்டக்கண்டல் அ.த.க.பா), இ.சிந்துசன் (தென்மராட்சி - கல்வயல் சண்முகாவித்தி), திவின் சாகித்தியன் (மன்னார் - முருங்கன் ம.வி).

*(வளரும்)*

# காளிதாசன் காட்டும் அரசன்



'ரகு' என்ற மன்னர் ஒருவர் இருந்தார். அந்த மன்னர் உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் வெற்றி பெற்று ஏகப்பட்ட செல்வங்களுடன் தலைநகருக்குத் திரும்பினார். அந்த சொத்து முழுவதையும் என்ன செய்தார் தெரியுமா?

''விஸ்வஜித்'' என்ற ஒரு யாகம் செய்து அவ்வளவு செல்வத்தையும் அவர் மக்களுக்குத் தானம் செய்து விட்டார். அதை தட்சணையாகவே கொடுத்துவிட்டார்.

அந்தக் காலத்தில் ஒருவர் அரசராக வேண்டும் என்றால் அதற்கான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது முற்றிலும் அவசியமாக இருந்தது.

குருகுலவாசம் செய்ய வேண்டும், சாஸ்திரங்கள் தெரிந்திருக்க வேண்டும். தர்மத்திலும் பண்பிலும் அவர்கள் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் அரசர் பொதுமக்களிடம் எப்படி வரி வசூல் செய்ய வேண்டும் என்பதைப் பற்றிக் கூடச் சொல்லி இருக்கிறார்கள்.

''ஒரு வண்டு எப்படி மலருக்கு வலி தெரியாமல் தேன் எடுத்துக் கொள்கிறதோ. அதே போலவே அரசன் குடிமக்களுக்குக் கொஞ்சம் கூட சிரமம் தெரியாமல் மலர்ச்சி குன்றாமல் வரி வசூல் செய்ய வேண்டும்'' என்று சாத்திரம் கூறுகிறது.

இதையே காளிதாசன் உவமையால் பின்வருமாறு கூறுகிறார். ''சூரியன் எப்படிப் பூமியிலிருந்து நீரை உறிஞ்சிக்கொண்டு அதையே மழையாகப் பொழிகிறதோ அதுபோல் தான் ஒரு நாட்டு அரசனும் குடி மக்களிடமிருந்து பெறும் வரி வசூலை அந்த மக்களின் நலனுக்கே செலவிட வேண்டும்.

கோ.சுவாமிநாதன்.

# தினம் தினம் தீபாவளி

கருணைமிக்க பணக்கார ஜமீன்தார் ஒருவர் குதிரையில் போய்க் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் ஒருவன் குடைபிடித்துக் கொண்டிருந்தான்.

ஜமீன்தாரின் காலில் செருப்பு இருந்தது. நல்ல வெயில் நேரம் என்பதால் அவர் செருப்பு, குடையுடன் போய்க் கொண்டிருந்தார்.

நீண்டதூரம் பயணம் செய்ததால் களைப்படைந்த பணக்காரர் சிறிது நேரம் ஓய்வெடுக்க மரத்தடியில் ஒதுங்கினார்.

அப்போது காலில் செருப்பும் குடையும் இல்லாமல் கொளுத்தும் வெய்யிலில் துடிதுடிக்க ஓடி வந்து அதே மரத்தடியில் ஒரு ஏழையும் ஒதுங்கினான்.

அப்போது அந்த ஏழை பணக்காரரைப் பார்த்து ''இந்த வெய்யிலில் நான் காலில் செருப்பில்லாமல் செல்ல வேண்டியுள்ளது. நீங்கள் குதிரையில் செல்வதால் தங்கள் செருப்பை எனக்குத் தந்து உதவலாமே'' என்றார். அதற்கு அவரும் செருப்பைக் கழற்றிக் கொடுத்து விட்டார்.

மறுநிமிடம் ''நீங்கள் குதிரையில் போவதால் நேரத்துடன் ஊர் போய்ச் சேர்ந்து விடுவீர்கள்.ஆனால் நான் நடந்து செல்ல வேண்டியுள்ளது. அதனால் தங்களுக்குக் குடை அவசியம் இருக்காதுதானே. அதையும் தந்தீர்களானால் உதவியாக இருக்கும் என்று கேட்டான். பணக்காரனும் அது நியாயமாக இருந்ததால் குடையும் கொடுத்துவிட்டார். ஏழைக்கு அளவற்ற மகிழ்ச்சி சட்டென்று புதுவருத்தத்துடன்



தாங்கள் மிக நல்லவராக இருக்கிறீர்கள். இளமையாகவும் இருக்கிறீர்கள். அதனால் குதிரையையும் எனக்குக் கொடுத்து விட்டு நீங்கள் ஊர் போய்ச் சேருங்கள் என்று கேட்டான். எஜமானுக்கு கோபம் வந்தது. அந்தக் கோபத்துடன் சாட்டையால் அடித்தார்.

ஏழை வருத்தமின்றி ''அடியுங்கள் நன்றாக அடியுங்கள்'' என்று முதுகைத் திருப்பிக் காட்டினான். ''ஏன் இப்படிப் பைத்தியம் போல் நடந்து கொள்கிறாய்'' என்று கேட்டார் எஜமான்.

''நான் குதிரையைக் கேட்டதும் நீங்கள் கோபத்துடன் அடிப்பதால் குதிரை தர விருப்பமில்லை என்று அர்த்தம். இப்பொழுது நிம்மதியாக இருக்கிறது. இதை நான் கேட்காமல் விட்டுவிட்டு நான் கேட்டிருந்தால் கொடுத்திருப்பாரே என்று கவலை அடைந்திருப்பேன்'' என்றான்.

இன்றைய சமுதாயத்தில் மனிதர்கள் எப்போதும் துக்கமாக இருப்பதற்கு இது தான். காரணம் எது கிடைத்தாலும் திருப்தி அடைவதில்லை. அது, இது கிடைத்திருக்குமோ என்று எப்போதும் வேதனையில் இருக்கிறார்கள். கிடைத்த எதுவும் மகிழ்ச்சி தருவதில்லை. எப்போதும் துக்கம் இன்றி இருப்பது தான் உண்மையான ஞானம் என்பது பலருக்குப் புரிவதில்லை.

தீபாவளி மகிழ்ச்சியான நாள் என்று எம்மில் பலர் நினைக்கிறோம். ஆனால் உண்மையில் மகிழ்ச்சியாக இருக்கும் ஒவ்வொரு கணமும் எமக்குத் தீபாவளிதான்.


சக்தி சிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தலைவர் யார் என்ற சண்டையைத் தவிர்க்கவே இரு தடவைகள் மட்டுமே பதவி என்பதை நீக்கினேன்

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலம் மிக முக்கியமானது. இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகள் தமது இரண்டாவது பதவிக் காலத்தில் முதல் தடவையின் பின்னர் நிம்மதியாகப் பணியாற்றவில்லை. அடுத்த தலைவர் யார் என்ற சண்டை கட்சிக்குள் ஏற்பட்டு விடுவதே இதற்குக் காரணம். அதனால்தான் நான் இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் பதவியில் இருக்கலாம் என்று சட்டத்தைத் திருத்தினேன்.

இப்படிச் சொல்லி இருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. 'த ஹிந்து' பத்திரிகைக்கு அவரளித்த பேட்டியின் மூன்றாவது பகுதி இது.



தமிழகத்தில் இருந்து வெளியாகும் 'த ஹிந்து' பத்திரிகையின் ஆசிரியர் என்.ராமுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய நேர்காணலின் தமிழ்ப் பெயர்ப்பு இது.

*கே:* இலங்கை அரசு எதிர்ப்புத் தெரிவித்த போதும் ஐ.நாவின் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக வல்லுநர் குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அனைத்து மனித உரிமை மீறல்களும் சுதந்திரமான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச அமைப்புக்கள் கோரி வருகின்றன. இது தொடர்பில்?

*ப:* இந்த அனைத்துலக நிறுவனங்களின் நிலையினை நான் விளங்கிக்கொள்கிறேன். அவர்கள் எதனையாவது செய்ய வேண்டிய நிலையில் உள்ளார்கள். எமது எத்தகைய முன்னெடுப்புக்களுக்கும் இந்த அமைப்புக்களிடம் இருந்து வரவேற்பு இருக்கப் போவதில்லை. சில அமைப்புக்களது கருத்துக்களை மாத்திரமே எங்களால் மாற்ற முடிந்தது.

உலகில் போர் இடம்பெற்ற எந்த நாட்டினை எடுத்துக்கொண்டாலும் அங்கு மனித உரிமையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும் என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, போர் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து 3000,00 மக்கள் இடம்பெயர்ந்த போது அவர்களைத் தங்கவைத்துப் பராமரிப்பதற்கான முகாம்களை நாங்கள் அமைத்திருந்தோம். ஆனால் பொதுமக்களை நாங்கள் ''வதை முகாம்களில் தடுத்து'' வைத்திருப்பதாக இந்த அமைப்புக்கள் கூறின. மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த பகுதிகளுக்கு நீங்கள் சென்றீர்கள்தானே. அது தடுப்பு முகாம்களா? தற்போது மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகிறார்கள். இந்த நிலையில் ''நிரந்தர வீடுகள் எதுவும் அற்ற நிலையில்'' மக்கள் குடியேற்றப்படுகின்றனர் என்று இந்த அமைப்புக்கள் கூறுகிறன்றன. ஆறு மாத காலத்திற்குள் நாங்கள் நிரந்தர வீடுகளைக் கட்டிமுடிக்க வேண்டும். கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவுறாமல் நாங்கள் எவ்வாறு மக்களை மீள்குடியமர்த்துவது? சரி, மக்களை வேகமாக மீள்குடியமர்த்தவேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் மக்களை அங்கு அழைத்துச் சென்றால் ''கண்ணிவெடிகளை முழுமையாக அகற்றாமல் மக்களைக் குடியமர்த்துவன் மூலம் அவர்களைக் கொல்லப் பார்க்கிறார்கள்'' என்று இந்த அமைப்புக்கள் குற்றம் சுமத்தும்.

தேர்தல் இடம்பெற்ற காலப் பகுதியில் இலங்கையில் குறித்த சில தொண்டு நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட்டன என்பதை நாமறிவோம். ட்ரான்ஸ்பரன்சி இன்னரநாஷனல் என்ற நிறுவனம் 2009 ஆம் ஆண்டு 109 மில்லியன் இலங்கை ரூபாவை இலங்கையில் செலவிட்டிருக்கிறது. இந்த ஆண்டு தை மாதம், அதாவது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற மாதத்தில் 69 மில்லியன் ரூபாவை இந்த அமைப்புச் செலவிட்டிருக்கிறது. இது போன்ற பெருந்தொகை நிதியினை அரச திணைக்களம் ஒன்றினால்கூட செலவிடமுடியாது.

தொண்டு நிறுவனங்கள் செய்தது இதைத்தான். நாட்டினது அரசு மாறவேண்டும், அரசியல் தலைமை மாறவேண்டும் என்றே இவை கருதுகின்றன. இதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக இந்த நிறுவனங்கள் அலட்டிக்கொள்வதில்லை.

கே: மொழிக் கொள்கையில் நீங்கள் அதிக ஆர்வம் எடுத்திருக்கிறீர்கள். ஆங்கிலத்தை பரப்புவதற்கான முன்னெடுப்புக்களே முன்னர் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், மும்மொழிக் கொள்கைக்கான பத்தாண்டுத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். நீண்ட காலச் சிந்தனையின் அடிப்படையிலேயே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. நீங்கள் அதனை எப்படிப் பார்க்கிறீர்கள்?

ப: கடந்த ஆண்டு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துக்கான ஆண்டாக இருந்தது. அதை அடுத்து மக்கள் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்கள்; ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளவும் ஆரம்பித்தார்கள். அதைப் பார்த்த பின்னர் நான் சிந்தித்தேன், இப்போது எல்லாச் சிங்களவர்களும் தமிழைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும்; அதேபோன்று எல்லாத் தமிழர்களும் சிங்களத்தைக் கற்க வேண்டும். நாட்டில் உள்ள எல்லோருமே ஆங்கிலத்தையும் கட்டாயமாகக் கற்க வேண்டும் - என்று. அனைத்துலக அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆங்கிலம் இன்று அவசியமாக இருக்கின்றது.

அதனால், மூன்று மொழிக் கற்கைகளையும் தொடங்குவதே சிறந்தது என நினைத்தோம். அதனை 2020இற்குள் அடைவது என்று திட்டமிட்டோம். அதனைச் சாதித்துவிட முடியும் என்றுதான் நினைக்கிறேன். இருக்கும் ஒரே பிரச்சினை ஆசிரியர்கள்தான். ஆசிரியர்களை உருவாக்குவதற்காகப் பயிற்சி அளிக்க வேண்டி இருக்கிறது. இருந்தாலும் நாங்கள் இலக்கை அடைவோம்.

கே: இலங்கையில் அண்மையில் எடுக்கப்பட்ட சமூக-மொழியியல் கருத்துக் கணிப்புக் குறித்து, இந்த முன்னெடுப்புக்கான ஒருங்கிணைப்பாளர் சுனிமல் பெர்ணான்டோ என்னிடம் தெரிவித்தார். ஆச்சரியம் அளிக்கக் கூடியளவு ஆதரவு இந்தத் திட்டத்துக்கு கிடைத்திருப்பதை அந்தக் கணிப்பில் பார்க்க முடிகிறது. சிங்கள, தமிழ் மக்கள் என இருதரப்பினரும் மற்றைய மொழியைக் கற்பதில் நிறைய ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். இது உங்களுக்குக் கூட ஆச்சரியமானதாக இருந்திருக்கும்.... இல்லையா?

ப: ஆம்! ஆனால், இதுபோன்றவற்றை ஏற்கனவே பார்த்திருக்கிறேன். அரச அலுவலர்கள் தமது தரங்களுக்கு ஏற்ப 10,000 முதல் 25,000 வரை தமது இரண்டாவது மொழிக் கற்கைக்காகப் பெறுகிறார்கள். அதாவது தமிழர்கள் சிங்களம் கற்பதற்காகவும் சிங்களவர்கள் தமிழ் கற்பதற்காகவும் இது வழங்கப்படுகிறது. இதற்காக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறோம். நான் நினைக்கவில்லை வேறு எந்த நாடாவது தன்னுடைய ஊழியர்களுக்கு இப்படிக் கொடுப்பனவுகள் வழங்கும் என்று. இந்த விடயத்தில் மிக அக்கறையாகச் செயற்படுகின்றோம்.

கே: இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் பதவியில் இருப்பதற்குத் தடை விதிக்கும் அரசமைப்பின் பிரிவைத் திருத்தியதன் பின்னால் உள்ள உங்களது சிந்தனை என்ன என்பதைச் சொல்ல முடியுமா? அந்த மாற்றங்கள் அனைத்துலக ரீதியில் விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் உள்ளானதே.

ப: இலங்கையிலும் சரி வேறு நாடுகளிலும் சரி இரண்டாவது தடவையாகப் பதவி வகித்த பல தலைவர்களை நான் பார்த்திருக்கிறேன்; அதுதான் விடயம். இதை ஏன் சொல்கிறேன் என்றால், (இரண்டாவது பதவிக் காலத்தின்) முதல் ஆண்டில் நீங்கள் நிம்மதியாகப் பணியாற்ற முடியும். ஆம்! நீங்கள் வாக்குறுதிகளை வழங்கலாம். அந்த வருடத்தில் நீங்கள் சிறப்பாகப் பணியாற்றலாம். இரண்டாவது வருடம் வந்தவுடன், உங்கள் கட்சியில் உள்ளவர்கள் அடுத்த தலைவர் யார் என்பது தொடர்பில் தமக்குள் அடிபடத் தொடங்குவார்கள்.

அரச ஊழியர்களும், அடுத்த தலைவர் யார் என்பதிலேயே தமது கவனத்தைக் குவிப்பார்கள்; பிறகு வேலை நடக்காது. இரண்டாவது ஆண்டில் இருந்து (இரண்டாவது பதவிக் காலத்தின்) ஜனாதிபதி முடமான வாத்துப் போல மாறிவிடுவார். நீங்களே அவதானித்துப் பாருங்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது பதவிக் காலத்தின் போது நடந்தவற்றை. ஜே.ஆர்.ஜெவர்த்தனவுக்கு என்ன நடந்தது? மற்றவர்களுக்கு நடந்தவைகள் என்ன?

இவற்றையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். நானும் அந்தப் பொறிக்குள் போய் விழமாட்டேன். அதனால், நான் என்ன நினைத்தேன் என்றால்- போட்டியிட்டால் என்ன விட்டால் என்ன; அது வேறு விடயம் - அத்தகைய இடைஞ்சலில் இருந்து நான் தூர விலகி நிற்க வேண்டும் என்று. ஏனென்றால், எனது இரண்டாவது பதவிக் காலத்தில் - முதலாவது ஆட்சிக் காலத்தில் நான் வெற்றிகரமாகச் செயற்பட்டதன் காரணமாக மக்கள் எனக்கு இரண்டாவது பதவிக் காலத்தைத் தந்தார்கள் - சதி முயற்சிகள் இல்லாமல், மக்கள் முன்பாக, குறிப்பாக அரச ஊழியர்கள் முன்பாக என்னைத் தள்ளி விழுத்தாமல் இருப்பதற்காக, நான் சுதந்திரமாகச் செயற்படுவதற்காக எனக்கு அது தேவையாக இருந்தது.

இரண்டாவது பதவிக் காலம் என்பது மிக முக்கியமானது. மக்களுக்கான அபிவிருத்தியை - எனக்கு அவர்கள் தந்த ஆணை அதுதான் - அடைவதற்கு அது முக்கியம். அதனால்தான் நான் அதனைச் செய்தேன். அதற்காக, நான் அடுத்த மூன்றாவது, நான்காவது தடவைகளும் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடப் போகின்றேன் என்று பொருள் கொள்ள முடியாது. பொதுவாக இது (இரு தடவைகள் என்ற கட்டுப்பாடு) எமது தலைவர்களை இரண்டாவது பதவிக் காலத்தில் முடமாக்கி விடுகிறது.

**"இரண்டாவது பதவிக் காலத்தின் முதலாவது ஆண்டில் நீங்கள் நிம்மதியாகப் பணியாற்ற முடியும். ஆம்! நீங்கள் வாக்குறுதிகளை வழங்கலாம். அந்த வருடத்தில் நீங்கள் சிறப்பாகப் பணியாற்றலாம். இரண்டாவது வருடம் வந்தவுடன், உங்கள் கட்சியில் உள்ளவர்கள் அடுத்த தலைவர் யார் என்பது தொடர்பில் தமக்குள் அடிபடத் தொடங்குவார்கள்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சிக்கான பதவி வெற்றிடம்

கொழும்பில் தலைமையகம் கொண்ட நிதி நிறுவனத்தின் கிளிநொச்சி கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

1. நிதி ஆலோசகர்
2. குழுத் தலைவர்
3. நிதி நிறைவேற்று அதிகாரி

*தகைமை:-க.பொ.த(சா/த) 6 பாடங்களில் சித்தி,க.பொ.த(உ/த) சித்தி

*நேர்முகத் தேர்வு:-28.11.2010 ஞாயிற்றுக்கிழமை

இடம்:-கிளிநொச்சி (கனிஷ்ட) மகாவித்தியாலயம்

நேரம்:-காலை9 மணி தொடக்கம் நண்பகல்12 மணி வரை

நிர்வாகி

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சாந்தி ஜெயசீலன்**
திதி: சதுர்த்தசி

தோற்றம் 26★03★1963

மறைவு 26★11★2008

அன்பு, பாசம், அறிவு எல்லாம் அளவின்றி எமக்களித்து
பூமியில் எம்மை வாழ்வாங்கு வாழவைத்த - எம்
அன்புத் தெய்வமே! ஆண்டுகள் இரண்டு ஓடினாலும்
எம் மனதில் உம் நினைவுகள் என்றுமே வற்றாது

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (106481)

**கணவர்,
பிள்ளைகள்,
குடும்பத்தினர்.**

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
22.03.1941

மறைவு:
26.11.1991

அமரர்
**செல்லத்துரை கனகசபாபதி**
(முன்னாள் உதவி அரச அதிபர், ஓட்டுசுட்டான்)
திதி:-அபரபக்க பஞ்சமி(இன்று)

விதியென்றும் விளையாடிக் களல் மேவும்
வினை காணா வினாவொன்று அதில் மோதும்
பதியெந்தன் மனை நீங்கிப் போயின்று
பத்தொன்பது ஆண்டுகள் ஆயிற்றோ
கதியென்றே வாழ்கின்றேன் கண் பாரும்
காலமெலாம் உம் மூச்சில் வாழ்ந்திடுவேன்
நதி போன்று அருள் சுரும் நம்பிரானே
நம்மடுத்த பிறவியிலும் துணைவர் நீரே

அரசகேசரிப்பிள்ளையார் கோவிலடி,
நீர்வேலி.

நீள நினைந்திருக்கும்
துணைவி
இ. கனகசபாபதியும், குடும்பத்தினரும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25★08★1935

உதிர்வு
26★11★2009

**திருமதி குணபூஷணி கமலநாதன்**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை, கொடிகாமம்)

ஓராண்டு கழிந்தாலும் உங்கள் அன்பான நினைவுகளோடு நாம்....

கல்மடு வீதி,
தாண்டிக்குளம், வவுனியா.

கணவர், மகள், மருமகன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,நவ.26

காரைநகர் கோட்டக்கல்வி அலுவலர், தீவக வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு Iஐ சேர்ந்த அதிபர்கள் காரைநகர் கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கும் தீவக வலய உடற்கல்விப் பணிப்பாளர் பதவிக்கும் உடற்கல்வி ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

இரண்டு பதவிகளுக்குமான விண்ணப்பங்களை யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-236)

## கணித, விஞ்ஞான புதிர் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.26

மாகாண மட்ட கணித, விஞ்ஞான புதிர் போட்டிகள் கடந்த 9ஆம், 10ஆம் திகதிகளில் வவுனியா நகரில் இடம் பெற்றன.

இப்போட்டியில் 12 கல்வி வலயங்களையும் சேர்ந்த மாணவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

## கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பாலசுப்பிரமணியம்

கோப்பாய்,நவ.26

கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக வே.பாலசுப்பிரமணியம் கடந்த திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் அச்சுவேலி மத்திய கல்லூரியில் அதிபராக பணிபுரிந்து பதவி உயர்வுடன் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி ஏற்றுள்ளார். ஏற்கனவே கோட்டக் கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்த சி.சித்திரவடிவேல் பணிஓய்வு பெற்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமனம் பெற்றுள்ளார். (201-72)

## கஞ்சா விநியோகத்தர் கண்டியில் கைது

கொழும்பு,நவ.26

கண்டிக்கும் அயல் பிரதேசங்களுக்கும் நீண்ட காலமாக கஞ்சா விநியோகித்து வந்த இருவர் கட்டுகஸ் தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்த 12 கிலோ கஞ்சாவும் அதனைக் கடத்தப் பயன்பட்ட ஆட்டோவும் கைப்பற்றப்பட்டது.

வெரிலவாயாவிலிருந்து கண்டிக்கு ஆட்டோவில் கடத்தப்பட்ட கஞ்சாக் கட்டுக்கள் தொட்டபொல் கொல்ல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் சோதனையின் போது கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் சந்தைப் பெறுமதி 3 லட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டுகஸ் தோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.பி. தியகெலி நாவலவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-5)


**பூச்சாடிப் பிரியர்களுக்கு....**

பாவனைக்கு இலகுவான DSI பூச்சாடிகளை பெற நீங்கள் நாட வேண்டிய இடம் இல. 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 1378

**கடை அல்லது வீடு தேவை**

கொழும்பில் இயங்கிவரும் பிரபல கணினி வர்த்தக நிலையம் ஒன்றுக்கு யாழ். நகரப்பகுதியில் அல்லது அருகில் காட்சியறைக்கு வீடு அல்லது கடை தேவை.

தொடர்பு:
0772510994, 0777578277.

**காணியுடன் வீடும் விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, இருபாலை டச்றோட்டில் சுற்று மதில் உடன் கூடிய 10 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இது இருபாலைச் சந்தி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை, ... உண்டு.

தொடர்பு: 0771553248, 0726994524.

**அரியதோர் சந்தர்ப்பம்!!**

தனியார் மற்றும் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய இடம் யாழ்.நகர மத்தியில் உண்டு.

தொடர்பு:-0771397361

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நாராயணப்
புஸ்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**பண்டாரி இளையதம்பி**
(இளையவன்)

மலர்வு 20★01★1925

உதிர்வு 27★10★2010

கடந்த 27.10.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.11.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

போயிட்டி,
வினோபாஜி, நீர்வேலி. (106359)

**குடும்பத்தினர்.**

## நினைவலைகள்

நான்காம் ஆண்டு | முதலாம்ஆண்டு





அமரர் **குருநாதர் கந்தையா** | திருமதி **கந்தையா செல்லம்மா**

திதி:- 26.11 .2010

அன்புக்கு அணிகலனாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
சுமை தாங்கியாய் வாழ்ந்து
எம் வாழ்விற்கு ஒளியூட்டிய
தெய்வங்களே!
ஆண்டுகள் பல கடந்தாலும் மாறாது
உங்கள் நினைவுகள்
ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி. (106363)

**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் பஸ்தரிப்பிடங்களுக்கு கட்டடம் அமைக்குமாறு கோரிக்கை

அம்பாறை, நவ.26

கல்முனை மாநகரசபையின் ஆளுகைக் குட்பட்ட பிரதேசங்களில் பஸ் தரிப்பிடக் கட்டடங்களை அமைக்குமாறு மாநகராட்சி முதல்வர் எஸ்.இஸட். எம்.மசூர் மௌலானாவிடம் கல்முனை சமூக அபிவிருத்தி மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக் கோரிக்கையை வலியுறுத்தி மேற்படி மன்றத்தின் இணைச் செயலாளர் கலீல் எஸ்.முஹம் மட், முதல்வர் மௌலானாவுக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளார். இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கல்முனை மாநகராட்சிக் குட்பட்ட கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மருதமுனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் பஸ் தரிப்பிடங்கள் இல்லாமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

நீண்ட காலத்துக்கு முன்னர் இப்பகுதிகளில் லயன்ஸ் கழகத்தினால் பஸ் தரிப்பிடக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. எனினும், கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் நெடுஞ்சாலை விஸ்தரிப்புப் பணிகளுக் காக இவை அகற்றப்பட்டன. ஆயினும் அவற்றுக்குப் பதிலாக இதுவரை ஒரு பஸ் தரிப்பிடக் கட்டடம் கூட அமைக்கப்படவில்லை.

இதனால் மாணவர்கள், பெண்கள், வயோதிபர்கள் ஆகியோர் உட்படப் பொது மக்கள் அனைவரும் மிகுந்த சிரமங்களை யும் விபத்துகளையும் எதிர்கொள்ள நேரிடு கின்றது.

மழை காலங்களில் மேலதிக வாகன விபத்துகள் சம்பவிக்கின்றன. நெடுஞ்சாலை விஸ்தரிப்புக்குப் பின்னர் வாகனங்களின் வேகம் அதிகரித்துள்ளது. இதனால் பாதசாரிகளும், பஸ்களுக்காகக் காத்திருக் கும் பயணிகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

பஸ் தரிப்பிடங்களை நடைபாதை வியாபாரங்களும் வர்த்தக நிலையங்களின் விளம்பரப் பலகைகளும், காட்சிப் பொருட்களும் ஆக்கிரமித்துள்ளன. இதனாலேயே பயணிகள் அவதிக் குள்ளாகின்றார்கள்.

ஆகையால் பஸ் தரிப்பிடங்கள் என அடையாளப்படுத்தப் பட்டுள்ள இடங்களில் அதற்கான கட்டடங்கள் அமைக்கப் பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றோம். (ரூ)




## போலி நாணயத்தாள்களுடன் மூவர் கைது

கிண்ணியா பிரதேசத்தில் போலி நாணயத்தாள்களை வைத்திருந்த 3 இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 1000 ரூபா மற்றும் 100 ரூபா போலி நாணயத்தாள்கள் பல கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரிடம் பொருள்களை வாங்கிவிட்டு போலி நாணயத்தாள்களை வழங்கியபோதே குறித்த வர்த்தகர் பொலிஸாருக்கு 119 இலக்கம் மூலம் தகவல் வழங்கினார்.

அதையடுத்தே இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கிண்ணியா மற்றும் திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## பாடசாலைகளுக்கு புத்தகம் வழங்கும் நிகழ்வு; இந்தத் தடவை கிழக்கில் நடத்துவதற்கு ஏற்பாடு

திருகோணமலை, நவ.26

2011ஆம் ஆண்டுக்கான பாடசாலைப் புத்தகங்களை வழங்கும் தேசிய வைபவத்தை டிசம்பர் மாதம் 8ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் நடத்த கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

திருகோணமலை விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள தேசிய வைபவத்தில் அமைச்சர்களும் கல்வித்திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

2011ஆம் ஆண்டுக்கான இலவச பாடசாலை நூல்களுக்காக அரசாங்கம் 300 கோடி ரூபாய்களை செலவு செய்துள்ளதுடன் 364 வகையான நூல்களுக்காக 3 கோடி 7 லட்சம் பக்கங்களை அச் சிட்டுள்ளதாக இலங்கை கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் டபள்யூ.எம்.என்.ஜெ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

## சம்மாந்துறை மு.ம.விக்கு 2ஆம் 3ஆம் இடங்கள்

பெரியநீலாவணை, நவ.25

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக் கிடையே நடைபெற்ற கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயம் 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளது என பாடசாலை வழி காட்டல் ஆலோசனைப் பிரிவுப் பொறுப்பாசிரியர் கவிஞர் எம்.எம்.விஜிலி தெரிவித்துள்ளார்.

தரம் -6 தொடக்கம் தரம் - 9 வரையிலான மாணவர்களை உள்ளடக்கிய இரண்டாம் பிரிவில் 'தேனருவி' எனும் சஞ்சிகையும், ஆரம்பப் பிரிவு மாணவர்களின் 'ஊற்று' என்ற சஞ்சிகையுமே முறையே 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளன.

இம்முயற்சிக்குப் பக்கபலமாக இருந்த அதிபர் ரீ.எம்.தௌபீக், சஞ்சிகை வழிகாட்டி ஆசிரியைகள் ஆகியோருக்கு சஞ்சிகைக் குழுவின் சார்பாக கவிஞர் விஜிலி பாராட்டுத் தெரிவித்துள்ளார். (ளி)

## திருகோணமலை கல்வி வலயத்தில் இருந்து 301 தமிழ், சிங்கள ஆசிரியருக்கு இடமாற்றம்

திருகோணமலை, நவ.26

திருகோணமலை கல்வி வலயத்தில் இருந்து 268 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும், 33 சிங்கள மொழி மூலமான ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர். இவர்களுக்கான இடமாற்ற கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர் கே.முருகுப்பிள்ளை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளரின் சுற்று நிருபத்திற்கு அமைய இந்த இடமாற்றங்கள் செய்யப்படுகின்றன.

பாடசாலை ஒன்றில் தொடர்ச்சியாக 8 வருடங்களுக்கு மேல் சேவையாற்றும் 53 வயதுக்கு உட்பட்டவர்களே இந்த இடமாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2011 ஜனவரி மாதம் முதலாம் திகதி அவர்கள் புதிய பாடசாலையில் கடமையினைப் பொறுப்பேற்க வேண்டும். இடமாற்றத்திற்கு எதிரான மேன்முறையீடுகளைச் செய்ய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## இந்திய வம்சாவளி மக்களுக்காக பட்ஜெட்டில் பல திட்டங்கள் முன் வைப்பு

### பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம்

கொழும்பு, நவ.26

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களுக்காக ஜனாதிபதி பல திட்டங்களைஇந்த வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழிந்துள்ளார். வீடமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு போன்றவை அவற்றுள் அடங்குகின்றன. - என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சரும் இ.தொ.கா.தலைவருமான முத்து சிவலிங்கம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சில கம்பெனிகளின் செயற்பாடுகள் காரணமாக தேயிலைப் பயிர்ச்செய்கை அழிவை எதிர் நோக்கியுள்ளது. இதைத் தடுத்த நிறுத்த ஜனாதிபதி பல முன்மொழிவுகளை முன் வைத்துள்ளார். தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம் ஒரு பொற்காலம். கொடூர யுத்தம் முடிவுக்கு வந்து நாட்டில் அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மலையகப் பகுதி வீதிகளின் அபிவிருத்திக்கென கணிசமான நிதி வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் பாரிய பிரச்சினை ஏற்படு வதற்கு மொழிப் பிரச்சினையே பிரதான காரணமாக இருந்தது.

இப்போது ஏற்றுக்கொள்ளப் பட்டமும் மொழித் திட்டம் அன்று ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தால் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. மும்மொழித் திட்டத்திற்காக ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தில் அதிக நிதியை ஒதுக்கியுள்ளார். மும்மொழித் திட்டத்தை சரியாக அமுல்படுத்தினால் மீண்டும் ஒரு பிரச்சினை வராமல் தடுக்கலாம் - இவ்வாறு முத்து சிவலிங்கம் தெரிவித்தார். (ளி)

## மலையகப் பிரதேசங்களில் அடை மழை பல இடங்களில் மண்சரிவு; 6 பேர் காயம்

### தோட்டத் தொழிலாளர்களும் பாதிப்பு

கம்பளை,நவ. 25

கண்டி, மாத்தளை, மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடை மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் பல இடங்களில் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

கம்பளை பேராதனை வீதியில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட மண்சரிவில் இரு சிறுவர்கள் உட்பட அறுவர் காயமடைந்துள்ளனர். நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளன. சம்பவ இடத்தை கம்பளை நகரசபைத் தலைவர், அனர்த்த நிவாரன அதிகாரிகள் பார்வை யிட்டனர்.

கம்பளை பேராதனை வீதியில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் மின்கம்பிகள் அறுந்து அப் பகுதியில் மின்சாரம் தடைப் பட்டுள்ளது.




மாத்தளைப் பகுதியில் கடந்த திங்கட் கிழமை அதிகாலை முதல் கடும்மழை பெய்து வருவதால் களுதாவளை முதலாம் வட்டாரத்திலுள்ள வீடுகள் மண்சரிவினால் சேதமடைந்துள்ளன.

தம்புள்ள கலேவெல, பள்ளேபொல பகுதி களில் ஆயிரக் கணக்கான விவ சாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. அத்துடன், இப்பகுதியிலுள்ள சிற்றாறுகளை அண்மித்துள்ள வீடுகளும் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன.

இறத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வெலங்காவத்த, வெரபுகஸ்தன்ன பகுதிகள் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ள பிரதேசமாக அனர்த்த நிவாரண இடர்முகாமைத்துவ காரியாலயத்தினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இதனைய டுத்து, அங்குள்ள குடும்பங்களை வேறு இடங்களில் சென்று குடியமருமாறு அறிவிக்கப்பட் டுள்ளது.

உக்குவளை, இறத்தோட்டை, லக்கல, வில்கமுவ பிரதேசங்களிலுள்ள கிராமப் புறங்களிலும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் பிரதேச செயலாளர்கள் மக் களை மாற்று இடங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் கலஹா, தெல் தோட்டை, மடுல்கல, உன்னஸ்கிரிய, ஹந்தானை போன்ற இடங்களில் தொடர்ந்து பெய்யும் அடைமழையினால் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

மெனிக்ஹின்ன, கண்டி மஹியங்கனை வீதிகளிலும் சிறியளவில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. கம்பளை போத்தலப்பிடியவில் செவ்வாய்க் கிழமை பெய்த கடும் மழையைத் தொடர்ந்து கால்வாய்கள் பெருக் கெடுத்துள்ளன. (ளி)

## நானுஓயா - கெல்ஸி தோட்டத்தில் தொழிலாளர்கள் பணிபுறக்கணிப்பு

கொழும்பு,நவ. 25

தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனிக்கு உட்பட்ட கெல்ஸி தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 300 தொழிலாளர்கள் நேற்று முன்தினம் காலை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக இப்போராட்டம் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக் கப்பட்டது.

இது தொடர்பில் தெரிவிக் கப்பட்டவை வருமாறு:-

அண்மையில் தோட்டத்திற்கு கணக்காய்வு குழுவொன்று விஜயம் செய்தது. அப்போது தோட்ட நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவர் தான் மறைத்து வைத்திருந்த பெருமளவு தேயிலையை தோட்டத்திலுள்ள கொம் போஸ் உரம் தயாரிக்கும் பகுதியில் கொட்டி விட்டுச் சென்றிருந்தார்.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்தும் இவ் விடயம் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ளக் கோரியுமே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளப்படுகின்றது என தோட்டத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் போராட்டம் தொடர்பாக கெல்ஸி தோட்ட முகாமையாளர் பண்டார தசநாயக்க தெரிவிக்கையில்,

தொழிலாளர்கள் நேற்று வேலைக்கு வரவில்லை. தோட்ட உத்தியோகத்தர் ஒருவருக் கெதிராக நானு ஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கெல்ஸி தோட்டத்தில் நீண்ட காலமாக கொம்போஸ் உரம் தயாரிக்கும் வேலைத் திட்டமொன்று முன்னெடுக் கப்பட்டு வருகின்றது - என்று தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின்ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்குரிய ஆசிரியர்:
ரி.அகிலன்,
ACA கல்வி நிலையம்,
திருகோணமலை.
தொ.பே.இல: 077-2267801

G.C.E.(O/L)
விசேட வலம் 3

## வரலாறு - I 1 மணித்தியாலம்

01. சூளவம்சத்தை அறிமுகப்படுத்தியவர்,
1) கைபர் பணிடிதா 2) றொபட் நொக்ஸ்
3) வித்யாசக்கரவர்த்தி 4) மகாநாமதேரர்

02. வரலாற்றுக்கு முற்பட்ட மக்களின் தானியப்பயன்பாடு பற்றி விளக்கும் மூலாதாரம் கிடைக்கப் பெற்ற இடம்,
1) பதிய கம்பளை 2) இப்பன்கட்டுவ 3) பாகியன்கல 4) பெலிலேன

03. பின்வரும் குடியேற்றங்களை ஒழுங்குபடுத்துக.
1. கதம்பநதி A. விஜிதபுர
2. மகாவலி நதி B. தீகவாபி
3. கிரிந்திஓயா C. மகாகம
4. கல்லோயா D. அநுராதகம
1) DABC 2) DBAC 3) DACB 4) DBCA

04. "டொமோகிரபியா" என்ற நூலின் ஆசிரியர்,
1) கொஸ்மஸ் 2) பிளினி 3) அரிஸ்டோட்டில் 4) மெதஸ்தனிஸ்


05. பாளிமொழியின் பொற்காலம்,
1) யாப்பகுவ 2) பொலநறுவை 3) அநுராதபுரம் 4) கோட்டை

06. சீன செங்வேஹா சேனாபதி படையெடுப்புக்கு காரணமானவன்,
1) 3ஆம் விஜயபாகு 2) 6ஆம் விஜயபாகு
3) வீர அழகேஸ்வரன் 4) 1ஆம் கஜபாகு

07. கலிங்க மன்னனின் படையெடுப்பின்போது பொலநறுவை மன்னன்,
1) பராக்கிரம பாண்டியன் 2) 1ஆம் பராக்கிரமபாகு
3) 5ஆம் மகிந்தன் 4) நிஸ்ஸங்கமல்லன்

08. மகாவலி கங்கையின் அயலிலுள்ள சிவனொலிபாத மலையின் பிரதான பாதையில் அமையப் பெற்ற இராசதானி,
1) கம்பளை 2) யாப்பகுவ 3) கண்டி 4) தம்பதெனியா

09. 1. பனாகடுவ செப்புசாசனம் A. வசபன்
2. வல்லிபுர சாசனம் B. 1ஆம் விஜயபாகு
3. தெவனாகல சாசனம் C. மகிந்தன்
4. மிகிந்தலை சாசனம் D. 1ஆம் பராக்கிரமபாகு
1) DACB 2) ADCB
3) ABCD 4) BADC




10. சங்கமித்தை, பத்தசங்சானா வருகையுடன் தொடர்புடைய துறைமுகங்களை குறிக்கும் எழுத்துக்கள்,
1) AB 2) BC
3) ED 4) FA

11. F என்ற எழுத்து மிக பண்டைய காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தமை,
1) கனிய மணல் 2) பவளப்பாறைகள்
3) முத்து 4) உப்பு

12. மும்மொழியிலான கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட துறை முகத்தை குறிக்கும் எழுத்து,
1) A 2) B
3) D 4) E

13. கி.பி 5ஆம் நூற்றாண்டில் "ஜானகி ஹரன" என்ற சமஸ்கிரத நூலை எழுதிய மன்னன்,
1) அக்ரபோதி 2) குமாரதாச 3) 1ஆம் சேனன் 4) 2ஆம் அக்பர்

14. அத்துகல்புரவை இராசதானி ஆக்கிய மன்னன்,
1) 1ஆம் புவனேகபாகு 2) 2ஆம் புவனேகபாகு
3) 3ஆம் பாராக்கிரமபாகு 4) 5ஆம் பராக்கிரமபாகு

15. விஜய நகர பேரரசு தோற்றம் பெறும்போது டில்லியின் ஆட்சி வம்சம்,
1) வஹல் 2) வோடி 3) கில்ஜி 4) துக்ளக்

16. சுதந்திர, சமத்துவம், சகோரத்துவம் என்ற தொனிப்பொருள் கொண்ட புரட்சி,
1) ரஷ்ய புரட்சி 2) ஆங்கிலப் புரட்சி
3) பிரான்ஸிய புரட்சி 4) கைத்தொழில் புரட்சி

17. A. இருசபை பாராளுமன்றம்.
B. நிறைவேற்று அதிகாரம்.
C. பிரதமர் தலைமையிலான மந்திரி சபை
D. டொமினியன் அந்தஸ்து
E. விகிதாசார தேர்தல்.
சோல்பரி யாப்பு கொண்டிராத அம்சங்கள்,
1) AB 2) BC 3) BE 4) AE

18. மாளிகாகந்தை வித்தியோதய பிரிவெனாவை அமைத்தவர்,
1) வலானே சித்தார்த்த தேரர் 2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
3) இரத்மலான தர்மலோக தேரர் 4) மீகெட்டுவத்த குணானந்த தேரர்

19. இன்றைய பௌத்த சமயக் கொடியை வடிவமைத்தவர்,
1) அனகாரிக தர்மபால 2) மீதெட்டுவத்த குணானந்த தேரர்
3) வெஹன்றி ஸ்ரீல் ஒல்கொட் 4) D. S. சேனாநாயக்க

20. இந்திய சுதந்திர போராட்டத்தில் "பஞ்சாப் சிங்கம்" என வர்ணிக்கப்பட்டவர்,
1) கோபால கிருஷ்ண தோதலே 2) பிபின் சந்திரபோஸ்
3) லாலா லஜ்பதி ராய் 4) சுரேந்திர நாத் பாணர்ஜி

21. ஜப்பானிய நெப்போலியன் வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படுபவன்,
1) நொபுனகா 2) ஹிதேயோஷி தொயோ தொமி
3) டொகுகாவா இயாஷி 4) யொசித் தொமோ

22. நவீன பொதுவுடமைச் சீனாவின் சிற்பி,
1) ஷியாவ் - கே. ஷேக் 2) மா - ஓ - சேதுங்
3) யுவான் ஷி காய் 4) சு - யென் லாய்

23. இலங்கை வரலாற்றின் கடைசிச் சிங்கள மன்னன்,
1) 8ஆம் வீரபராக்கிரமபாகு 2) வீரபராக்கிரம நரேந்திர சிங்கன்
3) கீர்த்தி இராஜசிங்கன் 4) ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன்

24. ஸ்ரீ சிங்களாதீஸ்வர என்ற பட்டத்தை கொண்டவர்,
1) முதலாம் விமலதர்ம சூரியன் 2) மகாபராக்கிரமபாகு
3) 2ஆம் இராஜசிங்கன் 4) 6ஆம் பராக்கிரமபாகு

25. 1. தந்துரே போர் A. அல்போன்ஸா டி சூஸா
2. கண்ணொடுவ போர் B. தியோத டி மெல்லோ கஸ்ரோ
3. முல்லேரியா போர் C. பெரோலோ பேஸ் டீ சூஸா
1) CBA 2) BCA 3) ABC 4) BAC

26. முதலாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயரை இந் நாட்டிலிருந்து விரட்ட முடியாமல் போனமைக்கான காரணம்,
1) பொருளாதார சீர்குலைவு.
2) அரசியல் வாரிசு பிரச்சினை.
3) பலமான கடற்படை இன்மை.
4) மக்களின் ஆதரவு போர்த்துக்கேயருக்கு கிடைத்தமை.

27. சிலுவைப்போரின் விளைவு அல்லாதது.
1) சுரங்கம் அமைத்தல். 2) புறாக்களைக் கொண்டு தூதுவிடல்.
3) சீன வெடிமருந்து உபயோகம். 4) மானிய முறை தோற்றம்.

28. கிளாஸ் நொட்ஸ், பெடஸ்ரொய்பொய்கா என்ற இரு சீர்திருத்தங்களின் விளைவு.
1) ரஷ்ய புரட்சிக்கு வழிவகுத்தது.
2) ஐந்தாண்டு திட்டத்திற்கு ரஷ்யாவை புகுத்தியது.
3) சோவியத் ரஷ்யா உடைவு.
4) விண்வெளி ஆய்வில் ரஷ்யா ஈடுபட்டமை.

29. 2ஆம் உலக மகா யுத்தத்துடன் தொடர்பு அற்ற நிகழ்வு,
1) பேர்ள் துறைமுகம் தகர்ப்பு. 2) ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்.
3) லூசிட்டானியா கப்பல் மூழ்கடிப்பு. 4) ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சு.

30. 2ஆம் உலக மகாயுத்த நேச அணித் தலைவர்கள்,
1) ஜோசப் ஸ்ராலின், ஆட்ரோ வில்சன், கிளமென்சோ
2) வின்சன் சேர்ச்சில், ஹிட்லர், முசோலினி
3) பிராஜ்வின் ரூஸ்செல்ட், ஜோசப் ஸ்ராலின், ஹரோஷித்தோ
4) வின்சன் சேச்சில், பிராங்ளின் ரூஸ்வெல்ட், ஜோசப் ஸ்ராலின்

31. தற்போதைய ஐ. நா சபை செயலாளர்,
1) பான் கீ மூன் 2) கோற்பி அனான் 3) ட்றிக்விலி 4) மன்மோகன் சிங்

32. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கு காரணமாகாத விடயம்,
1) அமெரிக்காவின் பங்கு இன்மை.
2) ஜேர்மனி, ரஷ்யா அங்கத்துவம் இன்மை.
3) தனி இராணுவப் படை இன்மை. 4) ஹிட்லர் சங்கத்தில் இணைந்தமை.

33. "தீப்பொறி" என்ற பத்திரிகையின் ஆசிரியர்,
1) ஹிட்லர் 2) முசோலினி 3) லெனின் 4) ஸ்டொஸ்கி

34. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்ட நாடுகள் இணைந்து உருவாக்கிய அமைப்பு,
1) சார்க் 2) ஒபெக் 3) பிம்ஸ்ரெக் 4) பொதுநலவாயம்

35. இலங்கைக்கு BMICH கட்டடத்தை அமைத்துக் கொடுத்த நாடு,
1) ஐ. அமெரிக்கா 2) சீனா 3) ஜப்பான் 4) ரஷ்யா

36. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் அல்லாதது,
1) பிரதமரை நியமிப்பது. 2) உயர் நீதிமன்ற நீதிபதி பதவி நீக்கம்.
3) அமைச்சரவை நியமனம். 4) பல்கலைக்கழக ஆணைக்குழு நியமம்.

37. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் அமையப்பெற்ற நாடு,
1) இந்தியா 2) சீனா 3) இலங்கை 4) பிலிப்பைன்ஸ்

38. துரித மகாவலி திட்டம் ஆரம்பமான இடம்,
1) பொல்கொல்ல, நுவரெலியா 2) அம்பாறை, வெலிஓயா
3) உடவளவை, வெலிஓயா 4) பொல்கொல்ல, போவதென்ன

39. இலங்கை ஐக்கிய நாடுகளின் சபையில் இணைந்து கொண்டபோது இலங்கையின் பிரதமர்,
1) D. S. சேனாநாயக்க 2) டட்லி சேனாநாயக்க
3) சிறிமாவோ பண்டாரநாயக்க 4) ஜோன் கொத்தலாவல

40. "PL 480" ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு கோதுமையைக் குறைந்த விலையில் வழங்கும் நாடு,
1) சீனா 2) ஜப்பான் 3) ஐ. அமெரிக்கா 4) ரஷ்யா

## வரலாறு - II 3 மணித்தியாலங்கள்

01. 1) பின்வரும் (1) இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்கள் எல்லாவற்றையும் இலங்கைப் படத்திலும், (2) இன் கீழ் காட்டப்பட்டுள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற இடங்களை உலகப் படத்திலும் குறிக்குக.
1. கோகர்ண, தீகவாபி, அனுராதகம, பலாங்கொட, வல்லிபுரம், தந்துரே, மாகம, மினிப்பே, கல்யாணி, கொடவாய.
2. தாமிரலிப்தி, கீல்கால்வாய், பிலிப்பைன்ஸ், மகலன்தொடுகடல், துங்கபத்ராநதி, புத்தகயா, ஆப்கானிஸ்தான், அல்ப்ஸ் மலை.

2) 1. கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்டவர்களைக் குறிப்பிடுக.
A. ஜுரி சபையை உருவாக்கிய ஆங்கிலேய ஆட்சியாளன்.
B. மது ஒழிப்பு இயக்கத்தின் தந்தை.
C. 1972ஆம் ஆண்டு 1ஆம் குடியரசு யாப்பை வரையும் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டவர்.
D. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் பௌத்த சமய பணிக்கு நியமிக்கப்பட்ட பிக்கு

2. A, B, C, D கலைப்படைப்புக்களை முறையே குறிப்பிடுக.


A


B


C


D

3. A, B, C, D என குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கு அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்தெடுத்து விடை எழுதுக.
A. காபனாரி இயக்கத்தினை ஆரம்பித்தவர்.
B. இந்தியாவின் நெப்போலியன் என வர்ணிக்கப்படுபவன்.
C. நீண்ட நடை பயணத்தினால் கொமியூனிஸ வாதத்தை வளர்த்தவர்.
D. இரண்டாம் உலக மகா யுத்தத்தை நடத்திய ஜப்பானிய மன்னன்.
(கரிபால்டி, ஜோசப்மசினி, அசோகன், சமுத்திரகுப்தன், சன்-யாத்-சென், மா-ஓ-சேதுங், ஹிரோஷித்தோ, நொபுனகா)

02. 1) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய கல்வெட்டுக்களைத் தருக.
1. துறைமுகத்தில் அறவிடப்படும் தீர்வைகள்.
2. தேங்காய் எண்ணெய்யினால் விளக்கிடும் முறைகள்.
3. நீதிமன்ற அபராதங்களை விஹாரைக்கு வழங்கள்.

2) பின்வரும் நதிக்கரைகளில் தோற்றம் பெற்ற குடியேற்றங்கள் ஒன்று வீதம் தருக.
A. கதம்பநதி. B. கிரிந்தி ஓயா.
C. மகாவலி கங்கை. D. கல்க நதி.

3) பண்டுகாபயன் இலங்கையில் சிறந்த மன்னன் என்பதை இரு ஆதாரங்கள் ஊடாக விளக்குக.
4) இலங்கையில் பௌத்த சமயம் பரவியமையால் ஏற்பட்ட சமூக, கலாசார மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக.

(17ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா பங்குபற்றிய கூட்டங்களின் வீடியோ மூலப்பிரதியைச் சமர்ப்பிக்குக!

## மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பு

கொழும்பு, நவ. 26

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கலந்துகொண்ட கூட்டங்கள், ஊடகவியலாளர் சந்திப்புகள் ஆகியவற்றின் போது எடுக்கப்பட்ட வீடியோ நாடாக்களின் மூலப் பிரதிகளை எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மன்றில் சமர்ப்பிக்குமாறு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

'ட்ரயல் எட் பார்' முறையில் மேல் நீதிமன்றில் நடைபெற்று வரும் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி.வராவெல, சர்பிக் ரஷிக் ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போதே மேல் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. வெள்ளைக்கொடி விவகார வழக்கில் 6 தொடக்கம் 15 வரையிலான 10 சாட்சிகளை புதன்கிழமை மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. இதன்படி சிலர் நேற்றுமுன்தினம் மன்றில் ஆஜராகினர்.

விசாரணையில் முதலாவதாக 'தெரண' சிங்கள மொழி மூல தொலைக்காட்சியின் இரத்தினபுரி மாவட்ட செய்தி யாளரான கயான் குடாகமவை பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் வசந்த நவரட்ன பண்டார குறுக்கு விசாரணை செய்தார்.

**பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல்:-**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி இரத்தினபுரி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் உரையாற்றியபோது எடுக்கப்பட்ட வீடியோ ஒளிநாடா, 'தெரண' தொலைக்காட்சியில் 2009ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் திகதி இரவு 8 மணிச் செய்தியில் ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒளிநாடாவை கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் அனுமதியுடன் பெற்றேன். அத்துடன் 'சிரச' தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டதும் உள்ளது. பிரதிவாதி சட்டத்தரணிக்கு ஏதும் ஆட்சேபனை இருந்தால் அதனை அவர் தெரிவித்த பின்னர் முதலாவது தெரண வீடியோ ஒளிநாடாவை மன்றில் ஒளிபரப்ப முடியும்.

இதன்போது மன்றில் ஆசனத்திலிருந்து எழுந்த பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவ ஹெட்டி:-

அவ்வாறு வீடியோ ஒளிநாடா மன்றில் ஒளிபரப்பவேண்டும் என்றால், அந்த வீடியோ ஒளிநாடா தொகுக்கப்படாத மூலப் பிரதியாக காணப்பட வேண்டும் என்ற தனது கருத்தை முன்வைத்தார். இதனை அடுத்து, குறுக்கு விசாரணை செய்ய பிரதி சொலிசிஸ்டர் ஜெனரலுக்கு நீதியரசர்கள் அனுமதி வழங்கினர்.

**கேள்வி:-** உங்கள் தொழில் என்ன?

**பதில்:-** நான் ஒரு ஊடகவியலாளர்.

**கே:-** இந்தத் தொழிலில் நீங்கள் எப்போது இணைந்தீர்கள்?

ப:- 2001ஆம் ஆண்டு.

**கே:-** 2009ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் திகதி எந்த கூட்டத்துக்கு அல்லது எங்கு சென்றீர்கள்?

ப:- இரத்தினபுரியில் நடைபெற்ற சரத் பொன்சேகாவின் கூட்டத்துக்குச் சென்றேன்.

**கே:-** இவ்வாறு ஒரு கூட்டம் நடைபெறவுள்ளது என்று உங்களுக்குயாரால் அறிவிக்கப்பட்டது?

ப:- தெரண செய்திப் பிரிவின் அசோக்க வீரசிங்க என்பவரால் எனக்கு அறிவிக்கப்பட்டது. இரத்தினபுரியில் நடைபெறும் சரத் பொன்சேகாவின் கூட்டத்தை வீடியோ செய்யும்படி அவர் எனக்குக் கூறினார்.

**கே:-** நீங்கள் தனிப்பட்ட வகையிலா அந்தக் கூட்டத்துக்கு சென்றீர்கள்?

ப:- இல்லை. ஒரு ஊடகவியலாளனாகச் சென்றேன்.

**கே:-** அந்தக் கூட்டம் எங்கே நடந்தது?

ப:- இரத்தினபுரி பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் நடைபெற்றது.

**கே:-** அந்தக் கூட்டத்தில் சரத் பொன்சேகாவினால் கூறப்பட்டவை அனைத்தையும் முழுமையாக வீடியோ பதிவு செய்தீரா?

ப:- ஆம். ஆனால், அவர் கூறியவை எனக்கு விளங்கிக் கொள்ள முடியாமலிருந்தது. நான் விடியோ பதிவை மாத்திரம் மேற்கொண்டேன்.

**கே:-** எந்த சாதனத்தில் விடியோ பதிவை மேற்கொண்டீர்கள்?

ப:- வீடியோ கமரா மூலம்.

**கே:-** அதன்பின்னர் என்ன செய்தீர்கள்?

ப:- அவற்றை தெரண செய்திப் பிரிவுக்கு அனுப்பினேன்.

**கே:-** நீங்கள் தெரண செய்திப் பிரிவுக்கு அனுப்பிய பின்னர் அந்த வீடியோ காட்சி, செய்தியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டதை நீங்கள் பார்த்தீர்களா?

ப:- இல்லை. ஏனென்றால் நான் வசிக்கும் பிரதேசத்தில் தெரண தொலைக்காட்சி தெளிவில்லை. தெளிவான அலைவரிசையில் பார்க்க முடியாது.

**கே:-** அந்த வீடியோ காட்சி செய்தியில் ஒளிபரப்புச் செய்யப்பட்டமை உங்களுக்குத் தெரியுமா?

ப:- ஆம்.

**கே:-** அந்த வீடியோ காட்சி, தெரண செய்திப் பிரிவிலுள்ள தரங்க என்ற நபரால் செய்திகளுக்காக தயார்ப்படுத்தப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா?

ப:- ஆம்.

**கே:-** செய்தியில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட வீடியோ காட்சி தன்னால் பதிவு செய்யப்பட்டதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

ப:- ஏற்கிறேன்.

இதன்போது எழுந்த பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவ ஹெட்டி:-

1991ஆம் ஆண்டு 14ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இதன் மூலம் மீறப்பட்டுள்ளது. வீடியோ பதிவு செய்யப்பட்ட காட்சி தொகுக்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் திகதி இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டத்தில் சரத் பொன்சேகாவினால் வெளியிடப்பட்ட கருத்துகள் அடங்கிய வீடியோ ஒளிநாடா தொகுக்கப்பட்டதாகவும், அதன் ஒரு பகுதியே தனக்கு ஒளிபரப்பப்பட்டமை அறிவிக்கப்பட்டதாகவும் சாட்சி சற்று முன்னர் தெளிவாக மன்றில் கூறினார். விடியோ மூலப் பிரதியின் ஒரு பகுதியையே ஒளிபரப்பு செய்தார்கள் என்றால், அந்த வீடியோ காட்சி தொகுக்கப்பட்டதே. மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இதிலிருந்து தெரிய வருகிறது.

இதற்கு பதிலளித்த பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல்:-

வீடியோ ஒளிநாடா செய்திப் பிரிவுக்கு கிடைக்கும்போது அதில் சிறிதளவேனும் மாற்றமோ, வித்தியாசமோ உட்படுத்தப்படாது. செய்திக்குத் தேவையான பகுதி மாத்திரம் தொகுத்துக் கொள்ளப்படுகிறது. அந்தப் பகுதியையே நிறுவனம் தன் பாவனைக்கும் வைத்துக்கொள்ளும் - என்றார்.

**பிரதிவாதி சட்டத்தரணி:-**

அப்படியானால் வீடியோ ஒளிநாடாவின் மூலப் பிரதியை (Original) மன்றில் சமர்ப்பிக்க முடியாதா என சவால் விடுத்தார். இல்லை. ஒரு மாற்றமும் செய்யப்படவில்லை. செய்தி ஒளிபரப்புக்குத் தேவையான பகுதியே தொகுக்கப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்பட்டுள்ளது - என்றார்.

இந்நிலையில் பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் வசந்த நவரட்ன பண்டாரவுக்கும், பிரதிவாதி சட்டத்தரணி நளின் லத்துவ ஹெட்டிக்கும் சூடான விவாதம் இடம்பெற்றது.

**பிரதிவாதி சட்டத்தரணி:-**

வீடியோ ஒளிநாடாவில் மாற்றம் செய்யப்பட்டிருந்தால், அது சாட்சியைப் பாதிக்கும். மீண்டும் கூறுகிறேன். அந்த ஒளிநாடா மாற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

**பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல்:-**

இந்த வீடியோ ஒளிநாடாவின் மூலப்பிரதி தேவைப்படுவதாக பிரதிவாதி சட்டத்தரணி பிடிவாதம் பிடிக்கின்றார். அது தேவைப்படாது. எவரும் எவ்வித மாற்றமும் செய்யவில்லை. அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டிருக்குமானால், 45 நாள்களுக்குள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு பிரதிவாதி சட்டத்தரணி கோரியிருக்கலாமே. எனவே, எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என என்னால் நிரூபிக்க முடியும். இதில் மாற்றமோ, வித்தியாசமோ ஏற்படுத்தவில்லை.

**பிரதிவாதி சட்டத்தரணி:-**


நான் அந்த வீடியோ ஒளி நாடாவில் வித்தியாசம் செய்யப்பட்டுள்ளது எனக் கூறவில்லை. 'கொலை செய்தல்' என்ற சொல்லை, 'கொலை செய்' என்றும் தொகுத்து ஒளிபரப்புச் செய்ய முடியும்.

மேல் நீதிமன்றில் நேற்று விடியோ ஒளிநாடா ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் ஒளிபரப்பப்படவில்லை. இந்நிலையில், வீடியோ மூலப் பிரதிகளை எதிர்வரும் 29ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதனையடுத்து, இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 29ஆம் திகதி காலை 11 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

---

03. 1) பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புடையவர்களைத் தருக.
   A. பாகியன் பிக்கு அபயகிரி விகாரைக்கு வருகை தரும்போது இலங்கையின் ஆட்சியாளன்.
   B. தம்புள்ள விகாரையை இறுதியாக புனரமைத்த அரசன்.
   C. வலகம்பா மன்னனினால் வழங்கப்பட்ட அபயகிரி விகாரையை பரிசாகப் பெற்றவர்.
   D. இலங்கையை இறுதியாக ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த மன்னன்.
2) அநுராதபுர காலத்தில் இடம்பெற்ற 4 அந்நிய படையெடுப்புக்களையும் அதோடு சம்பந்தப்பட்ட இலங்கை மன்னர்களையும் தருக.
3) இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அரசியல் தொடர்புகள் 4 தருக.
4) பொலநறுவை இராசதானியின் சீரழிவுக்கு கலிங்க மாகனே காரணம் என்பதை தகுந்த ஆதாரத்துடன் சுருக்கமாக விளக்குக.

04. 1) பின்வரும் நூல்கள் எழுதப்பட்ட இராசதானி காலத்தைத் தருக.
   A. தலதா சரித
   B. திரசசந்தேச
   C. சந்தர் மரத்னாகரய
   D. கவிசிலுமின
2) இராசதானி தென்மேற்கே இடம் பெயர்ந்தமையால் மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக.
3) 2 ஆம் பராக்கிரமபாகு மன்னன் நாட்டுக்கு ஆற்றிய அரசியல், சமய பணிகளை 3 வீதம் குறிப்பிடுக.




05. 1) பின்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ள A, B, C என்னும் எழுத்துக்குரிய இராசதானிகளை மன்னருடன் குறிப்பிடுக.
2) பின்வரும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய கண்டி ஆட்சியாளர்களை A, B, C, D ஒழுங்கில் தருக.
   A. முதலாம் இராஜசிங்கனை வென்று கண்டியின் ஆட்சியாளனாக மாறியவன்.
   B. குசுமாசனதேவியை மணந்து கண்டி ஆட்சியாளனான 2ஆம் இராஜசிங்கனின் தந்தை.
   C. 1766 ஹிங்குராங்கொத்த ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்டவன்.
   D. 1782 இல் ஹியூபொயிட் என்ற ஆங்கிலேயனை சந்தித்தவன்.
3) சீதாவாக்கை எழுச்சிக்கு பங்களித்த காரணிகள் 3உம் வீழ்ச்சிக்கு பங்களித்த காரணிகள் 3உம் தருக.
4) ஆங்கில கிழக்கிந்திய கம்பனிக்கு எதிராக 1797இல் கரையோரக் கிளர்ச்சிக்கு காரணத்தை சுருக்கமாக விளக்குக.

06. 1) பின்வரும் ஆண்டில் உருவாக்கப்பட்ட யாப்புக்களைத் தருக.
   A. 1912   B. 1921
   C. 1931   D. 1978
2) ஆங்கிலேயர் இலங்கையின் நீர்ப்பாசனத்துக்கு சேவையாற்ற வேண்டி ஏற்பட்டமைக்கான காரணங்களில் இரண்டைக் கூறி விளக்குக.
3) ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கைக்கு கிடைத்த பொருளாதார நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக.
4) பின்வருவோரில் இருவரைத் தெரிந்து சிறுகுறிப்பு எழுதுக.
   1. ஹென்றி ஒல்கொட்   2. A. E. குணசிங்க
   3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்   4. அறிஞர் சித்திலெப்பை

07. 1) குப்த பேரரசில் சிறந்த மன்னர்கள் 4ஐ குறிப்பிடுக.
2) ஆரியர் தமது அதிகாரத்தை நிலைநாட்ட மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடுக.
3) இந்தியாவில் டில்லி சுல்தான் ஆட்சி ஏற்படுவதில் பங்களித்த காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.
4) இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியில் ஏற்பட்ட விளைவுகளை உதாரணத்துடன் விளக்குக.

08. 1) இந்தியாவில் சுதந்திர போராட்டத்திற்கு பங்களித்த தீவிரவாதப் போக்குடையோர் மூவரைத் தருக.
2) 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலவரத்தினால் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள் 4 தருக.
3) மா-ஓ-சேதுங் மேற்கொண்ட கலாசார புரட்சியால் ஏற்பட்ட விளைவுகள் மூன்று தருக.
4) ஜப்பானின் எழுச்சிக்கு மெஜ்ஜியின் சீர்திருத்தம் பங்களித்த விதத்தை உதாரணத்துடன் விளக்குக.

09. 1) ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகள் எவை?
2) ஐரோப்பாவில் மானிய முறை வீழ்ச்சி கண்டமைக்கான காரணங்கள் 2 விளக்குக.
3) ஐரோப்பாவின் மறுமலர்ச்சியின் தொட்டில் என இத்தாலி வர்ணிக்கப்படும் காரணத்தை உதாரணத்துடன் விளக்குக.
4) மத்திய கால ஐரோப்பாவில் ஜேர்மனியில் சமய புரட்சி ஏற்படுவதில் பங்களித்த காரணிகளைக் குறிப்பிடுக.

10. 1) ஐக்கிய நாடுகள் சபையில் பதவி வகித்த மூவரை அவர்களின் தாய்நாட்டுடன் குறிப்பிடுக.
2) பனிப்போர் காலத்தில் 3ஆம் உலக போர் ஏற்படாமல் ஐ.நா தடுத்த சந்தர்ப்பங்கள் 2 ஐச் சுருக்கமாக விளக்குக.
3) உலக மகா யுத்தம் ஏற்பட கைத்தொழில் புரட்சி வழிவகுத்த விதத்தைச் சுருக்கமாக விளக்குக.
4) அணிசேரா அமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கங்கள் எவை?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கப் பெறுகை அறிவித்தல் சலவைச் சேவை 2011

## சுகாதார சேவைகள் பிரிவு, யாழ்ப்பாணம்

2011ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள அரசாங்க வைத்திய நிறுவனங்களுக்கு சலவைச் சேவை வழங்குவதற்கான பெறுகைகள் கோரப்படுகின்றன. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் பெறுகைப் படிவங்களை உரிய பெறுகைப்பத்திரப் பணம் 200/= செலுத்தி 2010.12.09ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

பெறுகைகள் 2010.12.10ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும்.

பெறுகைகள் கடித உறையிலிட்டு சீல் வைக்கப்பட்டுப் பெறுகை விவரம் தெளிவாக எழுதப்பட்டு இதற்கென வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

வேறு விவரங்கள் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ள முடியும். நிர்ணயிக்கப்பட்ட விலை வீதங்களுக்கு மேலாகக் கேட்கப்படும் பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

01. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.
02. ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.
03. ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.
04. பிரதேச வைத்தியசாலை, நெடுந்தீவு.
05. பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.
06. பிரதேச வைத்தியசாலை, புங்குடுதீவு.
07. ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி.
08. பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.
09. பிரதேச வைத்தியசாலை, சங்கானை.
10. பிரதேச வைத்தியசாலை, கோப்பாய்.
11. பிரதேச வைத்தியசாலை, அனலைதீவு.
12. பிரதேச வைத்தியசாலை, காரைநகர்.
13. பிரதேச வைத்தியசாலை, நயினாதீவு.
14. பிரதேச வைத்தியசாலை, வேலணை.
15. பிரதேச வைத்தியசாலை, வட்டுக்கோட்டை.
16. பிரதேச வைத்தியசாலை, பண்டத்தரிப்பு.
17. பிரதேச வைத்தியசாலை, மருதங்கேணி.
18. பிரதேச வைத்தியசாலை, வரணி.
19. பிரதேச வைத்தியசாலை, கொடிகாமம்.
20. பிரதேச வைத்தியசாலை, குருநகர்.
21. பிரதேச வைத்தியசாலை, அளவெட்டி.
22. பிரதேச வைத்தியசாலை, கோண்டாவில்.
23. பிரதேச வைத்தியசாலை, கரவெட்டி.
24. பிரதேச வைத்தியசாலை, மானிப்பாய்.
25. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, சுன்னாகம்.
26. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, கொக்குவில்.
27. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, இணுவில்.
28. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, பருத்தித்துறை.
29. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, புன்னாலைக்கட்டுவன்.
30. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, புத்தூர்.
31. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, உடுவில்.
32. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, உரும்பிராய்.
33. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, வட்டுக்கோட்டை.
34. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, இளவாலை.
35. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, கைதடி.
36. ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு, ஏழாலை.
37. மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்.

*வைத்தியகலாநிதி, ஆ. கேதீஸ்வரன்,*
*பிராந்திய சுகாதார சேவைகள்*
*பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(ஏ/572569)


**Computer Express**
Institute of Information Technology

6 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

* Dip. in computer science. 4 Months 1000/=
* Dip. in web page Designing. 4 Months 1000/=
* Dip. in Graphic Designing. 4 Months 1000/=
* Dip. in Desk top publishing. 4 Months 1000/=
* Dip. in Hardware Engineering. 3 Months 1000/=
* Dip. in Auto CAD. 3 Months 1000/=
* Dip. in MicroSoft Office. 3 Months 1000/=
* Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) 3 Months 1000/=
* Honours Dip. in computer science. 5 Months 1000/=

10.12.2010 க்கு முன்னர் பதிவுகளுக்கு முந்துங்கள்

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

Batch i -27.11.2010
Batch ii -28.11.2010 } 9-10 am
Batch iii -29.11.2010
Batch iv -01.12.2010 } 3-4 pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
தொழில்வில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

No.15 ,Sirampiyady lane
off Stanly Road,
(Cosy Hotel 2nd floor)
Jaffna.
021 222 8250, 0777222422,
0774907444

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

முதன்முறையாக...
Full Version Software Tally-9.0
Tallyஇல் Date மாற்றலாமா???
NEW Batch :- Saturday (27.11.2010) & Sunday (28.11.2010) 3pm to 4pm


## கால்நடைகளால் நெற்பயிர்கள் நாசம்

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனை ஆகிய கிராமங்களில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகளால் தற்போது வளர்ந்து வரும் நெற்பயிர்கள் நாசமடைந்து வருன்றன.

நெற்செய்கை முடியும் வரை ஆடு, மாடுகளைக் கட்டாலிகளாக விடாது கட்டி வளர்க்க நடிவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு அம்மன் கமக்காரர் அமைப்பின் தலைவர் ந.பத்மநாதன் கால் நடை வளர்ப்போருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.




வாழ்த்துகின்றோம்

16.11.2010 அன்று BMICH இல் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் HNDA பட்டம்பெற்ற எமது நண்பி **சுதர்சனா அமிர்தலிங்கம்** அவர்களை மேன்மேலும் பல பட்டங்களைப் பெற வாழ்த்துகின்றோம். நண்பர்கள்


# அரசாங்கப் பெறுகை அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

## ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை பெற்றுக்கொள்ளல் - 2011

2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரையான காலப்பகுதிக்கு பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவை பெற்றுக்கொள்வதற்கான பெறுகைகள் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து 2010.12.10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். பெறுகைப் பத்திரங்கள் பெற விரும்புவோர் பெறுகைப் பத்திரப் பணமாக ரூபா 500/= உம் அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமும் செலுத்தி 2010.12.09 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரை இப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விவரம் | மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகை | வங்கி உத்தரவாத முறி | பெறுமதி ஆவணம் |
|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்புச்சேவை | 3,000.00 | 150,000.00 | 50,000.00 |
| 02 | சுத்திகரிப்புச் சேவை | 3,000.00 | 100,000.00 | 50,000.00 |

சுத்திகரிப்புச் சேவை: 2011 (அட்டவணை i)

| நிறுவனங்கள் | ஆ.வை பருத்தித்துறை | ஆ.வை தெல்லிப்பழை | ஆ.வை சாவகச்சேரி | ஆ.வை ஊர்காவற்றுறை | பி.வை சங்கானை | பி.சு.சே.ப.பணிமனை (பண்ணை உட்பட) |
|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர்கள் எண்ணிக்கை | 20 | 10 | 10 | 08 | 08 | 02 |
| மேற்பார்வையாளர்கள் எண்ணிக்கை | 04 | 02 | 02 | 02 | 02 | - |

| நிறுவனங்கள் | ஆயுள் வேத மருந்து உற்பத்திப் பிரிவு, அச்சுவேலி | ஆயுள் வேத மத்திய மருந்தகமும் அத்துடன் இணைந்த மூலிகை தோட்டமும் அராலி மத்தி வட்டுக்கோட்டை | மாவட்ட ஆயுள் வேத வைத்திய சாலை, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | ஆயுள்வேத மூலிகைத்தோட்டம் பலாலி வீதி, திருநெல்வேலி | மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை பண்டத்தரிப்பு | மனிதவள மேம்பாட்டு நிலையம் மின்சார நிலைய வீதி, சுன்னாகம். |
|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர்கள் எண்ணிக்கை | 02 | 02 | 04 | 02 | 04 | 01 |

பாதுகாப்புச் சேவை: 2011 (அட்டவணை ii)

| | ஆ.வை பருத்தித்துறை | ஆ.வை தெல்லிப்பழை | ஆ.வை சாவகச்சேரி | ஆ.வை ஊர்காவற்றுறை | பி.வை சங்கானை | பி.சு.சே.ப.பணிமனை (பண்ணை உட்பட) |
|---|---|---|---|---|---|---|
| பாதுகாப்பு காவலாளிகள் எண்ணிக்கை (பகல்) | 05 | 03 | 03 | 02 | 03 | 03 |
| பாதுகாப்பு காவலாளிகள் எண்ணிக்கை (இரவு) | 03 | 02 | 02 | 02 | 02 | 03 |

| | ஆயுள்வேத மருந்து உற்பத்திப் பிரிவு அச்சுவேலி | ஆயுள்வேத மத்திய மருந்தகமும் அத்துடன் இணைந்த மூலிகை தோட்டமும் அராலி மத்தி, வட்டுக்கோட்டை | மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| பாதுகாப்பு காவலாளிகள் எண்ணிக்கை (இரவு) | 02 | 01 | 01 |

சகல பெறுகைகளும் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு பெறுகைக் கடிதத்தின் இடப்பக்க மேல்மூலையில் பெறுகை விவரம் தெளிவாக எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப்பெட்டியில் முடிவு திகதிக்கு முன்னராக இடப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப் பாணம் என்ற விலாசமிடப்பட்ட கடித உறையில் வைத்து பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். பெறுகைகள் தபாலில் இடப்படின் தாமதத்துக்கு அலுலகம் பொறுப்பேற்க மாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேலாக அல்லது தொழில் திணைக்கள கூலிவீதத்துக்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் பெறுகைகளும் தெளிவில்லாத அல்லது பிழையாக நிரப்பப்பட்ட பெறுகைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இப் பெறுகைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் கேள்விச் சபைக்கே உரியது. மேலதிக விவரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில்(மு.ப. 9 மணி பி.ப 3.30 வரை) அறிந்துகொள்ள முடியும். பெறுகைகள் திறக்கப்படும் போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.


ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் கொரியாவின் பியோங் தீவை நோக்கி அமெ. விமானம் தாங்கி போர்க்கப்பல் விரைவு

வாஷிங்டன், நவ. 26

75 போர் விமானங்கள், 6 ஆயிரம் வீரர்களுடன் அமெரிக்காவின் 'யு. எஸ்.எஸ். வாஷிங்டன்' என்ற விமானம் தாங்கி போர்க் கப்பல், தென் கொரியாவின் யியோன் பியோங் தீவு நோக்கிப் புதன்கிழமை விரைந்தது. இதனால் பயங்கர போர் வெடிக்குமா? என்ற அச்சம் எழுந்துள்ளது.



வட கொரியா - தென் கொரியா நாடுகளின் எல்லையை ஒட்டிய கடல் பகுதியில், தென் கொரியாவுக்குச் சொந்தமான யியோன் பியோங் என்ற தீவு உள்ளது. இங்கு தென் கொரியாவின் இராணுவத் தளமும் உள்ளது.

செவ்வாய்க்கிழமை இந்தத் தீவின் மீது வட கொரியா திடீரென பீரங்கித் தாக்குதல் நடத்தியது. 50இற்கும் மேற்பட்ட குண்டுகளை அந்தத் தீவின் மீது பீரங்கிகள் கக்கின. இந்தத் தாக்குதலில் அங்கிருந்த இராணுவச் சிப்பாய்கள் 2 பேர் பலியாயினர். சில சிப்பாய்களும், பொதுமக்களுமாக 13 பேர் காயமடைந்தனர்.

பல வீடுகளும், அலுவலகங்களும் இடிந்து சேதமடைந்தன. பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன. ஏராளமான பொருள்களுக்குசேதம் ஏற்பட்டது.

தென் கொரியாவும் உடனே பதிலடி கொடுத்து தாக்கியது. இதனால், வட கொரியா - தென் கொரியா இடையே கடும் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

பேரழிவு ஏற்படாமல் தடுக்கும் வகையில், இரு நாடுகளும் போர் நிறுத்தம் செய்யவேண்டும் என்றும் அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்த நிலையில், அமெரிக்காவின் 'யு.எஸ்.எஸ். வாஷிங்டன்' என்ற விமானம் தாங்கிப் போர்க் கப்பல் தென் கொரியாவின் யியோன் பியோங் தீவுக்கு புதன்கிழமை காலையில் விரைந்தது. அந்தக் கப்பலில் 75 போர் விமானங்களும், 6 ஆயிரம் சிப்பாய்களும் உள்ளனர்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு தெற்கேயுள்ள கடற்படைத் தளத்தில் முகாமிட்டிருந்த அந்தக் கப்பல், ஞாயிற்றுக்கிழமையியோன் பியோங் தீவை சென்று அடையும் என்றும், தென் கொரியக் கடற்படையுடன் இணைந்து போரில் ஈடுபடும் என்றும் தென் கொரியா தலைநகர் சியோலிலுள்ள அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், தென் கொரியாவுடன் சேர்ந்து நாங்கள் செயலாற்ற இருப்பது பாதுகாப்புக்காக மட்டுமே என்றும் அவர் கூறினார். அமெரிக்க போர்க் கப்பல் தென் கொரியாவுக்கு ஆதரவாக விரைந்துள்ளதால், வட கொரியாவின் தீவிர ஆதரவு நாடான சீனா, வட கொரியாவுக்கு ஆதரவாகப் போரில் இறங்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி இருக்கிறது என உலக நாடுகள் கருதுகின்றன.

இதன் காரணமாக பெரியளவில் போர் வெடிக்குமோ? என்ற அச்சம் உலக நாடுகளிடையே புருவத்தை உயரச் செய்துள்ளது.

## கடந்த 25 ஆண்டுகளாக ஏரிகளின் வெப்பம் அதிகரிப்பு

வாஷிங்டன், நவ. 26

உலகம் முழுவதும் கடந்த 25 ஆண்டுகளாக ஏரிகள் சூடாகி வருகின்றன என 'நாசா' ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் 'நாசா' மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஸ்நீடர், சைமன் ஹூக் ஆகியோர் செயற்கைக் கோள் அளித்த விவரங்களை வைத்து, உலகம் முழுவதுமுள்ள 167 பெரிய ஏரிகளை ஆய்வு செய்தனர்.

கடந்த 85ஆம் ஆண்டு முதல் ஏரிகளின் வெப்பநிலை குறித்து ஆய்வு செய்த போது, சில ஏரிகளின் வெப்பநிலை 1.8 டிகிரி பாரன்ஹீட் அளவுக்கு உயர்ந்துள்ளமை தெரிய வந்தது என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு ஐரோப்பாவிலுள்ள ஏரிகள் அதிகம் வெப்பமடைந்துள்ளன. சைபீரியா, மங்கோலியா, வடக்கு சீனா பகுதிகளில் மிதமான வெப்பம் அதிகரித்துள்ளது. பூமி கோளத்துக்கு தெற்குப் பகுதியி லுள்ள ஏரிகளில் அவ்வளவாக வெப்பம் உயரவில்லை. வடக்கு ஐரோப்பாவில் ஏரிகளைச் சுற்றியுள்ள காற்றுப் பகுதியை விட, தண்ணீர் பகுதியில் வெப்பம் அதிகரித்துள்ளது.

உலக அரங்கில்

## தென் கொரியா மீதான தாக்குதலுக்கு வட கொரியாவை எச்சரிக்கிறது அமெ.

வாஷிங்டன், நவ. 26

தென் கொரியா மீது வட கொரியா பீரங்கித் தாக்குதலை நடத்தியதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சட்டத் திட்டங்களை மதிக்காமல் தொடர்ந்து அத்துமீறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென் கொரியா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவதால் நீங்கள் (வட கொரியா) எதையும் சாதித்துவிட முடியாது; மாறாக உலக நாடுகளிலிருந்து மேலும் தனிமைப்படுத்தப்பட்டுவிடுவீர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட கொரியாவின் அத்துமீறிய தாக்குதலால் பாதித்துள்ள தென் கொரியாவுக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அமெரிக்க மக்களின் சார்பில் ஒபாமா தெரிவித்துள்ளனர்.

வட கொரியாவுக்கும், தென் கொரியாவுக்குமிடையே பீரங்கிச் சண்டை நடந்ததுமே ஜனாதிபதி ஒபாமா, வெள்ளை மாளிகையில் பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் அவசரக் கூட்டத்தைக் கூட்டினார்.

இந்தக் கூட்டத்தில் கொரிய தீபகற்ப பிராந்தியத்தில் நிலவும் அசாதாரண சூழல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தமக்கு நெருக்கமாக உள்ள தென் கொரியாவுக்கு எந்த வகையில் உதவலாம் என்பது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது எனத் தெரியவருகிறது.

இதைத்தொடர்ந்து தென் கொரிய ஜனாதிபதி லீ மியூங் பாக்கை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய ஒபாமா, வட கொரியாவின் தாக்குதலால் கடற்படை சிப்பாய்கள் இறந்ததற்கு தமது அனுதாபத்தை தெரிவித்தார்.


பின்னர், வட கொரியாவின் தாக்குதலால் பயப்பட வேண்டாம்; உங்களுக்கு எப்போதும் அமெரிக்காவின் முழு ஆதரவு இருக்கும் என்றும் தெரிவித்தார்.

கொரிய நாடுகளின் பிரச்சினையில் சீனாதலையிட்டு அந்தப் பிராந்தியத்தில் அமைதி நிலவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆஸ்திரேலியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

வட கொரியாவிடம் சீனா நெருக்கமாகவுள்ளது. இந்தத் தருணத்தில் சீனா தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும். வீணாக சண்டையிட்டு அமைதியை சீர்குலைக்க வேண்டாம் என்று வட கொரியாவுக்கு நெருக்குதல் அளிக்க வேண்டும் என்று ஆஸ்திரேலியா கேட்டுக்கொண்டுள்ளது.

இரு கொரிய நாடுகளுக்கிடையே சண்டை மூண்டதுமே ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் அவசரக் கூட்டத்தை கூட்டி ஆலோசித்தார்.

அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட தமது கூட்டணி நாடுகளின் தலைவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு கொரிய பிராந்தியத்தில் நிலவும் சூழல் குறித்து விவாதித்தார்.



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, துணை ஜனாதிபதி ஜோ பிட்டனுடன் சேர்ந்து கோகோமோ தொழிற்சாலையிலுள்ள ஜிங்சர் பிரட் ஹைவ்ஸ் பேக்கரியில் சோதனையில் ஈடுபடுகிறார்.

## ஹெய்ட்டியில் வாந்திபேதி: 2 இலட்சம் பேர் பாதிப்பு

போர்ட் ஒவ் பிரின்ஸ், நவ. 26

கரீபியன் கடற்பகுதி நாடான ஹெய்ட்டி தீவில், எதிர்பார்த்ததை விட மிக அதிக வேகத்தில் வாந்திபேதி பரவு கிறது என ஐ.நா., எச்சரித்துள்ளது. அதே நேரம், திட்டமிட்டபடி பொதுத் தேர்தலை நடத்தலாம் எனவும் அது கூறியுள்ளது. கரீபியன் கடற்பகுதி நாடான ஹெய்ட்டி தீவு, இந்தாண்டின் ஆரம்பத்தில் பூகம்பத்தால் மிக மோசமாகப்பாதிக்கப்பட்டது. அதன் பின், வாந்திபேதி நோய் தீவிரமாக பரவ ஆரம்பித்துள்ளது. இந் நோய்க்கு இதுவரை 1,415 பேர் பலியாகியுள்ளனர்.

எதிர்வரும் 28ஆம் திகதி அங்கு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில், நோயை எதிர்கொள்வது மிகவும் சிக்கலாகியிருக்கிறது. இது குறித்து ஹெய்ட்டிக்கான ஐ.நா. மனிதாபிமானக்குழு இணை அமைப்பாளர் நிஜல் பிஷர் கூறுகையில், ''நோய் பரவ ஆரம்பித்தது முதல் ஆறு மாதங்களில் இரண்டு இலட்சம் பேர் இதனால் பாதிக்கப்படலாம் எனக் கணக் கிடப்பட்டது. ஆனால், முதல் மூன்று மாதங்களிலேயே இரண்டு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் மிகவும் வேகமாகப் பரவி வருகிறது. சிகிச்சை அளிப்பதற்கும், இறந்தோரின் சடலங்களை அகற்றுவதற்கும் மேலும் பல இடங்களை தயார் செய்வதற்கும் உள்ளூர் நிர்வாகத்துக்கு ஹெய்ட்டி அரசு அறிவுறுத்த வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

## நியூஸிலாந்து சுரங்கத்தில் மீண்டும் வெடிவிபத்து சிக்கிய 29 பேரும் மரணித்திருப்பர் என்று அச்சம்!

கிரேமவுத், நவ. 26

நியூஸிலாந்தில், 29 பேர் சிக்கிக் கொண்ட சுரங்கத்திற்குள் மீண்டும் ஒரு பயங்கரமான வெடிவிபத்து நிகழ்ந்ததால் அவர்கள் அனைவரும் பலியாகியிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது. இத்தகவல் அந்நாட்டை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

நியூஸிலாந்தின் மேற்குக் கடற்கரையோரப் பகுதியில் அமைந்துள்ள 'பைக் ரிவர்' நிலக்கரி நிறுவனத்திற்குச் சொந்தமான சுரங்கத்திற்குள் கடந்த வாரம் சிலர் பணியில் இருந்தபோது வெடிவிபத்து நிகழ்ந்தது.

இதில் 29 பணியாளர்கள் உள்ளே சிக்கிக் கொண்டனர். இவர்களில் 17 வயது முதல் 62 வரையிலான பலதரப்பட்ட வயதுடையவர்கள் இருந்தனர். பிரிட்டனைச் சேர்ந்த இரண்டு பேரும், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இரண்டு பேரும் அதிலிருந்தனர்.

அனைவருக்கும் தேவையான ஒக்சிஜன், உணவுப் பொருட்கள் ஆகியவை உள்ளேயே இருந்தன. எனினும், சுரங்கத்திற்குள் பயங்கரமான விஷவாயுவின் தாக்கம் இருந்ததால், மீட்புப் படையினரால் உள்ளே செல்ல இயலவில்லை.

இரண்டு ரோபோக்கள் மூலம் விஷவாயுவின் அளவைக் கணக்கிட செவ்வாய்க்கிழமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேநேரம், மற்றொரு வழியாக, துளையிட்டு விஷவாயுவை அளவிடும் பணியும் நடந்தது.

பாறைகள் மிகவும் கடினமாக இருந்ததால், துளையிடும் பணி தொய்வடைந்தது. இந்நிலையில், புதன்கிழமை மற்றொரு மோசமான வெடிவிபத்து சுரங்கத்திற்குள் நிகழ்ந்துள்ளது. இது முதலில் நிகழ்ந்த வெடிவிபத்தை விட இரண்டு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருந்தது.

இவ்விபத்தில் உள்ளே சிக்கியிருந்தவர்கள் அனைவரும் சிக்கி இறந்து போயிருக்கலாம் என்று பொலிஸ் உயரதிகாரி காரி நோயல்ஸ் தெரிவித்துள்ளார். சுரங்கம் அமைந்துள்ள மாவட்டத்தின் மேயர் டோனி கோக்ஷ்ரூனும் இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஐந்து நாட்களாக, சிக்கிக் கொண்டவர்கள் மீட்கப்படுவர் என்ற நம்பிக்கையுடன் அவர்களின் உறவினர்கள் சுரங்கத்திற்கு வெளியே பதற்றத்துடன் காத்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் இச்செய்தி வெளியானவுடன் அவர்கள் கதறி அழுதனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டம் ஹென்றிஸ் - மகாஜன அணிகள் மோதல்

மருதனார்மடம், நவ.26

வலிகாம வலயமட்டத்தில் நடைபெற்ற 13 வயதின் கீழ்ப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப்போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகிய அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்றே இந்த இரு அணிகளும் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் மோதின. பார்ப்பவர்களை மெய் சிலிர்க்கவைத்த மிகவும் விறு விறுப்பான இந்தப் போட்டியில் எந்த அணியுமே கோல்களைப் பெற முடியவில்லை.

இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதை இரு அணிகளுக் கும் வழங்கப்பட்டது. இதில் 5 - 4 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்ற இளவாலை ஹென்றிஸ் அணி இறுதிப் போட்டியில் ப்ங்குபற்றுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி அணிகள் போட்டியிட்டன. இப்போட்டியிலும் இரு அணிகளாலுமே கோல்பெற முடியவில்லை. இறுதியில் வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதையில் மகாஜனக் கல்லூரி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

மகாஜனா, ஹென்றிஸ் அணிகள் முதலிடத்திற்காகப் போட்டியிடும் அதேவேளை மூன்றாம் இடத்திற்காகப் போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன. (ஐ-55)

# விக்ரோறியா வீரன் கோகுலராஜ் 'ஹட்ரிக்' கோல் அடித்து அசத்தல்

மருதனார்மடம், நவ.26

வலிகாமம் வலயமட்ட 13 வயதுக்குட்பட்ட அணியினருக்கான உதைபந்தாட்ட ஆரம்பச் சுற்றுப்போட்டிகள் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றன.

வலிகாமம் வலயத்தில் நான்கு கோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அணிகள் என்றவகையில் 12 அணிகள் இப்போட்டிகளிற்பங்கேற்றன.

இந்தச் சுற்றுப்போட்டியின் 12 ஆவது போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் ச.கோகுலராஜ் அடித்த ஹட்ரிக் கோல்களின் உதவியுடன் விக்ரோறியாக் கல்லூரி ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையை 4:0 என்ற கோல்கணக்கில் இலகுவாக வெற்றியீட்டியது.

அபாரதிறமையை வெளிப்படுத்திய விக்ரோறியா வீரர்கள் ஆரம்பம் முதலே எதிரணியின் கோல் பரப்பினுள் ஆதிக்கம் செலுத்தினர்.

எதிரணியின் பின் வரிசையை இலகுவாக உடைத்துச்சென்ற கோகுலராஜ் அதிரடியாக அடுத்தடுத்து மூன்று கோல்களைப்போட்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். தி.நிதர்சன் தனது பங்கிற்கு ஒரு கோலைப்போட்டு அணியின் வெற்றியை உறுதி செய்தார். (ஐ-55)

# மகாஜனக் கல்லூரி சம்பியன்

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு பொலிஸ் நிலைங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளின் பெண்கள் கரப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனாகியது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் பேட்டியில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மகாஜனக் கல்லூரியும் நெல்லியடி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இந்தப் போட்டிகள் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற போதிலும் இரு பொலிஸ் நிலையங்களினதும்பொலிஸாரும் வீராங்கனைகளை உற்சாகப்படுத்துவதில் ஆர்வத்துடன் செயற்பட்டனர்.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 02:00 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் முறையே 25:11, 25:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (த-86)

# அரையிறுதிக்கு தெரிவான அணிகள்

வலிவடக்கு, நவ.26

13வயதுக்குட்பட்ட அணியினருக்கான வலிகாமம் வலய உதைபந்தாட்டப் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிகள் வலய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் புதன்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்றே இந்த நான்கு அணிகளும் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன.

**ஏழாலை ஸ்ரீ முருகன் வெற்றி**

ஏழலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்திற்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று முதலாவது அணியாக அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இப்போட்டியின் முதற்பாதி ஆட்டத்தில் க.பவித்திரன் அடித்த கோல் மூலம் ஸ்ரீ முருகன் அணி தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டது. பின்னர் இரு அணிகளும் கோல்களைப் போட எவ்வளவோ முயன்ற போதிலும் எதிரணியின் தடுப்பாட்டத்தால் அது நிறைவேறாமற்போனது.

இறுதியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த அணி காலிறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கான தெரிவுச் சுற்றில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வட்டுக்கோட்டை மகாஜனக் கல்லூரி அணி சி.டிலக்சன் அடித்த கோலின் மூலம் 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

மகாஜனக் கல்லூரி காலிறுதிப் போட்டிக்கான தகுதிச் சுற்றில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை வெற்றி பெற்று ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையுடனான போட்டியைச் சமன் செய்தே காலிறுதிக்குத் தெரிவானமை குறிப்பிடத்தக்கதாகும்.

**மானிப்பாய் இந்து வெற்றி:**

நான்காவது காலிறுதிப் போட்டி வயாவிளான் மகா வித்தியாலயம் மானிப்பாய் இந்துக் கல்லூரி என்பவற்றுக்கு இடையே நடைபெற்றது.

இப்போட்டியின் முதற்பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சி.சுபாங்கன் அடித்த கோல் மூலம் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டது. அடுத்த பகுதி ஆட்டத்தில் எந்த அணியும் கோல் போடாத நிலையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் போட்டிக்குத் தெரிவானது.

காலிறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன. (ஐ-55-86)

# பாடசாலை அணிகளுக்கிடையே முதல் முறையாக ஹொக்கி போட்டி

வலி. வடக்கு, நவ.26

யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்கள் அணிகளுக்கு முதல் தடவையாக ஹொக்கிப் போட்டி நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களை யாழ். மாவட்டப் பாடசாலைகளின் ஹொக்கி சங்கத்தின் தலைவரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபருமான எம்.நோயல் விமலேந்திரனுடன்தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் டிசம்பர் மாதம் 8ஆம்திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்நெல் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் போட்டிகளுக்கான அணி ஒழுங்குகள் எதிர்வரும் 5ஆம் திகதி பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)




# ஹொக்கிப் போட்டி கொழும்பில்; யாழ். அணிகள் பங்குகொள்ளவில்லை

வலிவடக்கு, நவ.26

இலங்கைப் பாடசாலை ஹொக்கிச் சங்கத்தினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஹொக்கிப் போட்டிகள் கொழும்பில் நடைபெறுகின்ற போதிலும், யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து எந்தவொரு அணியும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் கடந்த சில மாதங்களுக்கு முன் உருவாக்கப்பட்டு இலங்கைப் பாடசாலை ஹொக்கிச் சங்கத்தில் இணைந்து கொண்டது.

இந்நிலையில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கும் அகில இலங்கைப் போட்டியில் கலந்து கொள்ள உரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதிலும் 13வயதுப் பிரிவினர்களுக்கான ஹொக்கி உபகரணங்களோ அன்றி உரிய அணிகளோ பாடசாலை மட்டங்களில் தயார் செய்யப்படாமையால் இம்முறை போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அடுத்தாண்டு தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான போட்டிகளில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பாடசாலை அணிகள் கலந்து கொள்ளும் எனத்தெரிவிக்கப்பட்டது. (த-86)

## போட்டி....





வெற்றி: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி[illegible] பழைய மாணவனும் மாணவ முதல்வருமான அமரர் பொன்.விபுலானந்தனின் ஞாபகார்த்தமாக யாழ்.[illegible]கான கூடைப்பந்தாட்டத்தில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் அணிகள். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிடில் ஹெட்ரிக்; சுருண்டது இங்கிலாந்து பிரிஸ்பேர்ணில் வைத்து ஆஸி. கைவரிசை




பிரிஸ்பேர்ண், நவ. 26

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதலாவது சமரில், ஆஸ்திரேலிய வீரரான சிடில், தமது 26ஆவது பிறந்த நாளில் - முதலாவது ஆஷஸ் டெஸ்டில் - ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியுள்ளார். இவரின் அபாரத் தாக்குதலில் சிக்கி இங்கிலாந்து அணி, 260 ஓட்டங்களுக்குள் மடிந்தது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டி ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேர்ண் நகரில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு, ஆரம்பம் பேரதிர்ச்சியாக அமைந்தது.

அணித்தலைவரும், ஆரம்ப வீரருமான ஸ்டிரஸ் எந்த வித ஓட்டமும் பெறாமல், மூன்றாவது பந்தில் ஆட்டமிழந்து வெறியேறினார். எனினும், பின்னர் இணைந்த குக் - டிராட் ஜோடி ஓரளவு நிலைத்து நின்று ஆடியது. ஆனால், இந்த ஜோடியால் நீண்ட நேரம் நிலைத்து நிற்கமுடியவில்லை.

டிராட் 29 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த பீற்றர்சன் (43), கொலிங்வூட் (4), ஆகியோர் ஆட்டமிழந்தனர். மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஆரம்ப வீரரான குக் (67), 65.3ஆவது ஓவரில் சிடிலின் வேகத்தில் சரிய, அவரைத் தொடர்ந்து வந்த பிரையர் (0), பிரோட்(0) ஆகியோரும் அடுத்தடுத்துச் சரிய, ஹெட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்திச் சாதனை புரிந்தார் சிடில். அவரைத் தொடர்ந்து ஸ்வான் (10), பெல் (76), அண்டர்சன் (11) ஆகியோரும் ஆட்டமிழந்து செல்ல, நேற்றுமுதல் நாள் ஆட்டம் முடியமுன்னரே இங்கிலாந்து அணி, 260 ஓட்டங்களுக்குள் சுருண்டது. ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீசசில் அசத்திய சிடில் 6 விக்கெட்டுகளையும், டோஹேரி 2 விக்கெட்டுகளையும், ஹில்பனாஸ், வோட்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, நேற்று ஆட்ட நேரம் முடியும்போது விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. வோட்ஷன் 9 ஓட்டங்களுடனும், கடிச் 15 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும்.

## இந்தியாவுக்கு எதிரான தொடரில் ஸ்மித் சந்தேகம்

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியின்போது, பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளரான அக்தர் பவுன்சராக வீசிய பந்து ஒன்று, தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித்தின் இடது கையைப் பதம் பார்த்தது. இதனால், அவரது ஆள்காட்டி விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

எனினும், முழுமையாக குணமடைவதற்குள் அவர் தொடர்ந்து கிரிக்கெட் ஆடியமையால் காயத்தன்மை இப்போது அதிகரித்துவிட்டது. இதன் காரணமாக அடுத்த மாதம் 16ஆம் திகதி தொடங்கவுள்ள இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து அவர் விலகுவதற்கான வாய்ப்புள்ளது.

## பாகிஸ்தானை வீழ்த்தியது ஆப்கானிஸ்தான் அணி

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆண்களுக்கான 'இருபது-20' கிரிக்கெட் அரையிறுதிப் போட்டியில், ஆப்கானிஸ்தான் அணி, 22 ஓட்டங்களால் பாகிஸ்தானை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

## ஊக்க மருந்துச் சர்ச்சையில் சிக்கினார் இரண்டாவது உஸ்பெகிஸ்தான் வீரர்!

குவாங்சு, நவ. 26

ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான மல்யுத்தப் போட்டியில் 84 கிலோ பிரிவில் பங்கேற்ற உஸ்பெகிஸ்தான் வீரரான ஜஹோன்ஜிர் முமினோவிடம் நடத்தப்பட்ட சிறுநீர் பரிசோதனையில், அவர் ஊக்க மருந்து பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜூடோ 81 கிலோ உடல் எடைப்பரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற உஸ்பெகிஸ்தான் வீரரான ஷோகிர் முமினோவ் உபயோகப்படுத்திய 'மெத்தில் எக்ஸ்சைனமைன்' என்ற ஊக்க மருந்தையே, மல்யுத்த வீரரான ஜஹோன்ஜிர் முமினோவும் பயன்படுத்தியமை தெரியவந்துள்ளது.

உஸ்பெகிஸ்தான் வீரர்கள் 2 பேர் ஒரே வகையான ஊக்க மருந்தைப் பயன்படுத்தியிருப்பதால் இது குறித்து விரிவான விசாரணை நடத்தும்படி, உஸ்பெகிஸ்தான் ஒலிம்பிக் சங்கத்தை, ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் கேட்டுக் கொண்டுள்ளது.

# கொழும்பு டெஸ்ட் களத்தில் மழை நேற்றைய ஆட்டமும் இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 26

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்றுவரையான நிலைவரப்படி இலங்கை அணி முன்னிலையில் உள்ளது.

எனினும், தொடரும் மழையால் எந்தவொரு அணியும் வெற்றியைப் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆரம்பமானது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, ஐந்து விக்கெட்டுகள் இழப்புக்கு 294 ஓட்டங்களைப் பெற்றவேளை, மழை குறுக்கிட்டது. இதனால் நேற்றுமுன்தினம் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.


சங்கக்கார (135), பிரசன்ன ஜெயவர்த்தன (12) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இலங்கை அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 387 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இலங்கை அணிக்காக சங்கக்கார (150), சமரவீர (80) ஆகியோர் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொடுத்தனர்.

ரங்கன ஹேரத் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக, ரோஜ் 5 விக்கெட்டுகளையும், சமி 2 விக்கெட்டுகளையும், பிரவோ, பீன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



பின்னர், தனது இன்னிங்ஸை ஆரம்பித்த மற்கிந்தியத் தீவுகள் அணி, பாரத்தை (3) விரைவாகவே இழந்தது. முந்தைய ஆட்டத்தில் முச்சதம் அடித்த கெய்ல், 30 ஓட்டங்களுடனும், சந்திரபோல் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, வழமைபோல நேற்றும் மழை தனது விளையாட்டைக் காட்டத் தொடங்கியது.




இதனால், ஆட்டம் முன்னதாகவே இடைநிறுத்தப்பட்டது.

பிராவோ (1) பௌக் (4) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக, டில்ஷான் 2 விக்கெட்டுகளையும், மெண்டிஸ், லக்மல், குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

## விலகியது கொச்சி அணி!

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் புதிதாக இணைக்கப்பட்டிருந்த கொச்சி அணியை, ஐ.பி.எல். தொடரிலிருந்து அதன் உரிமையாளர்கள் விலக்கிக்கொண்டுள்ளனர்.

இந்தியக் கிரிக்கெட் சபையின் கெடு முடிய 3 நாட்கள் இருந்த நிலையில், ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கத் தமக்கு விருப்பமில்லை என கொச்சி அணியின் உரிமையாளர்கள், இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவரான மனோகருக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

இதனை, இந்தியக் கிரிக்கெட் சபையும் உறுதிப்படுத்தியுள்ளது.

கொச்சி அணியின் உரிமையாளர்களிடையே சச்சரவுகள் இருந்தமையால், தகராறுகளைத் தீர்க்க கிரிக்கெட் சபை 30 நாட்கள் அவகாசம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஒப்பந்த விதிகளை மீறியமையால் ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் வெளியேற்றப்பட்ட நிலையில், தற்போது கொச்சி அணியும் வெளியேறியுள்ளது.

இந்நிலையில், 8ஆவது அணிக்கான புதிய ஒப்பந்தத்தைச் செய்யவேண்டிய நிலையில் கிரிக்கெட் சபை உள்ளது.



## ஆசிய வில்வித்தைப் போட்டியில் வரலாறு படைத்தது இந்தியா!

குவாங்சு, நவ. 26

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தனிநபர் வில்வித்தைப் போட்டியில் இந்திய வீரரான தருண்தீப் ராய் முதன் முறையாக வெள்ளிப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார். நேற்றுமுன்தினம் நடந்த பரபரப்பான இந்தப் போட்டியின் இறுதிப் போட்டியில், தென் கொரிய வீரரான வூஜின் கிம், 28-28, 27-28, 29-28, 27-28, 27-29 என்ற கணக்கில் போராடி வெற்றிபெற்றார்.

கடைசிச் செட்டில் கொரிய வீரருக்கு முக்கியமான முன்னிலையை ராய் விட்டுக் கொடுத்தார். ஆனால், அதன் பிறகு இரண்டு முயற்சிகளில் 9 புள்ளிகளைப் பெற்று அசத்தினாலும், கொரிய வீரர் தங்கம் வெல்வதைத் தடுக்க முடியவில்லை.

எனினும், வில்வித்தைப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற முதலாவது இந்தியர் என்ற பெருமையை ராய் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

# வைத்திலிங்கம் மார்க்கண்டு



காரைநகர், மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் மார்க்கண்டு நேற்று (25.11.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பையா, நடராசா, தம்பிராசா, பொன்னுத்துரை, செல்லம்மா மற்றும் செல்லத்துரை (லண்டன்), கனகம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவானி, நித்தியரூபி, மதனரூபி ராசன், கமலரூபி ராசன், சுபாஜினி, சந்திராதேவி காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் இந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஸ்வலிங்கம், மயில்வாகனம், யோகராணி, அருளாம்பிகை, கனகபாலன், பவானந்தன், சற்குணராசா ஆகியோரின் அன்பு மாமனும் பிரபாகரன், கருணாகரன், குமுதினி, நந்தகுமார், சிவகுமார், றஞ்சினி, ஜெயக்குமார், நிசாந்தினி, சிவறஞ்சினி, சிவரூபி, சிவதர்சினி, சிவப்பிரியா, சிந்துலா, தேனுலா, ஐங்கரன், கீர்த்தனா, தனுசன், மதிராஜ், பிரணவன், லக்சிகா, கஜேந்திரன், தீபிகா, கஜன், சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனும் விஜிதா, பிரியா, பிரகீதன், சரணியா, மாதேஸ், நதீஸ், ஆதீனா, ஆருஜன், மதிஜன், மயூரி, மிதுலன், லதுசன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*124/2, துண்டம்பிட்டி ஒழுங்கை,*
*திருநெல்வேலி தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (106532)

தகவல் :
**மக்கள்,**
**மருமக்கள்,**
**(க.சுபாஜினி)**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 20 . 07 . 1963



விண்ணில் 30 . 10 . 2010

### நயினை அமரர் பொன்னம்பலம் மகேஸ்வரன்

எமது குடும்ப அன்புத் தெய்வத்தின் மறைந்த துயரச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தோருக்கும் நேரிலும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொலைபேசி, தொலைநகல் மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (27.11.2010) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அதில் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தொ.பே. 2363551, 0777387151.*

*மனைவி, மகன்மார், தாய்,*
*சகோதரன், சகோதரி.*

## ஈராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 25 ★ 08 ★ 1966



ஆண்டவன் அடியில் 17 ★ 11 ★ 2008

### அமரர் வேலாயுதபிள்ளை உதயசூரியன்

திதி: 26.11.2010

ஈராண்டு சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
மறக்கக் கூடியதா உங்கள் உருவம்
நீங்கள் மிதித்த இடத்துப் புல் இறப்பதில்லை ஒரு போதும்
இன்று நாம் தவிக்கின்றோம் உங்கள் பிரிவால்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை.*

*பிரிவால் துயருறும்:*
*மனைவி, பிள்ளைகள்.*

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.26

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் ஆரம்பப் பிரிவுப் பரிசளிப்பு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்ப்பாண வலய இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதன், தீவக வலய இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவபாதம், வலிகாமம் வலய இளைப்பாறிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வ.குகவேள் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-38)

## கண்ணீர் அஞ்சலி



ஆனைக்கோட்டை,
கொழும்பார் வளவை
பிறப்பிடமாகவும், தற்போது
லண்டனில்
வசிப்பவருமாகிய

### பஞ்சலிங்கம் கனகாம்பிகை

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

24.11.2010 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**ஜெ. திலககுமாரி (திலகம்)**
**மருமகள்.**

## கண்ணீர் அஞ்சலி

லயன் சீமாட்டி

### செல்வபாக்கியம் செல்வரத்தினம்

(இளைப்பாறிய தலைமைத் தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)

எங்கள் கழகத்தின் மூத்த உறுப்பினர் க. செல்வரத்தினம் அவர்களுடைய பாசமிகு துணைவியார் லயன் சீமாட்டி செல்வபாக்கியம் செல்வரத்தினம் அவர்கள் லண்டன் மாநகரில் இறைவனடி சேர்ந்ததை கேள்வியுற்று ஆழந்த கவலையை குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கோப்பாய் லயன்ஸ் கழகம்**


## Danika A - Z Market

கைத்தொலைபேசிகள்,
தையல் மெசின்கள்,
படப்பிடிப்புக் கருவிகள்
(Camera) போன்ற
உபகரணங்களை உடன்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்.

**Danika A - Z Market**

*175A, Sivan Pannai Road,*
*Jaffna. Sri Lanka.*



## வேலையாள்கள் தேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் Cleaning Service (Pvt) Ltd. இனால் முன்னெடுக்கப்படும் சுத்திகரிப்புப் பணிகளை செய்வதற்குச் சுத்திகரிப்பு பணியாளர்கள் தேவை

உரிய ஆவணங்களுடன் ஆண், பெண் இருபாலாரும் நாளை (27.11.2010) சனிக்கிழமை தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: Floor Care Cleaning Services (Pvt) Ltd. Office,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
0778935282, 0773561922

## சிறப்புடன் வளர வாழ்த்துகின்றோம்



குன்றிடா அறிவு தந்து
மங்கிடாப் புகழும் பெற்று-எமை
மண்ணினில் மிளிரச்செய்த
இந்துவின் மைந்தன்- எம்
அன்பிற்கினிய ஆசான்
**திரு.சதாசிவம் நிமலன்** (J.P)
(Sc.sp.Trd, B.A, SLPS 2-II)
அவர்கள் இந்து அன்னையின்
தவப்புதல்வர்கள் வரிசையில்
எமது கல்லூரிக்குப்
பிரதி அதிபராக நியமனம்
பெற்றமையைப் பாராட்டி
வாழ்த்துவதோடு, அவர் சீரும்
சிறப்புமுடன் மேலும் வளர
வாழ்த்துகின்றோம்.

இந்துவின் மைந்தர்களும்,
சக ஆசிரிய நண்பர்களும்.

## அரசாங்க பெறுகை அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

## சமைத்த உணவு வழங்கல் - 2011

2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள் வழங்குநர்களிடமிருந்து 2010/12/10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.15 மணிக்கு திறக்கப்படும். பெறுகைப்பத்திரங்கள் பெற விரும்புவோர் மீளளிக்கப்படாத ரூபா 500/= பணம் செலுத்தி 2010/12/09ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். வழங்குநர்கள் எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப வங்கி உத்தரவாத முறியும் (Bank Bid Bond) பெறுமதிச் சான்றிதழும் (Worth Report) இணைத்து எம்மால் வழங்கப்படும் கேள்விப் பத்திரத்தில் விலை விவரம் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். விவரங்கள் வருமாறு:

அ). சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்திய சாலைகள்

| நிறுவனங்கள் | உத்தரவாத | முறிகள் பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|
| பி.வை. அனலைதீவு | 10,000 | 20,000 |
| பி.வை. காரைநகர் | 10,000 | 20,000 |
| பி.வை. நயினாதீவு | 10,000 | 20,000 |
| பி.வை. வேலணை | 10,000 | 15,000 |
| பி.வை. வட்டுக்கோட்டை | 10,000 | 15,000 |
| பி.வை. மருதங்கேணி | 10,000 | 15,000 |
| பி.வை. பண்டத்தரிப்பு | 10,000 | 15,000 |
| பி.வை. கரவெட்டி | 10,000 | 15,000 |
| பி.வை. வரணி | 10,000 | 15,000 |
| பி.வை. கொடிகாமம் | 10,000 | 15,000 |
| பி.வை. குருநகர் | 10,000 | 15,000 |
| பி.வை. மானிப்பாய் | 10,000 | 15,000 |
| பி.வை. கோண்டாவில் | 10,000 | 15,000 |
| பி.வை. அளவெட்டி | 10,000 | 15,000 |
| பி.வை. புங்குடுதீவு | 10,000 | 15,000 |
| ஆயுள்வேத வைத்தியசாலை பண்டத்தரிப்பு | 10,000 | 10,000 |

சகல பெறுகைகளும் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் கடித உறைகளில் இட்டு மெழுகு முத்திரை இடப்பட்டு பெறுகைக் கடிதத்தின் இடப்பக்க மேல் மூலையில் பெறுகை விவரம் தெளிவாக எழுதப்பட்டு பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் இடப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்ட கடித உறையில் வைத்து அனுப்பப்பட வேண்டும். பெறுகைகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்கமாட்டாது தெளிவில்லாத அல்லது பிழையாக நிரப்பப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இப்பெறுகைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் கேள்விச் சபைக்கே உரியது. மேலதிக விவரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9 மணி(முதல் பி.ப. 3.30 வரை) அறிந்து கொள்ள முடியும். பெறுகைகள் திறக்கப்படும்போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ள முடியும்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
*பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நித்தியமலர் சோதிநாதன் (மலர்)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும், தற்பொழுது லண்டன் NEW BURY PARK இல் வசித்து வந்தவருமான நித்திய மலர் சோதிநாதன் (மலர்) அவர்கள் 19.11.2010 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், வட்டுக்கோட்டை துணைவியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா ஞானரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சோதிநாதன் (முன்னாள் நில அளவைத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், கிருஷா (லண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும், தயானந்தன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும், புவனேஸ்வரி (அவுஸ் திரேலியா), விமலாம்பிகை, சறோஜினிதேவி (அவுஸ்திரேலியா), சுந்தரலிங்கம் (முன்னாள் இலங்கை மின்சார சபை), சகுந்தலாதேவி (லண்டன்), யோகலிங்கம் (யோகா U.S.A), காருணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணேசன், பாஸ்கரன், ஆனந்தலிங்கம், வசந்தமலர், காலஞ்சென்ற பரதராஜா, பாலேஸ்வரி (இராசாத்தி) குகானந்தன், செல்வராணி அருணாசலம், தங்கராணி, சிவகுருநாதன், தனலட்சுமி இராசலிங்கம், யோகலட்சுமி, வர்ணலட்சுமி செந்தில்நாதன், ரஜனி ஜெயக்குமாரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுந்தரலிங்கம்
இல.11, 42வது ஒழுங்கை,
வெள்ளவத்தை.

தகவல்:
க.சோதிநாதன் U.K.
தொ.பே.:
00442085180836

(மி/573107)

## பத்திநாதன் சோபாநோபேட் (யோகா)



யாழ்ப்பாணம், முருகமூர்த்தி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்திநாதன் சோபா நோபேட் (யோகா) நேற்று 25.11.2010) வியாழக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பத்திநாதன் மற்றும் கனகேஸ்வரி தம்பதியரின் மகளும் கனிஸ்ரா, யேசுதாஸ், றெஜி (சசி சிற்றிபாக் ஓட்டோ), பதுமா ஆகியோரின் அருமைச் சகோதரியும் திவாகர், பரிமளா, சுரேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக் காக கோம் பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்.

தகவல்:
சசி (ஓட்டோ)
சகோதரன்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்மகிழ்
25
-
02
-
1949



கண்நெகிழ்
26
-
10
-
2010

## திருமதி மருதலிங்கம் பார்வதி (கண்மணி)

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.11.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து, அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நி.மு.: சாயுடை,
மாவிட்டபுரம்,
த.மு.: குமரகோட்டம்,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

# டிசம்பர் வரை மழை தொடரும்

கொழும்பு, நவ.26

நாட்டில் தற்போது நிலவிவரும் இடியுடன் கூடிய மழை டிசெம்பர் மாத இறுதிவரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இடி, மின்னல் தாக்கம் குறித்து மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு திணைக்களம் கோரியுள்ளது.

மாலை வேளைகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதனால் மக்கள் அது குறித்தும் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்றுக் காலை 8.30 மணிவரை வவுனியாவிலேயே அதிகளவு மழை வீழ்ச்சி (169.9 மி.மீ.) பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளரான லக்ஷ்மி லத்திப் தெரிவித்தார்.

அதேவேளை இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மக்கள் மின்னியல் உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (சி)


### தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள கணினித்தொழில் சார் மற்றும் கூரியர் சேவை நிறுவனத்திற்கு கணினி அறிவுடைய பெண் பிள்ளைகள் தேவை. 27.11.2010 சனி, 28.11.2010 ஞாயிறு தினங்களில் நேரில் தொடர்பு கொள்ளவும்.
Arrui Global Express
இல.1, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். 0212226113

### Yoga For You

பிரிய யோக பயிற்சி நிலையம்
புதிய வகுப்புகள் ஆரம்பம்
(27.11.2010) சனிக்கிழமை
காலை 7 - 8 a.m
மறைக்கல்வி நடுநிலையம்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே.: 0773960311


# மரண அறிவித்தல்

## தாமோதரம்பிள்ளை சின்னப்பிள்ளை



வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம் பிள்ளைசின்னப் பிள்ளை நேற்றுமுன்தினம் (24.11.2010) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி தாமோதரம்பிள்ளை (யாழ். மாநகரசபை ஓய்வூதியர்) யின் அன்பு மனைவியும், கனகம்மா, கணேசன் (யாழ். மாநகர சபை ஓய்வூதியர்), கந்தசாமி (ஹொலண்ட்), கனகராணி (கனடா), கனகமணி, கணேஸ்வரி, பரமநாதன் (சுவிஸ்) ஆகி யோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2010) வெள்ளிக்கிழமை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு.

குடும்பத்தினர்.

(505536)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையின் மாணவி

## செல்வி குலம் நிஸ்மியா

2010 ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 146 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த இவரை கல்வியில் மென்மேலும் சிறப்புப்பெற பாராட்டி வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஐந்து மாணவர்களையும் கல்வியில் மென்மேலும் சிறப்புப் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/மட்டுவில் வடக்கு,
அ.த.க. பாடசாலை,
மட்டுவில், சாவகச்சேரி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சங்கத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது வலயத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றும் மு.இராசநாயகம் அவர் களின் அன்புத் தாயார்

## அமரர் பகவதி முருகேசு

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்விப்பணிப்பாளரும், சக உத்தியோகத்தரும், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(106535)

# கேள்வி கோரல்

ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை சிறிறுண்டிச் சாலையும் வாகனத்தரிப்பு நிலையமும் குத்தகைக்கு விடப்படுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இன்று (26.11.2010) வெள்ளிக்கிழமை முதல் ரூபா 500/= மீளளிக்கப்படாத தொகையை செலுத்தி விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 11.12.2010. 12.12.2010 அன்று மாலை 3.30 மணிக்கு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

தலைவர்,
ஆதார வைத்திய சாலை அபிவிருத்திக்குழு,
பருத்தித்துறை.

(மி/572559)

# 31 ஆம் நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் தம்பிப்பிள்ளை நாகேந்திரம்

(ஓய்வுபெற்ற வருமான வரி மேற்பார்வையாளர்)

மலர்வு
03
★
01
★
1944



உதிர்வு
27
★
10
★
2010

அன்பின் திரு உருவே! பாசத்தின் பிறப்பிடமே!
பெருமைமிகு நின் குணத்தை எம் நெஞ்சமதில்
நித்தமும் நினைத்திருப்போம்.
காலங்கள் ஓடிக் கடந்தாலும் அப்பா - உங்களை
எங்கள் நெஞ்சத்தில் வைத்துப் பூஜிப்போம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களிற்கும், ஆறுதல் கூறியவர்களிற்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களிற்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களிற்கும் யாழ். போதனா வைத்திய சாலையில் அவருக்கு உதவியவர்களிற்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.11.2010) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர் வரும் 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

* இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

...டச்சு வீதி,
உடுவில்.

(106538)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது இருக்கும் சமாதானச் சூழ்நிலையைக் குழப்பும் வகையில் இந்த முறை மாவீரர் நாளுக்கு இயக்கச் செய்தி எதையும் போட வேண்டாம். அப்படிப் போட்டால் உங்கள் அலுவலகம் கொளுத்தப்படும்'' - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எழுத்துப் பிழைகளுடனும் வசனப் பிழைகளுடனும் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதம் குடாநாட்டில் வெளிவரும் உதயன் தவிர்ந்த வேறு இரு பத்திரிகைகளின் அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. சந்தோசமாக வாழுகின்ற யாழ். குடாநாட்டு மக்கள் என்ற பெயரிலேயே இந்தக்மிரட்டல் அனுப்பப்பட்டிருந்தது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினம் மாவீரர் நாள் ஆகியவைகளை முன்னிட்டு குடாநாட்டில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளன. படையினர் நேற்றுப்பலஇடங்களில்வீதிச்சோதனை, ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (உ)

## அமைச்சர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி பிரதி அமைச்சராக சரத்குமார குணரத்ன வும், பொது நிர்வாகப் பிரதி அமைச்சராக விஜய தகநாயக்கவும் பதவியேற்றுக்கொண்டனர் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது.

## இந்திய அமைச்சர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அமைத்துக் கொடுக்கப்பட உள்ள 50ஆயிரம் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தப் பயணத்தின் போது ஆராயவுள்ளார். தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு குறித்தும் அவர் அரசியல் தலைவர்களுடன் ஆராய்வார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த போது அங்கு செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகள் தொடர்பாகவும், இரு நாடுகளுக்கும் பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பிலும், இந்திய - இலங்கை விஜயங்களின்போது செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் முன்னேற்றங்கள் குறித்தும் இன்று நடைபெறவுள்ள இந்திய - இலங்கை கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்தில் ஆராயப்படும். இந்திய - இலங்கை கூட்டு ஆணைக்குழுக் கூட்டமானது ஐந்து வருடங்களின் பின்னர் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ். நகரில் அமைக்கப்பட்டுள்ள இந்திய பிரதி தூதரகத்தைத் தொடக்கி வைப்பதற்காக நாளை 27ஆம் திகதி யாழ். குடாநாட்டுக்குச் செல்கிறார் கிருஷ்ணா. 1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒருவர் யாழ். குடாநாட்டுக்குச் செல்வது இதுவே முதல் தடவையாகும். கடந்த 1989ஆம் ஆண்டு சுட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் ஏ.அமிர்லிங்கத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக அன்று இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த நட்வர் சிங், யாழ். குடாநாட்டுக்கு சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-சி)

## அமைச்சர்கள் எண்ணிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதிலும் விகாரைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களை அமைப்பதனால் ஒன்றும் நடந்துவிடாது. இன்று எமது நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே மக்களுக்கான நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டங்களே நாட்டின் இன்றைய தேவையாகும்.

நாட்டை அபிவிருத்தியடையச் செய்வது அவசியம்தான். அதைவிட நாட்டு மக்கள் வாழ்வதற்கான சிறந்த வழியை ஏற்படுத்துவது முக்கியமாகும்.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சிறந்த வேலைத் திட்டத்தை அரசு முன்னெடுக்க வேண்டும். அதேவேளை, கொழும்பு நகரை மையம் கொண்ட வகையிலான அபிவிருத்திகளை குறைத்துக் கொண்டு கஷ்டப் பிரதேசங்களிலும், கிராமப் புறங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்'' - என்று மல்வத்தப் பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

மல்வத்துவபீட மகாநாயக்கரைச் சந்தித்து ஆசிபெற்ற பின்னர் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்த ரக்கித்த தேரரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

''தற்போதைய அமைச்சரவையின் எண்ணிக்கை குறைவடைய வேண்டும். அமைச்சர்கள் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் கடந்த காலங்களில் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை'' - என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பிரதமர் டி.எம்.ஜயரட்ன, எமது நாட்டில் செயற்படுத்தப்படும் இலவசக் கல்வி, சுகாதார சேவை மற்றும் நிவாரணம் போன்று வேறு எந்த நாடுகளிலும் இல்லை என்று மகாநாயக்கர்களுக்குத் தெளிவுபடுத்தினார். (உ-சி)

## 20 வருடங்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியமர்வு ஆரம்ப நிகழ்வுகள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலையப் பகுதியில் நடைபெறும் என யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

வலி. வடக்கில் இளவாலை வடக்கு (ஜே/221), இளவாலை மேற்கு (ஜே/222), வித்தகபுரம் (ஜே/223) ஆகிய பகுதிகளில் மக்களை மீள் குடியமர்த்துவதற்காக பாதுகாப்பு அமைச்சு ஜெனரல் ஜானக வல்கம ஊடாக அரச அதிபருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அனுமதியை வழங்கியிருந்தது.

இந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர உள்ள மக்களைத் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு வருகை தருமாறும், பிரதேச செயலகத்துக்கு வருகைதருகின்ற மக்கள் பின்னர் அங்கிருந்து பஸ்கள் மூலம் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர் என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

நகுலேஸ்வரர் ஆலயத்தில் சமய வழிபாடுகள் முடிவடைந்த பின்னர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் வலி,வடக்கு மீள்குடியேற்றம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும் எனவும், அந்த நிகழ்வில் வைத்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவுகள், சீமெந்துபைகள், தகரங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். அத்துடன் அந்தப்பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றலில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை - 950 குடும்பங்கள் அந்தப்பிரதேசதில் மீள் குடியமர்வுக்காக விண்ணப்பித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-15)

## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீதரன் ஜெயமாலா



கொக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு, சிந்மயபாரதி வித்தியாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீதரன் ஜெயமாலா (மாலா) நேற்று (25.11.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சோமசுந்தரம் ஸ்ரீதரனின் அன்பு மனைவியும் குககாந்தனின் (மானிப்பாய் மகளிர் கல்லூரி, தரம் 3 மாணவன்) பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - ஜெகதீஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - இராசபூபதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சிறீயுவராஜ், காலஞ்சென்ற மதன்ராஜா, ஜெயராஜா, திருமதி ஜெயந்தி நடராஜா, திருமதி ஜெயமீரா அருட்சோதி (ஹொலண்ட்), விமல்ராஜ் (லண்டன்), ஜெய கலா, நகுல்ராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி, கலாதேவி (கனடா), ரவீந்திரன் (கனடா), சிவதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் இராசலிங்கம், பத்மநாதன், அருள்தேவி, ஆனந்தராசா ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2010) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.30 மணிக்க தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*
*0214921353,*
*0779057720.*

(98704)

*தகவல் :*
**சோ.ஸ்ரீதரன்.**
*(கணவர்).*


புதிய பிரிவுகள் ஆரம்பம்

DBF & CBF

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
ஆரம்பம் 27-11-2010

DBF
(weekend &weekday classes)
*Accounting, Analysis & Planning (3.00-4.00)
* Rick Financing & Management (7.00-8.00)
*Advanced Management (12.00-100)
* Marketing Management (2.00-3.00)
* Business lending (1.00-2.00)
*Monetary & financial Systems( 11.00-12.00)

CBF All Subjects
(Week day evening Classes)

Furthur Detail
Director
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
Course Fees - Rs.7500/= Only
UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

MyWay English 3 மாத சனி ஞாயிறு பயிற்சிநெறி

Grammar

எந்தவொரு மொழியும் முதலில் பேச வேண்டும்
பேசுவதற்கு இலக்கணம் கற்க வேண்டியதில்லை
இலக்கணம் கற்பதால் ஆங்கிலம் பேச முடியாத நிலை ஏற்படும்

பேசுதல் என்பது இலக்கண ரீதியாக வசனங்களை உருவாக்குவதோ
அல்லது தமிழ் வசனங்களை ஆங்கிலத்திற்கு மொழி மாற்றுவதோ இல்லை

தமிழ் தொடர்பில்லாத புதிய ஒரு Channel இனை உருவாக்குவதன் மூலம்
இலக்கணம் தெரிந்தவர்கள் மட்டுமன்றி ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும்
3 மாதத்தில் மிக இலகுவாக சரளமாக ஆங்கிலத்தினை பேச முடியும்

ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும்
உயர்கல்வி மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

ஆரம்பம் : 27.11.2010 காலம் : 3 மாதங்கள்

பிரிவுகள் : காலை 8 – 9, 10 – 11, மாலை 1 – 2, 3 – 4, 4 – 5, 5 – 6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

தனியார் அலுவலர், வங்கியாளர், மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை

பல்கலைக்கழகம் பூர்த்திசெய்து அரச பணி நியமனம் பெறாதோரும் பயிற்சியில் சேரலாம்

MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது வடக்கு, கிழக்கை ராணுவ மயமாக்குவதற்கல்ல

## அமைச்சர் நிமால் சிறிபால கூறுகிறார்

கொழும்பு, நவ. 26

2011ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக பணம் ஒதுக்கப்பட்டிருப்பது வடக்கு, கிழக்கில் இராணுவ மயமாக்கலை மேற்கொள்வதற்காக அல்ல என்று அமைச்சர் நிமால் சிறிபாலடிசில்வா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பொருளாதார அபிவிருத்தியில் இலங்கை ஒரு நிலையான இடத்தில் உள்ளது. வறுமை குறைவடைந்துள்ளது. 85 வீதமான மக்கள் மின்சாரத்தைப் பெறுகின்றனர். 87 வீதமான மக்கள் நீர் வசதியைப் பெறுகின்றனர்.

பணவீக்கம் 6 வீதமாக உள்ளது. ஒரு கட்டத்தில் அது 25 வீதமாக இருந்தது. 10 அல்லது 12 வட்டி வீதத்தில் வங்கிகளில் கடன்களைப் பெற முடியும்.

இந்த நாடு கடனில் சிக்கியுள்ளது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இந்த நாடு அப்படி கடனில் சிக்கவில்லை. நாம் கடன் தவணையையும், வட்டி வீதத்தையும் சரியாகச் செலுத்தி வருகின்றோம்.

கிரீஸ், பிரேஸில் போன்ற நாடு கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாது கஷ்டப்பட்ட வரலாறு உண்டு. இலங்கைக்கு அப்படி யானதொரு நிலை ஏற்படவில்லை. நாட்டின் அபிவிருத்திக்கு கடன் பெறுவது தவிர்க்க முடியாத ஒன்று.

இந்த வரவு-செலவுத் திட்டம் வடக்கு, கிழக்கு மக்கள் மீது அதிக அக்கறை கொண்ட திட்டமாகும். இது தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் திட்டமாகும். வாக்குகளைக் குறிவைத்து இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்காக அதிக நிதி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் இராணுவ மயமாக்கலுக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. அதில் எதுவித உண்மையில்லை.

பாதுகாப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியில் 70 வீதத்திற்கும் மேலானவை படையினரின் சம்பளத்துக்கும், சீருடைக்குமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் காணப்படும் சீரான பொருளாதார முகாமைத்துவத்துக்கு எதிராக எவராலும் சவால் விட முடியாது. ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்றுவதற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் உதவி புரியும் - என்றார். (சி)



சாதனை...

ஊக்குவிப்பு: நல்லூர் ஜே/108 கிராம அலுவலர் பிரிவின் நல்லூர் முருகன் சிறுவர் கழகத்தின் சிறுவர் தின விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி செந்தில்நந்தனன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். அருகில் கிராம அலுவலர் திருமதி இ.இராகினியும் காணப்படுகிறார். (7)

# 21 வயதுக்கு மேற்பட்டோருக்கே இனி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

கொழும்பு, நவ.26

வெளிநாட்டுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுச் செல்லும் அனைவரும் 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி மற்றும் நலன்புரி சேவைகள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இந்த நடைமுறை விரைவில் அமுலுக்கு வரும் என்று தெரிவித்த அவர், இவ் வயதுக் கட்டுப்பாடு காரணமாக ரிஷானா நபீக்குக்கு இடம்பெற்ற விடயம் மீண்டும் எவருக்கும் இடம் பெறாது என்று குறிப்பிட்டார்.

இலங்கைப் பணிப்பெண் ரிஷானா நபீக் எஜமானரின் குழந்தையைக் கொன்றார் என்ற வழக்கில் சவூதியில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# துயிலும் இல்லங்களை அழிப்பதன் மூலம் இனங்களிடைய எதிர்ப்புத்தான் வளரும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

கொழும்பு, நவ. 25

மாவீரர் துயிலும் இல்லங்களையும் போராட்ட நினைவுச் சின்னங்களையும் அழித்தொழிப்பதன் மூலம் தமிழ் - சிங்கள மக்களிடையே ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கும் முயற்சி பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கில் 80 ஆயிரம் விதவைகள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் புதிய தகவலின்படி வடக்கில் மாத்திரம் 80ஆயிரம் விதவைகள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த விதவைகளில் 50 ஆயிரம் பேரின் கணவன்மார்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த விதவைகளைப் பராமரிக்க இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எதுவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. ஆனால், படையினரின் குடும்பங் களைப் பராமரிப்பதற்கு இதில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யுத்தத்தை நடத்தியவர்கள் எவ்வாறு கவனிக்கப்படுகின்றனர் என்று இதன் மூலம் நன்கு தெரிகின்றது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். சிறுவர்கள், தாய், தந்தையரை இழந்து அநாதை இல்லங்களில் கஷ்டப்படுகின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 500 இளைஞர்களின் உறுப்புகள் கழுத்துக் கீழ் இயங்காமல் உள்ளன. இவர்கள் அனைவரையும் புலிகளாகப் பார்க்க முடியாது. பொதுமக்களும் இவர்களும் உள்ளனர்.

காலம் முழுவதும் உறவினர்கள் இவர்களைப் பராமரிக்க வேண்டியுள்ளது. இவர்களைப் பராமரிப்பதற்காக இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

வடக்கில் மாவீரர்கள் துயிலும் இல்லங்களை அழித்துவிட்டு அந்த இடத்தில் இராணுவ முகாம்களும், விளையாட்டு மைதானங்களும் அமைக்கப்படுகின்றன.

இவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் - சிங்கள மக்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்று அரசு நினைக்கக்கூடாது. ஒற்றுமைக்குப் பதிலாக எதிர்ப்புதான் வளரும்.

போர்ச்சின்னங்கள் எதையும் விட்டுவைக்காது அவற்றை அழித்தொழிக்க அரசு கையாளும் முறைமை காலம் முழுவதும் நீங்காத வடுவாகவே அமையும்.

இந்த நடவடிக்கையை நிறுத்துமாறு நான் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளேன்.

அரசு இவ்வாறான செயல்களில் இருந்து விடுபட்டு தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைக்குத் தீர்வைக்காண முற்பட வேண்டும் - என்றார். (சி)

# இந்தியாவில் புலித் தடையை நீக்கக் கோரி மீண்டும் மனு

## மத்திய அரசுக்கு நோட்டீஸ்

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிப்பது என்ற நீதிபதி விக்ரம்ஜித்சென் தலைமையிலான தீர்ப்பாயத்தின் முடிவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

அதன் மீது மத்திய அரசு தனது நிலையைத் தெரிவிக்குமாறு கூறி சென்னை உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு மே மாதத்தில் விடுதலைப் புலிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டனர் என இலங்கையே கூறியிருக்கும் நிலையில், அதற்கும் முன் நடந்த சம்பவங்களை ஆதாரமாக வைத்து அதன் மீதான தடையை நீடிப்பது தவறு என மனுதாரர், சிறைவாசிகளின் நலனுக்கான அமைப்பின் இயக்குநர் புகழேந்தி வாதிட்டிருக்கிறார்.

நாடு கடந்த தமிழீழ அரசு அமைக்கப்பட்டிருப்பது கூட புலிகளால் ஏற்படக்கூடிய ஆபத்தைச் சுட்டிக்காட்டுகிறது என தீர்ப்பாயம் கூறியிருக்கிறது.

இந்நிலையில் தீர்ப்பாய முடிவு செல்லாது எனவும் வாதிடப்பட்டிருக்கிறது.

தலைமை நீதிபதி யூசுப் இக்பால் மற்றும் நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ஆகியோர் அடங்கிய ஆயம் மத்திய அரசிற்கும் தீர்ப்பாயத்திற்கும் நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டது.

# இரண்டரைக்கோடி ரூபா பெறுமதியான கஞ்சாதோட்டம்

## வெல்லவாயவில் தீக்கிரை

கொழும்பு, நவ.26

கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற் கொண்ட விசேட நடவடிக்கையின் போது, வெல்லவாய பிரதேசத்தில் எட்டு ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சாதோட்டம் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளது.

இரண்டரைக்கோடி ரூபா பெறுமதியுள்ள 57,000 கிலோ எடைகொண்ட கஞ்சா செடிகளே இவ்வாறு தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இதுவரை அழிக்கப்பட்ட கஞ்சாதோட்டங்களில் இதுவே மிகப்பெரியது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் கடந்த வாரம் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவரிடம் பெற்ற தகவலின் பிரகாரமே மேற்படி தோட்டம் அழிக்கப்பட்டுள்ளது.

வெல்லவாய காட்டுப் பகுதியில் இருந்த இந்த தோட்டத்தை முற்றுகையிட்ட பொலிஸார் கடந்த மூன்று தினங்கள் இரவு பகலாக நேற்று அதிகாலை வரை விழித்திருந்து அதனை அழிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். (சி)

# கிருஷ்ணா, பாக். ஜனாதிபதி இலங்கைக்கு பல உதவிகளை அள்ளிக்கொண்டு வருகை

## பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ.26

இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும், பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியும் இலங்கைக்கு நன்மை பயக்கும் பல உதவிகளை அள்ளிக்கொண்டு வருகின்றனர் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வன்னியில் இடம்பெயர்ந்தோருக்கான இந்திய வழங்கவிருக்கும் 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்துவைப்பார்.

வடக்கில் மூடிய இடங்களில் ரயில்வே பாதைகள் நிர்மாணப் பணியை அவர் ஆரம்பித்து வைப்பார். யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் இந்திய உதவித் தூதரகங்களை ஆரம்பித்து வைக்கின்றார்.

பலாலி விமான நிலையப் புனரமைப்பு உட்பட இன்னும் பல உதவிகளையும் இந்தியா செய்யும். இவை அனைத்தையும் இந்தியா அன்பளிப்பாகவே எமக்கு வழங்குகிறது.

கிருஷ்ணா இங்கிருந்து இந்தியா செல்லும் தினத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி இங்கு வருகிறார். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, சீனித் தொழிற்சாலை, சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகள் போன்றவற்றுக்கு அவர் உதவிகளை வழங்குவார். அது மாத்திரமின்றி இந்தியாவின் வர்த்தக அமைச்சர் ஆனந்த சர்மாவும் விரைவில் இலங்கை வரவுள்ளார்.

தற்போது பெல்ஜியத்தில் இருந்து 50 பேர் அடங்கிய உயர் மட்ட வர்த்தகக் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது. அக்குழு இலங்கை கம்பனிகளுடன் பேச்சுகளை நடத்தும். டிசெம்பர் மாதம் மலேஷியாவில் இருந்தும் தொழில் முயற்சியாளர்கள் குழுவொன்று இலங்கை வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சர்வதேச கொள்கையே இவ்வாறு சர்வதேச நாடுகள் எமக்கு உதவக் காரணம்.

-இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தலாவளை வெள்ள வாய்க்கால் பகுதிகளை சிமெந்தால் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

சண்டிலிப்பாய்,நவ.26

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள கொத்தலாவளை வெள்ளவாய்க்காலின் இரு கரைகளும் மழை காலங்களில் நாளுக்கு நாள் இடிந்தும் கரைந்தும் போகின்றது. இதனால் அருகிலுள்ள குடியிருப்புக் காணிகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே இது குறித்துக் கவலை அடைந்துள்ள இந்தப் பகுதி மக்கள், வாய்க்காலின் இரு பக்கங்களையும் சிமெந்தினால் செப்பனிட வேண்டும் என சம்பந்தப்பட்ட வர்களைக் கோரியுள்ளனர். சுதுமலை அம்மன் கோயில் வடக்குப் பகுதியிலிருந்து வெட்டப்பட்ட மேற்படி வெள்ள வாய்க்கால் மக்களின் குடியிருப்புக்கள் ஊடாக மானிப்பாய்க் குளத்தைச் சென்றடைகிறது.

கடந்த வருடங்களுக்கு முன்பு வெட்டப்பட்ட இந்த வாய்க்கால் மூலம் சுதுமலை வயல் வெளியில் தேங்கி நிற்கும் மழை வெள்ளம் மானிப்பாய் குளத்திற்குச் சென்றடைகிறது. எனவே மழை காலங்களில் வாய்க்காலின் இரு பக்கங்களும் கரைந்தும், இடிந்தும் போவதால் குடியிருப்புக் காணிகளுக்கு நாளடைவில் ஆபத்து ஏற்படக் கூடுமென்று மக்கள் அஞ்சுகின்றனர்.

கடந்த வருடம் குறிப்பிட்டளவு தூரம் சிமெந்தினால் கட்டப்பட்டுள்ளது. மிகுதியாகவுள்ள இடங்களையும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சிமெந்தினால் கட்டுமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-115)

## ஆறுமுகநாவலர் குருபூசை

யாழ்ப்பாணம்,நவ.26

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 131 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சைவ பரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சுப்பிரமணியம் தியாகலிங்கம் கலந்து கொள்வார். நாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதலிடம்பெற்ற மாணவர்களின் உரைகள், காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் கலை நிகழ்வுகள் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு என்பனவும் இடம்பெறவுள்ளன. (ம-313)


### தொல்லியற் திணைக்களம், யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணக் கோட்டையை மீள்புனரமைப்புச் செய்வதற்கான தொழிலாளர்களை வழங்குவதற்கான
### கூறு விலைகோரல் விண்ணப்பம் - 2011

யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள விலைகோரல் சபையின் தலைவர் யாழ்ப்பாணக் கோட்டையை மீள்புனரமைப்புச் செய்வதற்கு வேண்டிய தொழிலாளர்கள்(100பேர்), மேசன்மார் (50 பேர்) ஆகியவர்களை வழங்கக்கூடிய அங்கீகாரம் பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து முத்திரையிடப்பட்ட கூறுவிலை கோரல் விண்ணப்பத்தை 10/12/2010 வரை ஏற்கவுள்ளார்.

மேலதிக விவரங்களை இல.160, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்தில் வேலை நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். 15.12.2010 அன்று பிற்பகல் 2 மணிக்கு கூறு விலை கோரல் விண்ணப்பங்கள் பரிசிலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும். அதில் விண்ணப்பித்தோர் அல்லது அவர் பிரதிநிதி நேரில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

| | |
|---|---|
| பணிப்பாளர் | தலைவர், |
| கலாநிதி செனரத் திஸநாயக்க, | கூறு விலைகோரல் சபை, |
| இயக்குநர், | பிராந்திய அலுவலகம், |
| தொல்லியல் திணைக்களம், | தொல்லியல் திணைக்களம், |
| மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, | இல.160, கோயில் வீதி, |
| கொழும்பு-07. (சி/572526) | யாழ்ப்பாணம். |



### முக்கிய அறிவித்தல்
### 30.04.2009 இல் நிதிக்கூற்று தயாரித்தல்

மேற்படி எமது சங்கம் மீளக்குடியமர்ந்தபின் 30.04.2009 இல் கணக்குகளை ஒழுங்குபடுத்தி நிதிநிலைக்கூற்று தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கமைய கீழ்வரும் விடயங்களை மேற்படி திகதியில் உள்ளவாறான உறுதிப்பத்திரங்களை 10.12.2010 இற்கு முன் தலைவர்/பொதுமுகாமையாளர்/கிளி/ மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்(வ/து), செல்வா நகர், கிளிநொச்சி எனும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம் அல்லது நேரடியாகவும் கையளிக்க முடியும்.

**1. சங்கத்திற்கு வருமதியானது**
1. 01) வியாபாரக்கடன் பெற்றோர்
2. 02) முற்பணம் பெற்றோர்
3. 03) மற்றும் ஏனைய வருமதிகள்

**2. சங்கத்திலிருந்து செலுத்த வேண்டியவை**
2. 01) வியாபார சென்மதிகள்
2. 02) முற்பணங்கள்
2. 03) ஏனைய சென்மதிகள்

**3. இடம்பெயர்வு தொடர்பில் சங்கம் தொடர்பாக ஏதும் தகவல்கள் இருப்பின் அதனையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

தலைவர்
கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்,
(சி/572553) செல்வாநகர், கிளிநொச்சி.



### ஜாதிக சம்பத
ஜாதிக சம்பத Jathika Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் - 76
திகதி - 24.11.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து S அதிர்ஷ்ட இலக்கம் 02 வெற்றி இலக்கம் 6 6 0 3 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S 02 6 6 0 3 7 | ரூ. 23,296,907.00 | - |
| 1 பரிசு | 02 6 6 0 3 7 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 6 6 0 3 7 | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 6 0 3 7 | ரூ. 10,000.00 | 30 |
| 4 பரிசு | 0 3 7 | ரூ. 1,000.00 | 265 |
| 5 பரிசு | 3 7 | ரூ. 50.00 | 2660 |
| 6 பரிசு | 7 | ரூ. 20.00 | 25539 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 6 6 0 3 | ரூ. 1,000.00 | 28 |
| 8 பரிசு | 6 6 0 | ரூ. 100.00 | 257 |
| 9 பரிசு | 6 6 | ரூ. 50.00 | 2679 |
| 10 பரிசு | S | ரூ. 20.00 | 10490 |
| 11 பரிசு | S 02 | ரூ. 100.00 | 1212 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,127,430.00

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம்: www.nlb.lk
அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ.23,635,108.00



### ஜயவிரு JAYAVIRU
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 538
சீட்டிழுப்பு திகதி: 24.11.2010

வெற்றி எழுத்து: Z வெற்றி இலக்கங்கள்: 07 16 42 67

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.12,887,197.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 224 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 437 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 11108 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6328 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 159888 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25595 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ.7,358,580.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.13,115,551.20



### விற்பனைக்கு
கட்டட நிர்மாணத்திற்கு தேவையான இரும்பிலான கூட்டிக் குறைக்கக் கூடிய முக்கு (Jack) விற்பனைக்கு உண்டு
தொடர்:-0776004454

### தவறிவிட்டது
தியாகராஜா சிவானந்தம் என்பவரது தே.அ.அ (851343270V) நீர்வேலியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு:-
தி.சிவானந்தம்,
நீர்வேலி மத்தி,நீர்வேலி
T.P:-0773721920

### கடை, வீடு வாடகைக்கு
No.21, சிறாம்பியடி லேனில் (கொசி ஹோட்டல், நாகவிகாரை அருகில்) உள்ள இரண்டு மாடிகள் கொண்ட கடைக் கட்டடமும் சகல வசதிகளும் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-
0778429303, 0774416546

### வீடு வாடகைக்குத் தேவை
அரச உத்தியோகத்தரின் இருவர் கொண்ட குடும்பத்திற்கு சுண்டிக்குளி,அரியாலை,கச்சேரி கிழக்கு, நல்லூர் பகுதிகளில் சகல வசதிகளுடனான வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:-0776087227,0776279385



### மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPHY)
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்
26.11.2010 முதல் 02.12.2010 வரை யாழில்

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம், பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=
காசல் ரூறிஸ்ஸ் இன்
(வெலிங்டன் சந்திக்கு பெருமாள் கோயிலுக்குமிடையில்)
சிவதர்ஷன் எலக்ரோனிக் மேல்மாடி
392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0719315664, 0777569205



### பாராட்டி வாழ்த்துகிறோம்
### புலமைப் பரிசில் 2010 சித்தியடைந்தோர்
### யா/ மாதகல் சென் .தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை


யோ.றெனால்ட் ஜனுஷன் 161 புள்ளிகள்


எ.துவாரகா 157 புள்ளிகள்


ம. நாகதீபன் 154 புள்ளிகள்


அ.திலியராஜ் 153 புள்ளிகள்


செ. மதுசாயினி 150 புள்ளிகள்


வ. வரணியா 150 புள்ளிகள்

ஆகியோரைப் பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக்கு தாய்லாந்து அழகிகள் வரவழைப்பு பாலியல் செயற்பாடுகளில் அவர்கள் குதிப்பு!

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப்பணிகள் தொடர்பாக சபையில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிக்காமல் தட்டிக்கழிக்கும் அரசும் அமைச்சர் களும் எப்படி கிழக்கு மாகாணத்தை அபிவிருத்திசெய்யப் போகின்றார்கள் என்று கேள்வி எழுப்புகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சம்பந்தம் இல்லாத இடக்கு முடக்கான கேள்விகளைக் கேட்டு அரசைச் சங்கடத்தில் போடுவதன் மூலம் கீழ்த்தரமான விளம்பரம் தேட முணைகின்றனர் என்று எதிரணியினர் மீது சீறிப் பாய்கிறார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்திலேயே இப்படியான பரபஸ்பர குற்றச்சாட்டுக்கள் கிளப்பப்பட்டன.

நாடாளுமன்றம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

நிகழ்ச்சி நிரலின்படி வாய்மூல விடைக்கான 13 கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. ஆனால் ஆக இரண்டு கேள்விகளுக்கு மட்டுமே பதில்கள் அளிக்கப்பட்டன. ஏனைய அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிக்கக் கால அவகாசம் கோரப்பட்டது.

### சூடான வாதம்

இதன் காரணமாகவே இந்தச் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க, "நிதி பொறுப்புக் கூறல்" சட்டத் தின்படி நாட்டில் நிதி நிலைமை எப்போது சபையில் முன்வைக்கப்படும் என்று கேள்வி எழுப்பியதோடு அது தொடர்பாக மேலும் பல விவரங்களைக் கேட்டிருந்தார்.

கேள்விகளுக்குப் பதில் அளித்த ஆளும் கட்சிக் கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, "கௌரவ ரவி கருணாநாயக்க இதனோடு தொடர்புடைய கேள்விகள் இரண்டை ஏற்கனவே கேட்டுள்ளார். அதற்கான பதில்களும் அளிக்கப்பட்டுள்ளன. இப்போது மூன்றாவது தடவையாகக் கேட்டுள்ளார். எனினும் நீண்ட விவரங்கள் என்பதால் விடையளிக்க 3 வார கால அவகாசம் தேவை - என்றார் அவர்.

அமைச்சரின் கூற்றை மறுத்த ரவி கருணாநாயக்க, நான் முன்பு கேட்டவை இதனோடு தொடர்புடையவையாக இருக்கலாம். ஆனால் இன்று நான் கேட்டிருப்பது நிதியுடன் தொடர்புடையது. அதற்குப் பதில் அளிப்பது அமைச்சரின் கடமை - என்றார்.

இந்த விவாதத்தின்போது எரிபொருள் தொடர்பான ஹெட்ஜிங் (Hedging) ஒப்பந்தம் சம்பந்தமான விடயமும் கிளப்பப்பட்டது.

### நீதிமன்ற விவகாரம் சபையில் விவாதிக்க முடியாது

இவ்விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் தீர்ப்பும் நமக்குச் சாதகமாகவே வரும் என நம்புகின்றோம். என்றாலும் நீதிமன்றத்தின் முன் உள்ள விடயங்கள்




தொடர்பாக இந்தச் சபையில் பிரஸ்தாபிக்க முடியாது என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதில் அளிக்க மறுத்துவிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

அதாவது நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின்படி நீதிமன்றத்தின் முன்னுள்ள எந்த ஒரு விடயத்தையும் வெளியிலோ நாடாளுமன்றத்தில் விமர்சிக்கவோ அல்லது கேள்வி எழுப்பவோ முடியாது.

இப்படியான நிலையில் நிலையியல் கட்டளைக்கு ஒவ்வாத கேள்விகளை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் அச்சிடவும் கூடாது என வலியுறுத்தினார் அஸ்வர் எம்.பி.

இதனை நன்கு செவிமடுத்த சாபாநாயகர் இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்யப்படும் என்றார்.

மேலும் ஒரு பரபரப்பான நிலைமையை உருவாக்கினார் மற்றுமொரு ஐ.தே.க. உறுப்பினரான தயாசிறி ஜயசேகர.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை திருக்கொண்டியாடுமா வீதி, அல்லை கந்தளாய் வீதி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அபிவிருத்தி தொடர்பாக தனித்தனியான இரு கேள்விகளை எழுப்பினார்.

### பதில் அளிக்க 3 வார அவகாசம்

இந்த இரண்டு கேள்விகளுக்குமே பதில் அளிப்பதற்கு மூன்று வாரகால அவகாசம் தேவை என தினேஷ் குணவர்த்தன கூறினார்.

என்ன ஐயா இது. கிழக்கு மாகாண அபிவிருத்திக்குப் பல அமைச்சர்கள் இருக்கின்றனர். நான் கேட்டது மிகவும் சாதாரணமானது. அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது இந்த விவ்ரங்கள் விரல் நுனியில் இருக்கவேண்டும்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க முடியாத அமைச்சர்கள் எப்படி கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யப்போகின்றீர்கள். எல்லாம் பேச்சளவில் மட்டும்தான். அமைச்சர் தினேஷ் குணவர்த்தன எல்லாவற்றிற்கும் கால அவகாசம் கேட்டுக் கொண்டே இருக்கின்றார். இப்பொழுது தான் நிறைய அமைச்சர்கள் இருக்கின்றார்களே. அவர்களுள் ஒருவரை கேள்விகளுக்கு கால அவகாசம் கேட்கும் அமைச்சர் என்று நியமித்து விடலாமே என்றார் தயாசிறி ஜயசேகர. இதனால் சபையில் கலகலப்பான நிலை ஏற்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா சில அந்தரங்க விடயங்களைப் போட்டுச் சடைந்தார்.

உல்லாசப் பயணிகளை குஷிப்படுத்தும் வகையில் கஸினோ உட்பட களியாட்ட மடங்களும் மூலைக்கு மூலை உருவாகிக் கொண்டு வருகின்றன. அண்மையில் ஆயிரக்கணக்கான தாய்லாந்து அழகிகள் அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்கள் அப்பட்டமாக விபசாரத்தில் இறங்கியுள்ளனர் என்று கூறினார்.

அப்போது முன்வரிசையில் அமர்ந்திருந்த அமைச்சர்கள் சிலர் சிரித்துவிட்டனர். இதை அவதானித்த காமினி ஜயவிக்கிரம பெரேரா, இங்கே அமைச்சர்கள் சிரித்துக் கொண்டு இருக்கின்றீர்கள்.

உங்கள் எல்லோருடைய வசதிக்காகத்தானே உங்கள் அரசு இதைச் செய்துள்ளது என்று குத்தலாகக் கூறினார்.

இப்படிக் கூறிய ஜயவிக்கிரம பெரேரா மற்றும் ஒரு முக்கியமான விடயத்தையும் சுட்டிக் காட்டினார்.

அதாவது இப்பொழுது நாட்டில் இயங்கிவரும் 14 வங்கிகளில் முதலீடு செய்யப்படும் பணத்திற்கு அரசின் உத்தரவாதம் இல்லை. இதேபோன்று இந்தோனேஷியாவில் இயங்கி வந்த பல வங்கிகள் தலைமறைவாகியுள்ளன, பணம் போட்டவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். அங்கே வங்கிக் கட்டடங்கள் மட்டுமே மிஞ்சியுள்ளன. பணமும் இல்லை. ஆட்களும் இல்லை. இவ்விடயத்தில் அரசு மிகவும் நிதானத்துடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ளவேண்டும் என்று அரசுக்கு எச்சரிக்கை ஒன்றையும் விடுத்தார் காமினி ஜயவிக்கிரம பெரேரா.

### பீரிஸ் பெருமிதம்

விவாதத்தின் போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். ஜனாதிபதியினால் முன்வைக் கப்பட்டுள்ள பட்ஜெட் சர்வதேச நாடுகளால் பாராட்டப்பட்டுள்ளது. இது முற்றுமுழுதும் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட பட்ஜெட் - என்றார்.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, மலேஷியா, பிரிட்டன் உட்பட அபிவிருத்தியடைந்த நாடுகள் பல இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு கோடி கோடியாக வாரி வழங்குகின்றன. சர்வதேச முதலீட்டாளர்கள் இங்கு தொழில் முயற்சிகளில் ஈடுபடவுள்ளனர் - என்றும் போராசிரியர் பீரிஸ் புள்ளி விவரங்களுடன் சுட்டிக்காட்டினார்.

### சோபை இழந்த விவாதம்

பட்ஜெட் உரை மீதான இரண்டாவது நாள் விவாதம் சோபை இழந்து காணப்பட்டது. பகல் உணவின் பின்னர் ஆளும் தரப்பில் முன்வரிசை ஆசனங்கள் அனைத்தும் காலியாகவே காணப்பட்டன.

எதிர்த் தரப்பில் உரையாற்றிய உறுப்பினர்களைத் தவிர வேறு எவரையுமே சபைக்குள் காணமுடியவில்லை.

உரையாற்றியவர்களும் நாட்காலிகளைப் பார்த்தே பேசினர். இதனால் அவர்களுடைய பேச்சுகளுக்கு இடையூறுகளும் ஏற்படவில்லை.

மாலை வேளையில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன், ஒரே நாடு, ஒரே மக்கள், எல்லோரும் சமம் என்று கூறிக்கொண்டு சமூக கலாசார அழிப்பு நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கில் அரசும் இராணுவமும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளைப் புரிந்து வருகின்றன. அங்கே அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் கூட இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அங்கே அடக்கம் செய்யப்பட்டுள்ளவர்கள் புலிகளாக இருக்கலாம், புதைக்கப்பட்ட சடலங்களைக் கூட இப்படி சித்திரவதை செய்கின்றோர்களே என ஆயிரம் ஆயிரம் பெற்றோர்கள் வேதனைப்படுகின்றனர் என்றும் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.

குழுக்களின் பிரதித்தலைவர் முருகேசு சந்திரகுமார், போர் முடிந்த நிலையிலும் பாதுகாப்பிற்கு கூடுதலான நிதியை ஒதுக்கியிருப்பதை நியாயப்படுத்தினார். யுத்தம் முடிந்துவிட்டது என்றாலும் மீண்டும் இப்படியான ஒரு யுத்தம் வராமல் பாதுகாப்பதற்காகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று விளக்கமளித்தார்.

அதேவேளை வடக்குக் கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக விசேடமாக நிதி ஒதுக்கப்படவேண்டும், மாகாண சபைகளுக்கு கூடுதலான நிதி வழங்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஐ.தே.க. உறுப்பினரான விஜயதாஸ ராஜபக்ஷ, நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் அதன் அவசியங்களையும் தொட்டுக்காட்டினார்.

கடந்த காலங்களில் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் நடைபெறும் சமயங்

**உதயன் சபைச் செய்தியாளர் இரா.புத்திரசிகாமணி**

களில் நிதி அமைச்சரும், பிரதி அமைச்சரும் சபையில் இருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகளையும் முறைப்பாடுகளையும் அவதானித்துப் பதில் அளிப்பார்கள்.

ஆனால் இங்கு அமைச்சரும் இல்லை; பிரதி அமைச்சரும் இல்லை. ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத காரணத்தால் இந்தச் சபையில் தொடர்ந்து இருக்க முடியவில்லை. எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நிதி அமைச்சுப் பொறுப்பை தன்னிடமே வைத்துக்கொண்டிருப்பது சாத்தியப்படுமா என்று கேள்வி எழுப்பியதோடு -

இதன் யாதார்த்தத்தை உணர்ந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, நிதி அமைச்சுப் பொறுப்பை சரத் அமுனுகமவிடம் ஒப்படைத் தார் என்றும் விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக் காட்டினார்.

இன்றைய ஜனாதிபதியும் நிதி அமைச்சுப் பதவியை ஏற்கக் கூடாது என்று நான் கூறவில்லை. யாதார்த்தையே கூறுகின்றேன் என்றார் விஜயதாஸ ராஜபக்ஷ.

## பாலர் வகுப்புக் குழந்தை துஷ்பிரயாகம்; 68 வயது பாடசாலை வான்சாரதி கைது

பாலர் பாடசாலைக்கு செல்லும் 3 வயதுப் பெண் குழந்தைமீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட 68 வயதுடைய பாடசாலை வான் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுவர் பாதுகாப்பு பிரிவு பொலிஸாரிடம் குழந்தையின் பெற்றோர் செய்த முறைப்பாட்டை அடுத்தே சாரதி கைது செய்யப்பட்டார். 68 வயதான இந்த வான்சாரதி கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குழந்தை சம்பவம் குறித்து பெற்றோரிடம் முறைப்பாடு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சம்பவங்கள் கவனத்தில் கொண்டு பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலை வான்களில் அனுப்புவது குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

குழநதை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை வானில் குழந்தை தனிமையாக இருந்த வேளையில் சாரதி இக்குற்றத்தை புரிந்துள்ளார். பாடசாலை சேவையில் ஈடுபடும் சில வான்களின் சாரதிகள் இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று[illegible] பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

**வாழ்வாதார அபிவிருத்தி...**



உதவி: மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் கொக்குவில் கிராம அபிவிருத்தி அமைப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.
நிகழ்வில் கொக்குவில் மேற்கு ஜே/125 பிரிவுக் கிராம அலு[illegible]னாளி ஒருவருக்கு வாழ்வா[illegible]றார். (201)

## பெண்கள் வன்முறைக்கு எதிரான நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.26

பெண்கள் வன்முறைக்கு எதிரான வார நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பெண்கள் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அமைச்சின் தவிசாளர் கலாநிதி திருமதி நீலா குணசேகரவும், சிறப்பு விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலர் பாடசாலையின் கலைவிழா

யாழ்ப்பாணம், நவ.26

சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையின் கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நாவலர் பாடசாலை மண்டபத்தில் தலைவர் சி.சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சுந்தரசிவம் சிறப்பு விருந்தினராகவும், வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களது கலைநிகழ்வுகளும் 'தமிழர் தம் பாரம்பரிய விழுமியங்கள்' இன்றைய சூழலில் பாதிக்கப்படுகின்றதா? என்ற தலைப்பிலான சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளன.(ம-9)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1944.04.04

மறைவு
2006.12.10

திதி: பஞ்சமி

### செல்லத்துரை குகநாதன் (தவம்)

உங்கள் சிரிப்பும் அன்பான கதையும்
மறக்க முடியவில்லை - அப்பா
அன்பின் தெய்வமாக அறிவின் ஆசானாக
பார்புகழ் நாம் வாழ எல்லாம் எமக்களித்தீர்- அப்பா
இன்பமான வாழ்க்கையில் செல்வத்தாயின்
காலடி சென்று நான்கு ஆண்டுகள் ஆகின்றது
என்றும் உங்கள் நினைவால் வாழ்ந்திடுவோம்- அப்பா

உங்கள் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

108, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## ஆரம்பக்கல்வி செயலமர்வு இடம் மாற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ.26

கல்வியமைச்சின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆரம்பக் கல்வி செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய் சங்கமத்தில் இது நடைபெற விருந்தமை குறிப்பிடத்தக்கது. (204)

## திருவிளக்குப் பூசைகள்

யாழ்ப்பாணம், நவ.26

கோண்டாவில் சபரீ ஐயப்பன் ஆலயத்தில் இன்று மாலை 5 மணிக்கு திரு விளக்கு பூசை வழிபாடுகள், வில்வ அர்ச்சனை என்பன இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மகரஜோதி விழாவில் நீராஞ்சணம், கற்பூர ஆதி விழா என்பன இடம் பெறவுள்ளன. (201-496)

## சாவகச்சேரி வடக்கிற்கு பதில் கிராம அலுவலர்

தென்மராட்சி,நவ.26

சாவகச்சேரி வடக்கு (ஜே/303) கிராம அலுவலராக கடமையாற்றிய க.சுந்தரராஜா சேவையி லிருந்து இளைப்பாறியுள்ளார். அந்தப் பிரிவுக்கு மீசாலை வடக்கு கிராம அலுவலர் சு.உலகநாதன் பதில் கடமை கிராம அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார். (ம-207)

## செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.26

தேசியகல்விநிறுவக கல்விடிப்ளோமா 2 ஆம் வருட செயலமர்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக சிரேஷ்ட விரிவுரையாளரும் தேசிய கல்வி நிறுவக பிராந்திய இணைப்பாளருமான திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார். (201)

## உதவிப் பணகொடுப்பனவு

வடமராட்சி, நவ.26

வடமராட்சிப்பிரதேசத்திலுள்ள பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கரவெட்டி ஆகிய தபால் நிலையங்கள் ஊடாக பொதுசன மாதாந்த உதவிப்பணம், காசநோய், புற்றுநோய்த் தடுப்பு உதவிப்பணம்பெறுபவர்கள் டிசம்பர் மாதத்துக்கான உதவித்தொகையை டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிக்குள் பெற்றுக் கொள்ளுமாறு [illegible] தபாலதிபர்கள் அறிவித்துள்ளார்கள். (236)

## ஓளிர்வில் ஓராண்டு



அமரர் கந்தையா பொன்னம்பலம்

(முல்லை, கிளிநொச்சி, யாழ்.மாவட்டங்களின் முன்னாள் அரசாங்க அதிபர்)

மண்ணில்
30.06.1934

விண்ணில்
26.11.2009

திதி: 30.11.2010

மீண்டும் மீண்டும் நினைக்கின்றோம்.....

எங்களுக்குள்ளே அவர் வாழ்கின்றார் உங்களுக்குள்ளே அவர் உறவாகி நிற்கின்றார் தாயக மண்ணில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களாய் படித்த பெண்களின் முதல் விவசாயக் குடியேற்றமாய் பட்டதாரிகள் மண்வளம் பெருக்கும் குடியேற்றங்களாய் முத்தையன்கட்டு முதல் முள்ளிவாய்க்கால் வரை பரந்து கிடக்கும் மண்வள. கடல்வள மக்கள் அறிவு வளர்த் திட்டங்கள் பலவாய் மக்களுக்குச் சக்தியளிக்கும் சமுக உள்வாங்கல் எண்ணங்களாய் அவர் தம் அறிவு. ஆற்றல். அனுபவம் எங்கும் விரிந்து கிடப்பதை மீண்டும். மீண்டும் நினைக்கின்றோம் உங்களுடன் சேர்ந்து!

பொருளாதார இறுக்கக் காலத்து காணி அதிகாரியாய் விவசாயத் திட்டங்கள் கொண்டு கிளிநொச்சி மக்களை வாழவைத்தார். போராட்ட காலத்து மூன்று மாவட்டங்களின் அரசாங்க அதிபராய் அதுவும் நவாலி தேவாலய குண்டுவீச்சு, நாகர் கோயில் பள்ளி மீதான குண்டு வீச்சு முதல் பொருளாதார தடைகள், மருத்துவ மறுப்புக்கள் 1995இன் பாரிய இடப்பெயர்ச்சியெனப் பல சோதனைகள் கண்டு அரச அதிபருக்கே மெய் உரைத்து வாதாடிய அஞ்சா நெஞ்சினராய் பணி விடுத்தும் மண்ணையும், மக்களையும் அறிவுரையால் வழிநடத்திய உங்கள் உறவான அவரை மீண்டும் மீண்டும் நினைக்கின்றோம்!

பழம்பாசியில் எல்லா ஆண்களும் இனஅழிப்புக்குள்ளான வேளை இரத்தக் குளியலில் கிடந்தோருக்கு இறுதிக்கிரியைகள் செய்த துணிவினை தனது முல்லை மண்ணின் வளங்களும் மக்களும் பட்ட துன்பங்களைக் கேட்ட மாத்திரத்தே இங்கிலாந்திலிருந்து யாழ்.வந்த மறுநாளே ஆவிகலங்கி அடங்கும் அளவுக்கு உங்கள் மேல் கொண்ட பேரன்பை உங்களுடன் சேர்ந்து மீண்டும் மீண்டும் ஓராண்டாய் நினைக்கின்றோம். அவர் அன்பு செய்த அனைவரையும் அவரை அன்பு செய்த எல்லோரையும் - இவ் ஓராண்டாய் நன்றியுடன் நாம் மீண்டும் மீண்டும் நினைக்கின்றோம்
ஓராண்டல்ல ஒரு யுகமானாலும் எங்களுக்குள்ளே அவர் என்றும் வாழ்ந்திருப்பார்!

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்.

(U.K)

தென்மராட்சி கிழக்கு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்

## பதவி வெற்றிடம்

### பதவி: கணக்காளர் 104/08

சம்பள அளவுத்திட்டம் (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 66/2006 சுற்று நிருபத்திற்கமைய 104/08 ஆவது சம்பளக் குறியீடு)
11200-14100
140X10-150X10

1.வயது: 18-45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லைபொருந்தாது)
2.பிணை: தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பவற்றைச் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
3.கணினி அறிவு முக்கியமானதாகக் கருதப்படும்.

தகைமைகள்:-

அ. கூட்டுறவுப் பணியாளருக்கான 9ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/உள்துறைக் கணக்காய்வாளர் பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளருக்கான 10ஆவது சம்பளத் திட்டத் தில் கணக்காளர்/உள்துறைக் கணக்காய்வாளர் பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Licentiate Examination) அல்லது கிரய முகாமைத்துவக் கணக்கறிஞர் நிறுவனத்தின் Professional Part-I, பரீட்சையில் சித்தி அல்லது இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான தகைமை அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்காளர்/உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்பிக்கும் முறை:**

இப்பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்திச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ***"கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்"*** எனக் குறிப்பிட்டு ***பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்"*** என்னும் முகவரியிட்டு 15.12.2010ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும்.

26.11.2010 பொது முகாமையாளர்.




சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2176 திகதி 24-11-2010

ஆங்கில எழுத்திற்கும் F
வெற்றி எண்கள் 32 35 42 51
போனஸ் இல: 24

ஜக்பொட் பரிசு ரூ. 23,620,475/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 189921 | 20/- | 3,798,420/- |
| 2 இல | 13512 | 100/- | 1,351,200/- |
| 3 இல | 286 | 1,000/- | 286,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7590 | 40/- | 303,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 524 | 1,000/- | 524,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 19 | 10,000/- | 190,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 23,620,475/- | - |
| 1 இல + போனஸ் இல | 9002 | 100/- | 900,200/- |
| 2 இல + போனஸ் இல | 432 | 500/- | 216,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 363 | 200/- | 72,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | - | | 9,063,020/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 221678 | | 9,663,020/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 202534002-3-41 |
| மட்டக்களப்பு | 202534266-2-02 |
| திருகோணமலை | 202534148-3-31 |
| அம்பாந்தோட்டை | 202531339-7-36 |
| கம்பஹா | 202534364-7-44 |
| புத்தளம் | 202530726-9-02 |
| அநுராதபுரம் | 202536317-5-15 |
| கொழும்பு | 202536598-5-14 |
| கொழும்பு | 202536619-5-38 |
| நுவரேலியா | 202533113-4-40 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 24,138,300/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 27 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org